படைப்பு
ஊற்று-7 | நதி-3 | ஜுலை 2024 | திங்களிதழ்
ISSN: 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

## படைப்பு பெருமைமிகு விருதுகள் 2024









## படைப்பு இலக்கிய விருதுகள் 2024 முடிவுகள்

படைப்பு
தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-7 | நதி-2 | ஜுன் 2024

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர்:
**க.சோ.திருமாவளவன்**

நிருபர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**
**தீபிகா நடராஜன்**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு:
**ஆர்.பிரகாஷ்**

ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
**admin@padaippu.com**
***73388 97788 / 73388 47788***

நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர்
கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின்
கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு
மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** - ப. 04
- **படைப்பு இலக்கிய விருதுகள் 2024** - ப. 05
- **படைப்பு பெருமைமிகு விருதுகள் 2024** - ப. 12
- **விருதாளர்கள் குறித்த பகிர்வுகள்** - ப. 13
- **வானவில் வண்ண மின்னல்** - ஆதிரன் - ப. 35
- **காட்சி விரிப்பில் நகரும் காலத்தின் கைகள்** - கவிஜி - ப. 40
- **அணங்காய் ஒலித்த அறிவின் குரல்** - மானசீகன் - ப. 43
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை** - மு.முருகேஷ் - ப. 46

- **சிலப்பதிகாரத்தில் வரும் பேய், பூதங்களும், "கோத்தா டேய், லவ்டேகா பால்" என்று கோபத்தில் சொன்ன கணினியும்**
  – அமிர்தம் சூர்யா - ப. 53
- **டாக்டர் முத்துலட்சுமி அம்மையார்**
  – தி.கலையரசி - ப. 62


## சிறுகதை


- **தாயக்கட்டையும் வில்லுப்பாட்டும்**
  - ஆண்டன் பெனி - ப. 59


## கவிதை


- வேல்கண்ணன் - ப. 52





***Facilities***

- *Capacity 90 - 100 (Persons)*
- *AC Hall with Audio system*
- *POP with Profile lights*
- *Tea / Coffee snacks place*
- *Projector*

**படைப்பு அரங்கம்**
**# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,**
**கார்ப்பரேஷன் காலனி தெரு,**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024**

+91 73388 97788, 73388 47788

# தலையங்கம்

வணக்கம். படைப்பு ‘தகவு’ எழுபத்தைந்தாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

2023ஆம் ஆண்டில் வெளியான சிறந்த நூல்களுக்கான படைப்புக் குழும விருதுகள் இவ்இதழில் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு, சிறார் இலக்கியம் என்ற வகைமைகளில் தகுதியான இலக்கியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கீகாரங்கள் தரும் அடியுரங்களில்தான் கலைகள் செழித்து வளரும். தமிழின் சிறந்த படைப்புகளை அங்கீகரிப்பதில் படைப்புக் குழுமம் பெருமையுடன் செயல்பட்டுவருகிறது.

தமிழின் சிறந்த இலக்கிய ஆளுமைகளுக்கு அளிக்கப்படும் பெருமைமிகு விருதுகளுக்குரியவர்களின் தேர்வும் வெளியாகியிருக்கிறது. தமிழுக்குத் தொடர் தொண்டாற்றி வருபவர்களுக்கு உரிய மரியாதையை அளிக்க வேண்டியது தமிழர்களின் கடமை. அவ்வகையில் படைப்புக் குழுமம் வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது, படைப்புச் சுடர் விருது, இலக்கியச் சுடர் விருது பெறுவோர் குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன. விருதாளர்கள் குறித்துப் பிற படைப்பாளர்கள் மற்றும் வாசகர்களின் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இலக்கிய இசங்கள் குறித்த அமிர்தம் சூர்யாவின் கட்டுரைத் தொடர் இவ்இதழுடன் நிறைவுபெறுகிறது. நூலாக்க நோக்கத்துடன் நிறைவு பெறுவது மகிழ்ச்சியடைய வைக்கிறது. இத்தனை இலகுவாக, இத்தலைமுறைக்கு ஏற்றவாறு இசங்களைப் பற்றிய ஆழ்ந்த புரிதல்களை ஏற்படுத்திவிட முடியுமா என்று வியக்கும்வகையில் மாதந்தோறும் கட்டுரைகள் வெளிவந்தன. தமிழ்த் திறனாய்வு குறித்த நூல் வரிசையில் இந்நூல் ஒரு முக்கிய இடத்தைப் பெறும். பெறவேண்டும்.

களச்செயற்பாட்டாளர் பாலபாரதியின் சமூகம் சார்ந்ததான கவிமுகத்தைக் ‘கவிதைக்குள் கலந்திருக்கும் கதை’ வழியாக வெளிக்காட்டியுள்ளார் மு.முருகேஷ். சங்க இலக்கியங்களில் தோழி கதாபாத்திரத்தின் பங்கு அலாதியானது. எல்லாமுமாக நின்று எதையும் நிகழ்த்தும் அவர்கள் யார் என்ற தேடலின் விடையாக ‘நம் புலப் பெயல் நீர்’ பகுதி அமைந்துள்ளது. குலதெய்வங்கள் பற்றிய ஆராய்ச்சியை ‘வானவில் வண்ண மின்னல்’ பகுதியில் நிகழ்த்தத் தொடங்கியுள்ளார் ஆதிரன். வீரமங்கைகள் பகுதியில் டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் பணிகள் விவரிக்கப்பட்டுள்ளன. தி பியூட்டிஃபுல் கண்ட்ரி என்ற திரைப்படத்தின் அலசல் இடம்பெற்றுள்ளது.

கட்டுரைகள், கவிதை, சிறுகதை என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்... விவாதியுங்கள்... பகிருங்கள்.

நன்றி.

– ஆசிரியர்.

படைப்புக் குழுமம்




# படைப்பு இலக்கிய விருதுகள் 2024


படைப்பு - சமூகத்தின் இணைப்பு என்ற தாரக மந்திரத்துடன் பல்வேறு தளங்களிலும் ஓயாது இயங்கிவரும் படைப்புக் குழுமம் தன் உயிர் தாங்கும் அடித்தளமாகக் கொண்டிருப்பது இலக்கியத்தைத்தான். கலை மனதிற்குக் கைத்தட்டல்களும் பாராட்டுகளும்தான் உற்சாகமும் உத்வேகமும் ஊக்கமும் தரும் என்பதை உணர்ந்து சிறந்த இலக்கியப் படைப்புகளுக்குப் பரிசுகளும் விருதுகளும் அளித்து அங்கீகாரமளிப்பதைத் தன் தலையாய கடமையாகச் செய்துவருகிறது படைப்புக் குழுமம். வருடந்தோறும் மிகத் தகுதியான படைப்பாளர்களுக்கு இலக்கிய விருதுகள் அளித்து மகிழ்ந்துவரும் படைப்புக் குழுமத்தின் ‘படைப்பு இலக்கிய விருதுகள் 2024’ மகிழ்ச்சியுடன் இங்கு அறிவிக்கப்படுகின்றன. 2023ஆம் ஆண்டு வெளிவந்த சிறந்த நூல்களுக்காக இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

# கவிதை

## விருது பெற்ற நூல் : பெருந்தச்சன்

படைப்பாளர் : பாலைவன லாந்தர்

பதிப்பகம் : யாவரும் பப்ளிஷர்ஸ்




பாலைவன லாந்தரின் கவிதைகள் பெரும்பாலும் சமூக அநீதிக்கு எதிராகவும் உளவியல் கோட்பாடுகளைக் கடத்துவனவாகவும் உள்ளன. இவருடைய கவிதைகளின் மாயக் கட்டுமானங்களை உடைக்கும் பொறுப்பை வாசகர்களின் ரசனை மற்றும் கவனம் சார்ந்த பார்வைக்கு விட்டுவிடுகிறார். இதனால் ஒவ்வொரு கவிதையும் பல்வேறு பரிணாமத்திற்குள் சுழன்றுகொள்கிறது. இதுவே இவருடைய தனித்தன்மையாக அறியப்படுகிறது. அமைப்பிற்குள் இருந்து வெளியே ஒலிக்கும் குரல் என்பது சந்தைக்கு ஏதுவான குரல். சந்தையின் பிடிமானத்திலிருந்து அகந்தை விட்டுவிடாத அணுக்கமான குரல் லாந்தருடையது. இவரது கவிதைகள் நவீன மொழியிலும் நவீனக் கட்டமைப்பிலும் பழங்கதையை வாச்சியம் செய்யும் தொல்கலைஞனின் பாவனைகளோடும் அரசியல் ஒற்றுமையோடும் கூர் வடிவத்தில் சொல்லப்பட்ட கவிதைகள்.

சிறப்புப் பரிசு

# கவிதை

## நூல் : நீந்தும் அதிரூபங்கள்

படைப்பாளர் : பாரிசாகரன்

பதிப்பகம் : வேரல் புக்ஸ்



சமஸ்கிருதமும் தமிழும் முயங்கிய மணிப்பிரவாள நடை இந்தக் கவிதைகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுக்கிறது என்று கூட சொல்லலாம். அர்த்தத்திற்குச் சிரமப்படாமல் சில கவிதைகளை மொழியின் இசை போலவும் வாசித்துவிடலாம். நகரும் காலங்கள், நிகழும் சம்பவங்கள், சொற்கூட்டத்தில் பிடிபடும் ஒரு சிறு பறவை, கூடுமுனைந்து அதில் வைக்கும் சேமிப்பு எனப் பாரிசாகரன் இந்த மொழியைக் கண்டறிந்திருக்கிறார். மொழியைக் காட்சிக்குள்ளும் காட்சியை மொழியின் மடிப்பினுள்ளும் வைத்திருக்கும் இதில் பாரிசாகரன் எங்கோ தனித்தும் எங்கோ பொதுவிலும் இருக்கிறார்.

யவனிகா ஸ்ரீராம்

# கட்டுரை




## விருது பெற்ற நூல் : காலமே போதி மரம்

படைப்பாளர் : என். குமார்

பதிப்பகம் : அகநி வெளியீடு

இதைக் கட்டுரை என்று சொல்லலாம், நினைவுப் பதிவு எனலாம், கலை வழியே ஞானம் எனலாம், மனத்தேடல் எனலாம். பெயர் முக்கியமற்று, பயணத்தில் பார்த்துச் சிரிக்கும் பூவைப்போல் இந்த எழுத்து நம்மை உள்ளிழுக்கிறது. புனைவுகளும் நிஜங்களும் ஒட்டி உறவாடி வாசக இதயங்களை வருடும். காலமே போதிமரம் தொகுப்பில் நீங்கள் ரசித்துக்கொள்ள உங்களை உங்களுக்கே ஏதோ ஒரு வகையில் நினைவுபடுத்திக்கொள்ள நிறைய இருக்கிறது. அதற்குக் காலமே சாட்சியாக நிற்கும். காலம்தான் நமக்குப் போதிமரம்.

பாக்கியம் சங்கர்

சிறப்புப் பரிசு

# கட்டுரை




## நூல் : சொற்கள் மிதக்கும் வானம்

படைப்பாளர் : நிவேதிதா சுரேஷ்வரன்

பதிப்பகம் : வேரல் புக்ஸ்

எப்போதும் சிரித்துக்கொண்டே இருக்கும் இவளது வாழ்வு இவ்வளவு துன்பங்கள் நிறைந்ததா என்று, வாசிக்கும்போது உண்மையாகவே ஒரு நாவல் வாசித்ததைப் போல அவ்வளவு கஷ்டமாக இருந்தது. புத்தகம் எழுதுவதில் புதிய முயற்சி என்பதினால் சில குறைகள் விமர்சனங்கள் உண்டு. ஆனாலும் இது கடந்து போக முடியாத பிரதியாக நிச்சயம் இருக்கும். வாழ்வின் ஒவ்வொரு அத்தியாயமும் பெரும்பாலும் யார் யாரோக்களுக்காக இருந்து, பின் நமக்கு நெருக்கமாகிப்போகிறவர்களால்தான் நிரப்பப்படுகிறது. வாழ்வின் விசித்திரமான விளையாட்டு அது என்ற நிவேதிதாவின் ஒப்புதல் நிதர்சனமானது.

அ.கரீம்

# நாவல்




## விருது பெற்ற நூல் : வாரணம்


படைப்பாளர் : ராம் தங்கம்

பதிப்பகம் : வம்சி புக்ஸ்

வாரணம் என்றால் யானை என்றொரு பொருளுண்டு. யானை என்றால் பிரம்மாண்டம், காடென்றால் பிரம்மாண்டம். அதுபோல இந்த நூல் வாரணமும் காட்டின் பிரம்மாண்டத்தை எதிரொலிக்கிறது! சிறுவர்களுக்குக் கதை சொல்லுவதைப் போல இவர் கடந்த கால வரலாற்று நிகழ்வுகளையும், பெயர்க் காரணங்களையும் சொல்லியிருக்கிறார். மலைப் பயணத்தின்போது மலைக்காட்டினைப் பிரம்மாண்டமாகவும், வரலாற்றைக் கூறும்போது சமூக நீதியையும் சொல்லிக்கொண்டு வருகிறார். இயற்கை சார்ந்த தன்னுடைய ஆதங்கங்களையும் கூறுகிறார்.

சிறப்புப் பரிசு

# நாவல்




## நூல் : பற் சக்கரம்

படைப்பாளர் : எஸ்.தேவி

பதிப்பகம் : எழுத்து பிரசுரம்

சூரியன், சந்திரன், பூமி எல்லாமே சக்கரம்தான். எல்லாமே எந்திரங்கள்! மனிதர்களும் எந்திரங்கள்! பெரும் முதலாளிகள் சின்னச் சின்ன பற்சக்கரங்கள்தான். அது எவ்வளவு பெரிய சமுதாயத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. எவ்வளவு உழைப்பைப் பிழிந்துகொண்டிருக்கிறது. ஒரு சில மனிதர்களின் சுயலாபத்திற்காகப் பல்லாயிரம் மனிதர்கள் எந்திரங்களாகிச் சுழல்கிறார்கள். அதில் ஒரு துளி இந்தக் கதை.

சிறப்புப் பரிசு

# நாவல்




## நூல் : ஒரக்குழி

படைப்பாளர் : வானவன்

பதிப்பகம் : எழுத்து பிரசுரம்

விவசாய வேலைகளுக்குப் பயந்து நகரத்திற்கு ஓடி வரும் ஒருவன் ஆரோக்கியத்தை இழந்து உடல்நலம் பாதிக்கப்பட்டு அதற்கான காரணம், நாம் இழந்த இயற்கை விவசாயமும் மரபு பழக்கவழக்கங்களும்தான் என்பதை உணர்ந்து மீண்டும் மரபு விவசாயம் செய்யலாம் என்று கிராமத்துக்குச் செல்லும்போது அவனை ஏற்காத கிராமம் கிண்டலும் கேலியும் செய்கிறது. அவன் முன் இரண்டு சவால்கள். இயற்கை விவசாயத்தில் சாதிக்க வேண்டும், அதனை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கு அவன் எடுக்கும் முயற்சிகள், எதிர்கொள்ளும் சவால்கள், கிடைக்கும் வெற்றி – அதுவே இந்த ஒரக்குழி நாவல்.

# சிறார் இலக்கியம்




## விருது பெற்ற நூல் : சரசுவதிக்கு என்ன ஆச்சு?

படைப்பாளர் : சி.சரிதா ஜோ

பதிப்பகம் : பாரதி புத்தகாலயம்

பெரும்பாலும் பொதுவெளியில் யாரும் பேசத் தயங்கும், கூச்சப்படும் விஷயங்களை மிகவும் யதார்த்தமாக ‘சரசுவதிக்கு என்ன ஆச்சு?’ என்ற இந்தப் புத்தகத்தில் ஒரு கதையாக எழுத்தாளர் சி.சரிதா ஜோ எழுதியிருக்கிறார். குழந்தைகளின் கல்வியில் அக்கறை காட்டும் எத்தனை பெற்றோர் குழந்தைகளின் பள்ளியில் இருக்கும் கழிவறை சரியாக இருக்கிறதா? குழந்தைகள் சரிவர இயற்கை உபாதைகளைக் கழித்திருக்கிறார்களா? என்று கேட்டிருக்கிறோம் என்று கேட்டால் கேள்விக்குறியே என்று என்னுரையில் குறிப்பது போலவே பிரச்சனைகளின் ஆழத்தை மிகத் தீவிரமாகக் கதையில் சொல்லிச் செல்கிறார்.

அமுதன் தேவேந்திரன்

# சிறுகதை

## விருது பெற்ற நூல் : ஆகாத தீதார்

படைப்பாளர் : ஆமினா முஹம்மத்
பதிப்பகம் : கேலக்சி பதிப்பகம்




மரண வீட்டில் நிகழும் உள்ளார்ந்த உளவியலை உணர்வு நிலையை அப்பட்டமாய் உடைத்துப் பேசுகிற படைப்பு எவ்வளவு வீரியமாக இருக்கும் என்பதற்கு இக்கதைகளே சான்று. துக்க வீட்டில் உதிர்க்கப்படும் கண்ணீர் இறந்தவருக்கான கண்ணீர் மட்டுமல்ல. அதன் பின்புலத்தில் சொல்லப்படாத சொல்லவே முடியாத ஆயிரம் காரணங்களை அவை சுமந்து நிற்கின்றன. ஒவ்வொரு துளி கண்ணீருக்கும் பின்னுள்ள கணக்கு வழக்குகள், வலிகள், ஏமாற்றங்கள், வன்மங்கள், துரோகங்கள், போலிப் பெருமிதங்கள் போன்றவற்றையெல்லாம் ததும்பத் ததும்பப் பேசுகிறது.

தோழர், எழுத்தாளர் சம்சுதீன் ஹீரா

சிறப்புப் பரிசு

# சிறுகதை

## நூல் : தீர்மானம்

படைப்பாளர் : ரிஸ்வான் ராஜா
பதிப்பகம் : டிஸ்கவரி புக் பேலஸ்




தீர்மானம் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற ஒவ்வொரு சிறுகதையும் இன்றைய வாழ்க்கையோடும், சமூகத்தில் ஏற்படும் பாதிப்போடும் ஒப்பிடும் வகையில் இருக்கிறது. புறத்தோற்ற அளவீடு, மூன்றாம் பாலினத்திடம் சமமின்மை, பெற்றோரின் தனிமை, ஏழ்மை, வேலைப்பளு மற்றும் பொருளாதாரச் சூழல், இயற்கையோடு ஒன்றி வாழ்தல், சுயநலத்திற்காகப் பிறரைக் காயப்படுத்துவது, வன்கொடுமைகள், பிறரிடம் அன்பு காட்டுதல் என இவை அனைத்தையும் மேலும் ஒருமுறை நம் கண்முன்னே நிறுத்திச் சிந்திக்க வைக்கின்றன.

## மொழிபெயர்ப்பு




### விருது பெற்ற நூல் : முறிநாவு

மொழிபெயர்ப்பாளர் : கே.வி.ஜெயஸ்ரீ
பதிப்பகம்: வம்சி புக்ஸ்

இதில் 8 முதல் 12ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தையும் இடத்தையும் சமூகத்தையும் தத்துவங்களையும் அவர் சொல்லிச் செல்கிறார். சைவ வைணவ சமண பௌத்த ஆசிவக சமயங்களின் மீதான அவரின் ஆழ்ந்த பார்வை வெகு ஆழமான நாவலாக விரிகிறது. என்னை எந்தக் காலத்தில் இருந்தும் என்னால் கண்டடைய முடியும், உங்களையும். கதையில் வந்து போனவர்கள் எல்லாம் என்னுடனும் இருக்கிறார்கள். முறிந்த நாவிலிருந்து வரும் சொற்கள் அவர்களை மட்டும் அல்ல, என்னையும் சுழற்றுகின்றன.

சிறப்புப் பரிசு

## மொழிபெயர்ப்பு




### நூல் : கொரிய நாட்டுப்புறக் கதைகள்

மொழிபெயர்ப்பாளர் : பல்லவிகுமார்
பதிப்பகம் : தமிழ்ப்பல்லவி வெளியீடு

இத்தகைய வாய்மொழிக் கதைகளை உலகம் முழுக்க நாட்டுப்புறவியலாளர்கள் எழுத்து வடிவில் ஆவணப்படுத்தத் தொடங்கியுள்ளனர். ஒவ்வொரு பண்பாட்டிலும் மாற்றம் நிகழ்ந்துவரும் இன்றைய சூழலில் இத்தகைய ஆவணங்கள் எதிர்கால ஆய்வுக்குத் தேவைப்படுவனவாகும். இதில் உள்ள கதைகளைப் படிக்கும்போது கதாபாத்திரங்களின் பெயர்களைத் தமிழில் மாற்றி இருந்தால் இதனைப் படிப்பவர்கள் இது தமிழக நாட்டுப்புறக் கதை என்று கருதுவார்கள். அந்த அளவிற்குத் தமிழ்ப் பண்பாட்டுக்கு நெருக்கமாக அமைந்துள்ளன.

முனைவர் இரத்தின புகழேந்தி

# படைப்பு பெருமைமிகு விருதுகள் 2024

படைப்புக் குழுமம் கடந்த ஒன்பது ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும் படைப்பாளர்களுக்கு அவர்களது இலக்கிய ஆளுமையைப் போற்றும் வகையில் விருது வழங்கிச் சிறப்பித்துவருகிறது. அவ்வாறு இந்த ஆண்டு விருது பெறும் இலக்கிய ஆளுமைகள்:

**வாழ்நாள் சாதனையாளர் விருது**

**கவிஞர் கலாப்ரியா**

**படைப்புச் சுடர் விருது**

**கவிஞர் மனுஷ்யபுத்திரன்**

**மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர் குறிஞ்சி வேலன்**

**இலக்கியச் சுடர் விருது**

**மொழிபெயர்ப்பாளர் ஷைலஜா ரவீந்திரன்**

**எழுத்தாளர் முகில்**

2024, செப்டம்பர் மாதம் 28ஆம் தேதி சென்னை சர்.பிட்டி. தியாகராயர் அரங்கில் நடக்கும் படைப்பு சங்கமம் விழாவில் இவ்விருதுகளை அளித்துச் சிறப்பு செய்ய இருக்கிறது படைப்புக் குழுமம்.

# படைப்புக் குழுமத்தின் பெருமைமிகு விருதுகள் – 2024






## படைப்புக் குழுமத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் படைப்பாளர் கலாப்ரியா குறித்த பகிர்வுகள்

**சா. தேவதாஸ்**
எழுத்தாளர், சாகித்ய அகாதமி விருதாளர்

75 வயதை நெருங்கும் கலாப்ரியா 50 ஆண்டுகாலக் கவிதை உரைநடைப் பயணத்தில் சிறந்த குறுங்காவியங்களையும் நாவல் சிறுகதை உள்ளிட்ட உரைநடைப் பனுவல்களையும் எழுதியுள்ளவர். 1970களில் தீவிரமான காதல் வேட்கை, அரசியல் எழுச்சி, படிப்புடன் தங்கள் பங்களிப்பை “எட்டயபுரம்” மூலம் அறிமுகப்படுத்தியவர்.

“பதிவுகள்” என்ற தலைப்பில் குற்றாலத்தில் இவர் நடத்திவந்த விவாதக் கூட்டங்கள் தமிழ் இலக்கியச் சூழலிற்கு வித்தாக அமைந்தன.

“சூர்ய பிரவாகத்தை
வாழ்ந்து பாரேன்”

என்னும் அவரது வரிகளைப் போன்றே தார்மீகக் கோபத்துடன் இயங்கியவர். புதுமைப்பித்தன் பார்வையை உள்வாங்கி, கவிதை, நாவல், அபுனைவெனக் கணிசமாகப் பங்களித்துள்ளார்.

நான்கு வயது தொட்டு இக்கணம் வரையிலும் நடந்த நிகழ்வுகளை / அனுபவங்களை அவர் பதிந்துள்ள ஆவணம் நினைவின் தாழ்வாரங்கள்.

வண்ணநிலவன், வண்ணதாசன் ஆகியோருடன் சேர்ந்து திருநெல்வேலி மூவராக அமர்ந்திருப்பவர். பொருநை நாகரிகத்தைக் கைப்பற்றி, எழுத்தில் ஓடவிட்டவர்.

சோமசுந்தரம் என்ற இயற்பெயர் பெற்றுக் குடும்பத்திலும் நண்பர்கள் மத்தியிலும் “கோபால்” என வழங்கப்பெற்று, “கலாப்ரியா”வாக இலக்கிய உலகில் அறியப்படுகிறார்.

“புயல் போல, காட்டுத்தீ போல, மழைக்கால வெள்ளம் போல, பூமி அதிர்ச்சி போல மனத்தடை உதிர்த்த கவிதைகளை” அளித்துள்ள கலாப்ரியா திராவிட மரபில் ஒரு பேரலையாக இருப்பார்.

•

## ச.தமிழ்ச்செல்வன்

எழுத்தாளர்

கலாப்ரியா கீழ் மத்தியதர வர்க்கத்தின் இயலாமைகளையும் இல்லாமைகளையும் விரக்திகளையும் சந்தோசங்களையும் சின்னதான கோபங்களையும் யதார்த்தமாகக் கலையாக்கிய படைப்பாளி.

அன்பு மிதித்தெழும்
கோபம்.
ராகம் மிதித்தெழும்
ஆலாபனை.
யதார்த்தம் மிதித்தெழும்
படிமம்.

ஒழுங்குகள், சட்டங்கள், புனிதங்கள் மிதித்தெழுந்த கவிதைகளாகக் கலாப்ரியாவின் எழுத்து. ஜெயமோகன் கணித்ததுபோல அவர் ஒரு லௌகீகக் கவிதான். ஆகவே எமக்கு மிக நெருக்கமான ஒரு கவியாகிறார். நான் தொடர்ந்து கவிதைகளைப் பின்தொடராமல் போனதன் விளைவாகக் கலாப்ரியாவைக்கூடச் சரியாக சரியான நேரத்தில் பார்க்காமல் விட்டுவிட்டேன். பெயர்ப்பலகையைச் சரியாக வாசிக்காமல் என் சொந்த ஊருக்கான பஸ்ஸை, கடந்து போவது தெரிந்தே தவறவிட்ட பயணியைப் போல நான் கலாப்ரியாவைத் தவறவிட்டிருக்கிறேன்.

சாப்பாடில்லாத பிள்ளைகள்
புழுதிக் காலுடன்
அடுப்பெரிகிறதை
வந்து வந்து பார்த்து
விளையாடப்போகும்,
பசியை வாசல்படியிலேயே
விட்டுவிட்டு.

வாசல்படியில் பசியைக் காவலுக்கு வைத்துவிட்டுச் செல்லும் குழந்தைகள் என்கிற காட்சிப்படிமம் மனதை உலுக்குவதாக இருக்கிறது. பசியை விதவிதமாகப் பாடிய கவிஞனாக நான் அவரைப் பார்க்கிறேன்.

ஜெயிலுக்குப் பொறத்தால
நடக்கும் கல்யாணங்களில்
தோட்ட வேலைக்கைதிகள்
மாத்திரம்
வேலியருகே வந்து
இட்லியக் கெஞ்சி வாங்கி
மறைச்சபடி
உள்ளே ஓடற ஓட்டத்தை
யாரால்
செமிக்க முடியும்

என்று மனதால் சீரணிக்க முடியாத காட்சிகளை நம் முன் தூக்கிப் போட்டுக் கேள்வி கேட்கிறார்.

பிள்ளைகளின் பசியடக்க
புதிய வசவுகள் தேடி
மூலையடைவாள், அம்மை.
பீடிகள் தேடிச்சலித்து,
யூனிபாரத்தைத் தேடச்சொல்லி
அன்பாய்க் கூப்பிடுவான்
‘ஒரே மாதிரி’ வசவுகளில்
அழவும் மரத்துப்போன
பிள்ளைகளை
அப்பன்.

கலாப்ரியாவைப் பலரும் பல கோணங்களில் பார்த்துவிட்டார்கள். எல்லாப் பார்வைகளுக்கும் இடம் இருக்கிறது அவர் எழுத்தில். ஆனாலும் பசியையும் இல்லாமையையும் ஏக்கங்களையும் நிராசைகளையும் பூச்சின்றி அசலான மக்கள் மொழியில் பாடிய கவிஞன் என்கிற அடையாளத்தை அவருடைய கவிதைகள் அழுத்தமாகப் பெற்றிருக்கின்றன என்று உரக்கக் கூற விரும்புகிறேன். தத்துவத்

தளத்துக்கோ சூனிய வெளிக்கோ ஆழ்மனச் சிடுக்குகளுக்கோ எடுத்துச்செல்லாமல் பசியைப் பசியாகவும் காதலைக் காதலாகவும் காமத்தைக் காமமாகவுமே பாடிய கவிஞன். ஒரு பொருள்முதல்வாதக் கவி.

●

## உதயசங்கர்

**எழுத்தாளர், சாகித்ய அகாதமி விருதாளர்**

தமிழ்க்கவிதையின் பேறு கவிஞர் கலாப்ரியா.

தமிழ்க் கவிதையுலகின் மிக முக்கியமான கவிஞரான கலாப்ரியா பல தலைமுறைக் கவிஞர்களைத் தன் கவிதைகளால் பாதித்திருக்கிறார் என்றால் மிகையில்லை. அவருடைய கவிதைகளுக்குள் ஒரு கதை இருக்கும். காட்சிச் சித்திரங்களின் வழியே நம் வாழ்வின் யதார்த்தத்தை வலிமையாகச் சொல்வதில் கலாப்ரியாவுக்கு ஈடு இணை கிடையாது எனலாம்.

கவிதை என்றால் தனிமையில் உட்கார்ந்துகொண்டு ஆழ்ந்த மோனத்தில் மூழ்கிக் கற்பனை உலகத்திலிருந்து காவியமாகச் சொற்களைத் தேர்ந்தெடுத்து அழகான மாலையாகத் தொடுத்துக் கொடுப்பதல்ல. மிகச் சாதாரணமான நம் அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் கவித்துவமான தருணங்களைக் கண்டுகொள்ளும் கவி மனம் வேண்டும். கவி மனம் என்றால் வேறொன்றுமில்லை. குழந்தையின் மனம் வேண்டும் அல்லது பைத்தியக்கார மனம் வேண்டும். அந்த மனம்தான் கவிஞர்களின் மனம். அந்தச் சாதாரணச் சம்பவங்களின் கவித்துவமான தருணங்களைத் தன் மொழியால் கவிதையாக்கி அசாதாரணமான ஒரு உண்மையை, ஒரு உணர்வை, ஒரு அழகை, ஒரு அநுபவத்தைத் தருகிற கவிஞர், கலாப்ரியா. கலாப்ரியாவின் கவிதைகளில் தினசரி சம்பவங்களே கவிதை உருக்கொள்கின்றன என்றாலும் அது வாசித்ததும் மறந்துபோகும் செய்தியாக இல்லை. அன்றாட சம்பவங்களிலிருந்து ஒரு ஆச்சரியத்தை, ஒரு அழகைக் கண்டுபிடிக்கிறார் கவிஞர் கலாப்ரியா. வாழ்வின் ஆனந்தத்தையும் அழகையும் அற்புதத்தையும் நகை முரணையும் துயரத்தையும் நம் மனம் விம்மச் சொல்வதில் கலாப்ரியா தனித்துவமாக மிளிர்கிறார்.

தமிழ்க்கவிதையின் பேறு கவிஞர் கலாப்ரியா.

●

## ஷக்தி

**எழுத்தாளர், சாகித்ய அகாதமி யுவபுரஸ்கார் விருதாளர்**

கலாப்ரியா தன் வாழ்வைக் கவிதையாக எண்ணி வாழ்கிற தனித்துவம் கொண்ட கவிஞன். புதுக்கவிதை வாசக மனங்களின் வாய்ப்பிற்கு அவர்களின் வாழ்நிலை நகர்வுகளில் ஒருங்கிணைந்த லயம் போல் அவரது கவிதை வடிவமும் அழகானது, அவரது கவிதை மொழியில் அந்த அமைப்பாக்கம் இயல்பாகவே அமைந்திருந்தது. ஒரு தேர்ந்த கவிஞனின் கவிமொழியில் எதன் பின்னணி கொண்டு விளக்கப்பட்டிருக்க வேண்டும் எனும் வினாக்கள் துளிர்விடும் பிராயத்தில், கவிதை குறித்துப் புரிதலும், செயல்பாடுகளும் பச்சையம் பூசிக்கொள்கின்றன. அத்தகைய செயல்பாடுகளை அதன் மீது பரிபூரண ஆவலைக் கொண்டுவந்து தந்தவை கலாப்ரியா கவிதைகள்.

அவரது கவிதையின் குரலும் வாசகனின் குரலும் இணைந்தே பயணிக்கும் வரம் பெற்றவை. நாம் தவறவிட்ட பல பருவங்களின் நுண்மைப் பகுதிகளை அழகாகத் தன் கவிதைகளில் காட்டியவர். கிளர்ந்தெழும் நினைவுகளின் அடுக்குகளில் அவர் கவிதைகள் உணர்வுப்பூர்வமானவை. சொல்லாடல்கள் அவ்வளவு எளிமையானவை. அதே மென்மையுடன் அவர் ஐம்பதாண்டு காலம் தன் கவிதைவழி காட்டும் உலகு முடிவிலியற்றது. அந்தக் கவிதைகளும் வியப்பும் இக்காலத்தில் அபூர்வமாய் வாய்க்கும் பரிபூரணமான நம்பிக்கை.

●

## மதுமிதா

எழுத்தாளர்

அன்பும் நீர்மையும் ததும்பிப் பொலியும் மனிதர் கவிஞர் எழுத்தாளர் கலாப்ரியா.

‘நாளை இந்தக் குளத்தில் நீர் வந்துவிடும்’ என்று ஆரம்பிக்கும் ‘பிரிவுகள்’ கவிதை வரிகள் அளிக்கும் படிமங்கள், அந்த யதார்த்தத்தை இளம் வயதில் உள்வாங்கிக்கொண்டவர்களால் மட்டுமல்லாது வாசிப்பவர்களையும் இழப்பின் வலிகளை உணரச் செய்யும். இனி அடுத்த தலைமுறையில் இப்படி இருப்பார்களா? அந்த அளவுக்கான தண்ணீர் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதா?

அவரின் மனதில் ததும்பி எழும்பிவரும், ப்ரிய சகி ‘சசி’ யின் நினைவுகள், அவருடைய கவிதைகளில் அன்புடன் பிரதிபலிப்பது மட்டுமல்ல, நம் மனதையும் சற்றே அசைத்துப் பார்க்கும் நீர்மை பொருந்தியது. அத்தனை வெளிப்படையான சத்தியமான எழுத்து அவருடையது. சசியைப் போல, நகுலனின் சுசிலா போல, அதற்குப் பிறகு வந்த கவிஞர்கள் ஒரு பெயரை வைத்து எழுதும் அளவுக்கு மன எழுச்சியை அளித்தது.

அவரின் பால்ய காலத்தில், கோடையில் நீர் வற்றிய குளங்களில், அணையைத் திறந்ததால் கல்லணை வாய்க்காலைத் தாண்டி ஓடிவரும் நீர், அரசரடிப் பால வாய்க்காலைத் தாண்டி நயினார் குளம் வரை வரும் அழகு, அது இழுத்துக்கொண்டு வரும் பொருட்களைப் பார்க்கக் கூடி இருக்கும் குழந்தைகள், மக்கள், படித்துறையைச் சிலாகிப்பவர்கள் என இவர் தன் கட்டுரையில் பதிவு செய்த அழகு அவ்வளவு சிறப்பானதாக இருக்கும்.

தாமிரபரணியும் வட்டப்பாறை படித்துறையும் திருநெல்வேலியும் திரையரங்கத் திரைப்படங்களும், கோயில்களும், மனிதர்களின் உணர்வுகளும் ஒரு காலக்கட்டத்தின் காட்சிச் சித்திரங்களாக விரியும். ‘நினைவின் தாழ்வாரங்கள்’ அந்தக் காலக்கட்டத்தின் ஆவணமாகவே அமைந்தது. குடும்பத்தின் நிலை, உறவுகள், நண்பர்கள், சமுதாயம் என உண்மையின் வலியின் பதிவாக அமைந்தது.

‘தண்ணீர் நீரலைகளும் நினைவலைகளும்’ தொகுப்பு நூலுக்கு, கலாப்ரியா எழுதிய ‘தண்ணீர்ப் பிசாசு’ கட்டுரையில் இருக்கும் சுத்தமல்லி அணைக்கட்டு, வேய்ந்தான் குளம், தாமரைக்குளம் காட்சிச் சித்திரம் கடந்து, நீர் தங்கும் இடங்கள் பேருந்து நிலையம் ஆவதும், மனித மனங்களில் தண்ணீரின் இழப்பின் வலியை சின்ன உரையாடலில் அளித்த விதமும், கனகச்சிதம்.

சமூக அக்கறையினைக் கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் எழுத்தில் அளிப்பதும், அவை அந்த அந்தக் காலக்கட்டத்தைப் பிரதிபலிக்கும் பதிவாகவும் இருப்பதும் இவரை, அன்பும் நீர்மையும் ததும்பிப் பொலியும் மனிதராகவே தமிழ் இலக்கியத்தில் திகழச் செய்கிறது என்பதை ஒவ்வொரு முறையும் உணர முடிகிறது.

●

## நாறும்பூநாதன்

எழுத்தாளர்

குற்றாலச் சாரலாய்...

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது, கையெழுத்து இதழ் ஒன்றை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில், “சசி” வழியாக எங்களுக்கு அறிமுகமானவர் கவிஞர் கலாப்ரியா.

துவக்கம் முதலே குழப்பம் ஏதுமின்றி ஆண் கவிஞராகவே அறியப்பட்டவர்.

கவிதைகளில் படிமங்கள் அதிகமின்றி, காட்சி ரூபத்தில் உணர்வுகளைக் கடத்துவதில் வெற்றி பெற்றவர் கலாப்ரியா.

எப்போதோ படித்த,

“கொலு வைத்த வீடுகளில்
ஒரு குத்து சுண்டல்
கூடுதலாய்க் கிடைக்கும் என



தங்கையைத் தூக்கி வரும்
அக்கா குழந்தை”

கவிதை எல்லா நவராத்திரி பண்டிகையிலும் நினைவிற்கு வருகிறது.

சீசன் நேரத்தில் அவர் குற்றாலத்தில் கவிதைப் பட்டறை நடத்தும்போதெல்லாம் கலந்துகொள்ள ஆசைப்பட்டதுண்டு.

சுந்தரராமசாமி, நகுலன், பிரம்மராஜன் போன்ற ஆளுமைகள் எல்லாம் கலந்துகொண்ட நிகழ்வுகள் அவை. ஏனோ சந்தர்ப்பம் வாய்க்காமலே போய்விட்டது. வாய்த்திருந்தால், கவிதாதேவியின் பார்வை நம் மேல் விழுந்திருக்குமோ என்னவோ. சிறுகதை எங்களை இழுத்துக்கொண்டு போய்விட்டது.

பின்னாட்களில், கவிஞர்கள் தேவதச்சன், கௌரிஷங்கர், அப்பாஸ், வித்யாஷங்கர் போன்றவர்கள் கலாப்ரியாவின் கவிதைகள் குறித்துக் காந்தி மைதானத்தில் விவாதித்தபோது, உடன் இருந்து கவனித்திருக்கிறேன்.

நெல்லைக்கு வந்தபின்பே, கலாப்ரியா நேரடி அறிமுகம். கல்யாண்ஜியோடு அவர் உரையாடிக்கொண்டிருக்கையில், பூமா ஈஸ்வரமூர்த்தி அறிமுகம் செய்துவைத்த நினைவு. முதல்முறை பழகும்போதே, நீண்ட நாள் பழகியதைப்போல அவரது பேச்சு, இயல்பாகவும் நெருக்கமாகவும் இருந்தது.

கவிதைகளைத் தொடர்ந்து அவரது “உருள்பெருந்தேர்” மற்றும் “தாழ்வாரத்து நினைவுகள்” படிக்க சுவாரசியமாக இருந்தன.

வாழ்ந்து கெட்ட குடும்பங்கள் திருநெல்வேலியில் ரொம்பவே உண்டு.

அதைப்பற்றி வண்ணநிலவன் எழுதியுள்ளார். வேனல் நாவலிலும் கலாப்ரியா குறிப்பிடத்தக்க வகையில் பதிவு செய்துள்ளார்.கடந்த 55 ஆண்டுகாலப் பங்களிப்பிற்கு எப்போதோ சாகித்ய அகாதமி விருது அவருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

விளக்கு விருது, சுந்தரனார் விருது வரிசையில், தற்போது படைப்பு குழுமத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டிருப்பது மன நிறைவை அளிக்கிறது.

# படைப்புக் குழுமத்தின்
# பெருமைமிகு விருதுகள் – 2024






## படைப்புக் குழுமத்தின் படைப்புச் சுடர் விருது பெறும் கவிஞர் மனுஷ்யபுத்திரன் குறித்த பகிர்வுகள்


**பா. ராகவன்**

எழுத்தாளர்


### மாபெரும் களவாணி

நவீன உலகில் மூன்று காரணங்களால் ஒரு மனிதன், தவிர்க்கவே முடியாதவன் என்பது புரியத் தொடங்கும்.

1. வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் மக்கள் தன்னை நினைவுகூர எதையாவது அவன் தூவிக்கொண்டே செல்லும்போது.
2. அவன் தனது தரத்தில் சமரசம் செய்துகொள்ளாமலேயே ஒரு FMCG ஆகவும் (Fast Moving Consumer Good) உருமாறும்போது.
3. அவனை ஒரு பொதுச் சொத்தாகக் கருதி, வேண்டியபோதெல்லாம் சமூகம் சேதப்படுத்தும்போது.

கவிஞன், எழுத்தாளன், கலைஞன் என்றில்லை. எல்லாத் துறைகளிலும் இதுதான். எப்போதும் இதுதான்.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில் மனுஷ்யபுத்திரன் மிகத் தீவிரமாக எழுதத் தொடங்கியபோது அக்காலக்கட்டம் அவரைத் தனது வாழ்வின் நிலைக்கண்ணாடி என்று சொன்னது. இளைஞர்களும் முதியவர்களும் அவரைக் கொண்டாடினார்கள்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு இன்னொரு தலைமுறை வாசிக்க வந்தபோதும் அவர் அந்த இடத்திலேயேதான் இருந்தார். இப்போது முதியவர்கள் ஓய்வு பெறத் தொடங்கியிருந்தார்கள். இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்திருந்தது.

அதற்கும் பிறகு இரு பத்தாண்டுகள் முடிந்துவிட்டிருக்கும் காலத்தில் இன்று

நாம் இருக்கிறோம். இளைஞர்களோடு, சிறுவர் சிறுமியரும் அவரைப் படித்துக் கொண்டாடுகிறார்கள். புத்தக விழாக்கள், சமூக ஊடகங்கள், கல்லூரி மேடைகள், தேநீர்க் கடைகள், சலூன்கள், சமையலறைகள், அரசியல் மேடைகள், காதலர் பூங்காக்கள், மண மேடைகள், மரண வீடுகளில்கூட ஏதோ ஒரு மூலையில் நினைவின் மிகச் சிறு படிகளில் அவர் தட்டுப்படாதிருப்பதில்லை. ஒரு புன்னகை அல்லது ஒரு சொட்டுக் கண்ணீருக்கு ஒவ்வொரு நாளும் அவர் காரணமாகாமல் இருப்பதில்லை.

செத்தபின் சிலை வைப்பது ஒன்றே தமிழர் மரபு. நானறிந்து வரலாற்றில் முதல் முறையாக ஒரு கலைஞன் இங்கே வாழும்போதே கொண்டாடப்படுகிறான். அவனது ஒவ்வொரு கவிதையும் தங்கள் வாழ்வில் இருந்து ரகசியமாகக் களவு போன பொருளாக இருப்பதாக இத்தலைமுறையே சொல்கிறது. அவ்வகையில் ஒரு மாபெரும் களவாணியைத் தூக்கிவைத்துக் கொண்டாட நூதனமானதொரு காரணத்தைக் கொடுத்து விடுகிறார்கள். அவரது சம காலத்தில் எழுத வந்தவன், நண்பன் என்ற முறையில் விழிப்புணர்வுடன் இதனைக் கவனிக்கிறேன். மகிழ்ச்சியாக இருக்கிறது.

முதலமைச்சரில் தொடங்கி, முகமறியாத லட்சக்கணக்கான ரசிகர்கள் வரை யாருடன் மனுஷ் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை வேண்டுமானாலும் பாருங்கள். அருகில் இருப்பவரின் இடுப்பளவு உயரத்தில்தான் அவர் இருப்பார். ஆனால் ஒருமுறைகூடத் தன்னைக் குனிந்து பார்க்கும் சந்தர்ப்பத்தை அவர் அளித்ததில்லை. சக்கர நாற்காலியில் தன்னையும் புஷ்பக விமானத்தில் தன் எழுத்தையும் நிரந்தரமாக அமரச் செய்திருப்பவர்.

எழுத்துலகில் நாற்பது வருடங்கள் என்பது ஒன்றுமேயில்லை. இன்னும் நூறு வருடங்களுக்குப் பிறகும் அன்றைய இளைய தலைமுறை அவரைத் தங்கள் பிரதிநிதியாகத்தான் முன்னிறுத்துவார்கள்.

கோலம் போடும் பெண்களும்
ஒரே ஒரு கவிஞனும்
விழித்திருக்கும் அதிகாலை

என் சொற்களின் மீதும்
கொஞ்சம் வண்ணப் பொடியை –
படிமங்களை மறைக்காமல் தூவினால் நல்லது

அவர் எழுதியதுதான். உண்மை என்னவென்றால், கோலம் போடும் பெண்கள் தூவுவதற்கு வைத்திருப்பதே அவரைத்தான். நண்பருக்கு வாழ்த்து. என்றென்றும் அவர் இருப்பார்.

●

## கலாப்ரியா

**கவிஞர், எழுத்தாளர்**

**நா**ற்பதாண்டுகளுக்கு முன் கீழ்த்திசை வானின் பரிதி போலத் தமிழ்க் கவிப்பரப்பில் தோன்றிய எழுஞாயிறு மனுஷ்யபுத்திரன். அன்று உதித்த சூரியனாக, விரைவிலேயே உச்சம் தொட்டு சுமார் முப்பது வருடங்களாக யாரும், எந்த மேகமும் ஒளித்து வைக்க முடியாத ஒளிச்சேர்க்கையை வழங்கி உணர்ச்சிப் பெருக்கு மிகுந்த கவித்துவத்துடன் ஓய்வறியாமல் இயங்கிவருகிறார் மனுஷ்யபுத்திரன். நவீன உலகின் வாழ்வையும் படிம நிகழ்வுகளையும், அன்றாட மொழிக்கூறின் வார்த்தைகளால் இவர் வடிக்கும் கவிதைகள், செவ்வியல் உணர்வுகள் தரும் மகிழ்வுகளுக்குச் சற்றும் குறைவு பெறாதவை, நவீனத்தின் பொலிவு குன்றாதவை. இக்கால வாழ்வின் சிடுக்கான அரசியலையும் தனிமனிதப் பாடுகளையும், மெல்லுணர்வுகளையும், நனி காதலையும் தேர்ந்தெடுத்த வார்த்தைகளைக் கொண்டு தேர்ந்தெடுத்த வரிகளில் சிறிதும் ரசம் இழந்துவிடாத உருவநேர்த்தியுடன் இவர் போலச் சொற்செட்டுடன் அடுக்குதல் யாருக்கும் வாய்த்ததில்லை. சனாதன அரசியலின் கொடுங்கோன்மைகளைச் சாடுவதில், சமூக நீதியைப் பேணுவதற்கான போராட்டத்தில், இவரது கவிதைகளுக்குச் சற்றும் சளைத்ததில்லை இவரது கட்டுக்கோப்பான உரைநடை.

மேடைப்பேச்செனும் நிகழ்த்துக் கலையினைத் தன் தினசரி வாழ்வின் ஓர் அங்கமாகவே ஆக்கிக்கொண்டுவிட்ட இவரது அழுத்தமான மொழி வன்மை எதிரிகளிலும் நண்பர்களிலும் ஒருவரிடமும் காணப்பெறாதது.

●

## இசை

**கவிஞர்**

**கசப்பைச் சுவையென்று காட்டியவன்.**

மனுஷ்யபுத்திரன் என் கவிதை ஆசிரியர்களுள் ஒருவர். எனக்கு மட்டுமல்ல இன்று எழுதிக்கொண்டிருக்கும் பலருக்கும் அவர் ஏதேனும் ஒரு பருவத்தில் நாயகனாக இருந்திருக்கிறார். எனக்கு ஒரு பருவத்தில் அந்தப் பித்து மிகுந்திருந்தது. என் தங்கையின் திருமணப் பத்திரிகையை அவர் கவிதையோடுதான் அச்சாக்கினேன். உண்மையில் அந்தக் கவிதைக்கும் திருமணத்திற்கும், மங்கலத்திற்கும் ஒரு சம்பந்தமும் இருக்கவில்லை. ஆனால் "மனுஷ்யபுத்திரன்" என்கிற பெயர் மீது இருந்த ஒரு தாளாத மயக்கம் அப்படி என்னைச் செய்யவைத்தது.

நவீனக் கவிதை என்கிற வகைமை குறித்தான என் அறிதலுக்கு அவரது "நீராலானது" தொகுப்பு பெரிதும் உதவியது. மனப்பாடம் ஆகிவிட்ட நிலையிலும், அதிலுள்ள பல கவிதைகள் இப்போது வாசிக்கையிலும் என்னை மனமுருகச் செய்பவை. அந்த நூலிற்கு அவர் எழுதிய முன்னுரை என் கவிதையியல் சார்ந்த புரிதல்களைத் தெளிவாக்கியது.

கசப்பை ஒரு சுவையென ஆக்கித் தந்தார் என்பது அவரைக் குறித்தான என் நன்றியறிதல்களில், முக்கியமானது. தண்டவாளத்தில் தலையை வைப்பதற்குப் பதிலாக எழுதிய கவிதைகள் என்று என் கவிதைகளில் ஒரு நூறாவது தேறும். உச்சிமீது வானிடிந்து கிடந்த நாட்களில் சிதலங்களைப் பொறுக்கிக் கவிதை சமைப்பது என்பது ஒரு கலை, ஒரு வாழ்க்கை முறை. கசப்பை ஒரு சுவையென ஆக்கிவிட்டால் பிறகு கசப்பால் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாதல்லவா?

வரலாற்று, தத்துவ வாசிப்புகளில் ஆர்வம் இல்லாத ஒரு இளைஞனாக இருந்த என் வாசிப்பு நேரடியாக கவிதைகள் மூலம்தான் துவங்கியது. ஆகவே என் வாழ்க்கைப் பார்வைகளை உருவாக்கியதிலும் அவருக்குப் பங்கிருக்கிறது. "பேருந்து நிலையத்தில் இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டு அம்மாக்கள் கண்காணாத இடத்திற்குப் போய்விடுவார்கள்" என்பதை அவர் உறுதிபடச் சொல்லித் தந்தார். குருடன் சுயமைதுனம் செய்வதை ஒளிந்திருந்து பார்க்கும் ஒரு ஜோடிக் கண்களை எழுதிக் காட்டியதின் வழியே, அவர் என்னை இந்த வாழ்விற்குத் தயார் செய்தார் என்றே நம்புகிறேன்.

நம் இளமையில் நாயகனாக இருந்த ஒருவரின் மீதான மயக்கம் நமக்கு என்றென்றும் தீர்வதில்லை. இளமை, இளமை என்று சொல்லிக்கொண்டாலும் ஒரு கிராமத்தானின் இளமைப்பருவம் என்பது கிட்டத்தட்ட குழந்தைப் பருவம்தான்.

"படைப்புச் சுடர்" விருது பெறும் கவிஞர் மனுஷ்யபுத்திரனுக்குக் கவிஞர் இசையின் வாழ்த்துகள், கூடவே ஒரு குழந்தையின் முத்தம்.

●

## பிருந்தா சாரதி

**கவிஞர்**

**உன்னை யாரும் அணைத்துக்கொள்ள வில்லையா?**

மனுஷ்யபுத்திரனின், 50வது கவிதை நூல் 'உன்னை யாரும் அணைத்துக்கொள்ளவில்லையா?'

ஒரு கவிஞனின் அசுர சாதனை இது. வேறு யாரும் இப்படிப் பிரமாண்டக் கவிதை நூல்களை வெளியிட்டு இருக்கிறார்களா என்று தெரியவில்லை.

'கவிதை என்பது முத்துக்கள் கருத்தரிப்பதைப் போல ரகசியமான

நிகழ்ச்சி... அது அபூர்வமான நிகழ்வு... எப்போதாவதுதான் கவிதை பிறக்கும்...' என்ற கற்பிதங்களை உடைத்து அற்புதம் நிகழ்த்திவருபவர் கவிஞர் மனுஷ்யபுத்திரன்.

கடந்த 30 ஆண்டுகளாக நாள்தோறும் தன்னைச் சுற்றி நிகழும் ஒவ்வொன்றையும் கவனித்து எல்லாவற்றையும் தன் கவிதைகளில் பதிவுசெய்து வரும் அவருடைய சாதனைக்கு நிகராக வேறு ஒரு கவிஞரைக் கூற முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடா? சென்னையைப் புயல் வெள்ளம் சூழ்ந்ததா? திருநெல்வேலியில் பலத்த மழையா? உலகில் எங்கோ யாரோ ஒரு தனி மனிதனுக்குக் கொடுமை நிகழ்ந்ததா? கிரிக்கெட்டிலோ கால்பந்திலோ எங்கோ அபூர்வமான நிகழ்வு நடந்ததா? எல்லாவற்றையும் கவித்துவம் மாறாமல் தன் முகநூல் பதிவுகளில் கவிதைகளில் கொட்டிவருபவர் மனுஷ்யபுத்திரன். தான் வாழும் காலத்தைக் கவிதையில் பதிவுசெய்து ஓர் ஆவணத்தை உருவாக்கும்படி யாரோ கட்டளையிட்டதைப் போல அவர் செய்துவருகிறார். உண்மையில் அவரைப் பார்த்து நான் பொறாமைப்படுவேன். சுவாசிக்கும் ஒவ்வொரு சுவாசத்திற்கும் அவரது கவித்துவ மனம் கவிதையில் கணக்கு வைத்திருக்கிறது. தன் வாழ்க்கையை ஒரு கவிஞன் இப்படி கவிதைக்கு ஒப்புக் கொடுத்திருப்பானா என்று நம்மை வியக்க வைப்பவர் அவர்.

அவரது காதல் கவிதைகள் மனதின் ஆழத்தில் இருந்து புறப்பட்டு வருபவை. அன்பில் பீறிட்டுக் கிளம்புபவை. தனிமையின் ஏக்கத்தை உலகின் கடைசி மனிதனைப் போல் மிகுந்த துயரோடு பகிர்ந்துகொள்பவை. இன்றைய இளைஞர்களின் இளைஞிகளின் மொழியில் இருப்பவை. நவீனத்துவத்தோடு நளினமாக வெளிப்பட்டவை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவரது 'மிஸ் யூ' என்ற நூல் கவிதைப் புத்தகங்களில் இவ்வளவு பிரம்மாண்டமா என்று மலைக்க வைத்தது.

சென்ற ஆண்டு 10 கவிதை நூல்களை ஒரே நேரத்தில் வெளியிட்டு ஆச்சரியப்படுத்தினார். இவ்வாண்டு 'மிஸ் யூ'வுக்கு நிகராக இன்னொரு பிரம்மாண்ட கவிதைத் தொகுதி 'உன்னை அணைத்துக்கொள்ள யாரும் இல்லையா?' வெளியிட்டு இருக்கிறார்.

'அதீதத்தின் ருசி', 'நீராலானது', 'என் படுக்கையறையில் யாரோ ஒளிந்திருக்கிறார்கள்' போன்ற அவரது ஆரம்ப காலக் கவிதைத் தொகுதிகள் எப்போதும் என் கையருகில் இருப்பவை. கவிக்கோவின் கவிதை நூல்களைப் போல மனுஷ்யபுத்திரன் நூல்களும் என் மனதுக்கு நெருக்கமான ஓர் உணர்வைத் தருபவை. மனம் மிகவும் வெறுமைப்படும்போதெல்லாம் மனுஷ்யபுத்திரனைப் படித்தால் கொஞ்சம் ஈரம் சுரக்கும். அந்த ஈரத்தில் நான் கொஞ்சம் முளைப்பேன்.

'உன்னை அணைத்துக்கொள்ள யாரும் இல்லையா?' என் அருகில் ஒரு கடலையே கூட்டி வந்திருக்கிறது. அதில் இனி தொடர்ந்து பல நாட்கள் நீச்சல் அடிக்கலாம். அதன் அணைப்பின் கதகதப்பில் புதிய கவிதைகளையும் எழுதலாம்.

50 கவிதைப் புத்தகங்கள் எழுதி மாபெரும் சாதனை நிகழ்த்தியிருக்கும் மனுஷ்யபுத்திரனுக்கு இன்னும் சொல்லிக் கொள்ளும்படியான பெரிய விருதுகள் எதுவும் வழங்கப்படவில்லை என்பது ஆச்சரியமானது.

அதையும் பதிவுசெய்து இந்தச் சாதனைத் தருணத்தில் அவரை அணைத்துக்கொண்டு என் அன்பைப் பகிர்ந்துகொள்கிறேன். என்னைத் தொடர்ந்து வியக்கவைக்கும் கவிஞனுக்கு ஒரு முத்தமும் தருகிறேன்.

●

## கரன் கார்க்கி

**கவிஞர்**

ஒரு கவிதை தன்னைத் தானே எழுதிக் கொள்வது போலத்தான் மனுஷ்யபுத்திரனின் கவிதைகள்.

ஏனெனில் இங்கு ஒவ்வொரு மனிதரிலும் துயரமும் காதலும் அன்புக்கான

தவிப்பும் ஒரு கவிதையைப் போல்தான் ததும்பிக்கொண்டிருக்கிறது. பலரால் அதைச் சொல்ல முடியவில்லை.

ஆனால் மனுஷ்யபுத்திரன் மிக எளிமையாகச் சொல்லிவிடுகிறார் தன் கவிதைகளின் மூலமாக. அடிப்படையிலேயே கவிதைகளால் ஆனவர் இன்றைய சூழலில் கவிதையை உறுதியாகப் பற்றிக்கொண்டு கவிதைகளோடு வேகமாக நடப்பவர் என்பது எனது உறுதியான கருத்து.

இது கவிதை அது கவிதை எது கவிதை..

வானத்தை அண்ணாந்து பார்த்து எது நட்சத்திரம் என்று யாரால் சொல்ல முடியும்.. உங்களுக்கு இது எனக்கு அது.

நட்சத்திரத்துக்குத் தெரியும் தான் யாரென்று.

என் அளவில் அவரது கவிதைகளை நான் வாசிக்கிற கணங்களில் சிலதைக் குளிர்ச்சியாக உணர்கிறேன்.

சில கவிதைகளில் கண்ணீராலான சொற்களை என்னால் உணர முடிந்திருக்கிறது...

பெரும்பாலும் அவை ஆதங்கங்களைப் பேசுகின்றன என்றாலும் அவை காதலைச் சுமந்த தாரகைகளைப் போலச் சுடர்கின்றன.. அந்தச் சுடரில் மனுஷ்யபுத்திரன் எப்போதும் கவிதையாகவே திகழ்வார்.


●

## நேசமித்ரன்

**கவிஞர்**

**தற்கணத்தை எழுதும் கலை.**

புத்தாயிரத்தின் முதல் கால் நூற்றாண்டை நிறைவு செய்யும் காலத்தில் கலைகள் புதிய விழுமியங்களையும், பண்பாட்டு மதிப்பீடுகளையும், மனித இருப்பின் புதிய அடையாளச் சிக்கல்களையும், உறவுகளுக்கு இடையே கிளைத்துவரும் பாவனைகளையும், பாசாங்குகளையும் செரித்து, தன்னைப் புதுக்கிக்கொண்டு வளர்ந்துவருகின்றன. அனுபவம், தரிசனம், ஞாபகங்கள், முற்போக்கு, அகம் புறம்




போன்ற கவிதைகளின் மூலக்கூறுகள் புதிய சமன்பாடுகளை எய்தி இருப்பதாகத் தோன்றுகிறது.

Global memory scapes என்கிற பதம் 8 நிமிடப் புகழ் நிலைக்கும் மெய்நிகர் ஊடக உலகில் அடைந்திருக்கிற இடம் சற்றே சிந்திக்கத்தக்கது. நினைவுகளில் இருந்து, தரிசனங்களில் இருந்து, அனுபூதி நிலைகளில் இருந்து குறுக்குவெட்டுத் தோற்றமாக எழுதப்பட்ட கவிதைகள் மெல்லக் காலாவதி ஆகிக்கொண்டே இருக்கின்றன. தற்கணத்தைப் பேசுகின்ற மொழியில் இலகுவான தருணங்களை, அதன் மாமிசச் சூடு குறையாமல் எழுதப்படும் கவிதைகளின் காலமிது. கடந்த 50 வருடங்களாகத் தனக்கேயான பிரத்தியேக மொழியைக் கண்டறிந்து அதன் மெல்லிய பரிணாம மாற்றங்களுடன் மேற்சொன்ன தற்கணத்தின் அபூர்வங்களை எழுதுகிறவராக இவ்வகைமையின் முன்னோடிக் கவிஞர்

மனுஷ்யபுத்திரனைச் சொல்லலாம். தனி மனிதனின் அவமானங்களை, புறக்கணிப்பை, காத்திருப்பை, கசப்பை, அவசத்தை, கோபத்தை, குருதியை, கனத்தை அதன் பிசுக்கு மாறாமல் கடத்துபவை மனுஷ்யபுத்திரனின் கவிதைகள். பன்னிரெண்டாயிரம் கவிதைகள் என்பது எத்தனை நெடிய காலத்தை, எவ்வளவு உணர்வுகளைக் கடத்தி இருக்கிறது. இவ்வளவு எழுதுவதற்கு எவ்வளவு பெரிய சொற்கிடங்கு அவருக்குள் இருக்க வேண்டும். சதா அலைக்கழிப்பும் கொந்தளிப்பும் கொண்ட கவிதை செய்யும் செயல்பாட்டுக்குள் எவ்வளவு வலியைக் கடத்தி இருக்க வேண்டும் அந்தத் தருணங்கள். இவ்வளவுக்கும் பிறகு, இத்தனை இலட்சம் சொற்களுக்கும் பிறகு தன் நுண்ணுணர்வையும், கூருணர்வையும் தக்கவைத்துக்கொண்டிருப்பது, தன் கலைமனதையும், கலை செய்யும் உந்துதலையும் இழக்காமல் இருப்பது இளம் கவிஞர்கள் அவரிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய குணாம்சம் என்று தோன்றுகிறது.

இன்றைக்குக் கவிதை எழுத முயலும் ஒருவன் அவருக்கு முதல் வாசகனாய் இருக்கிறான். அவருக்கு முன்பு எழுத வந்தவர்களும் அவருக்கு முதல் வாசகராய் இருப்பதுதான் அவரது ஆகிருதி. அவரது கவிதைகள் சமகால கவிதைகளில் நிகழ்த்தி இருக்கும் பாதிப்பு அளப்பரியது. காதலின் மகத்தான தருணங்களை, புனைவுகளில் தொடவே இயலாத வாழ்வின் மர்மமான இருள் மீது ஒரு மின்மினி அளவு வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி பறந்துகொண்டிருக்கின்றன அவரது சிகிச்சைக் கத்தி அளவு இறகுடைய சொற்கள். தன் பாதைக்குத் தானே வெளிச்சம் உமிழ்ந்துகொள்ளும் ஒரு ஒளிக்கோள் போலவும் இருக்கிறார் மனுஷ்யபுத்திரன்.

●

## இளங்கோ கிருஷ்ணன்
### கவிஞர்

தமிழ் நவீனக் கவிதையில் மனுஷ்ய புத்திரனின் வருகை என்பதைத் தீவிரமான தன்னகம் கொண்ட ஒரு பிரக்ஞைபூர்வமான சமூக மனிதனின் வருகை எனலாம். புதிரான மொழியில் இயங்கிக்கொண்டிருந்த தமிழ் நவீனக் கவிதையின் கவித்துவங்களை அதன் இருண்மை களைந்து, மனித மனதின் நுட்பமான மனவெளிகளில் உலவவிட்டவர். தான் என்ற இருப்பின் தன்னிலை குறித்த கவிதைகளாகட்டும், சமூக மனிதத் தன்னிலைகளில் இருந்து வெளிப்பட்ட கவிதைகளாகட்டும், இவரின் கவிதைகளில் வெளிப்பட்ட தனித்துவம் நுண்மையான மன உணர்வுகளை அதன் தீவிரத்தோடு வெளிப்படுத்தியதுதான்.

மனதின் புதிரான அதியுணர்வுகளை அதன் நுணுக்கமான தருணங்களை மனுஷ்யபுத்திரன் கவியுலகில் காண்பது போல அதிர்ச்சிகரமாக நாம் தமிழ்ச் சூழலில் காண்பது அரிது. துயரம், கைவிடல், பிரிவேக்கம், துரோகம், தோல்வி போன்ற மனதின் ஆதி உணர்வுகளின் நவீன மொழியைத் தமிழுக்கு அளித்ததில் மனுஷ்யபுத்திரன் ஒரு தனித்துவமான முன்னோடி. அவரின் சமகாலக் கவிதைகள் ஆண் பெண் இருவருக்குமான அன்பின் தருணங்களைப் பதிவு செய்பவை. காதல் என்ற உணர்வின் அகச் சிக்கல்களை, அதன் நுட்பமான உள்மடிப்புகளை, அதன் தீவிரமான வெளிப்பாடுகளை, அன்பின் வெறுப்பை, வெறுப்பின் அன்பை மற்றும் அதன் ஒவ்வொரு தருணங்களிலும் வெளிப்படும் நுண்ணிய மன உணர்வுகளைப் பேசுபவை.

காதல் என்பது எப்போது ஒன்றல்ல. ஒவ்வொரு காலத்திலும் காதலுக்கான இலக்கணங்கள் மாறியிருக்கின்றன. நம்முடைய காலத்துக்கான காதலின் இலக்கணம் அல்லது இலக்கியம் என்று மனுஷ்யபுத்திரன் கவிதைகளில் பதிவாகும் விஷயங்களைச் சொல்லலாம். இன்றைய காதலின் பல நூறு தருணங்களை அத்தருணங்களில் வெளிப்படும் மனநிலையின் நுண் அடுக்குகளை மனுஷ்யபுத்திரன் போல நமக்குச் சுட்டிக்காட்டும் பிறிதொரு கவி யாருமில்லை. இதுவே அவரின் சமகாலக் கவிதைகளின் முக்கியத்தன்மை எனலாம்.

●

# படைப்புக் குழுமத்தின் பெருமைமிகு விருதுகள் – 2024





## படைப்புக் குழுமத்தின் படைப்புச் சுடர் விருது பெறும் எழுத்தாளர் குறிஞ்சிவேலன் குறித்த பகிர்வுகள்

**பல்லவி குமார்**

ஆசிரியர், தமிழ்ப் பல்லவி, காலாண்டு இலக்கிய இதழ்

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி அருகிலுள்ள மீனாட்சிப்பேட்டை எனும் கிராமத்தில் ஒரு நெசவுக் குடும்பத்தில் பிறந்தவர் எழுத்தாளர் குறிஞ்சிவேலன். மொழியாக்க இலக்கியத்தில் மலையாளத்தில் முதன்முதலாக சாகித்திய அகாதமி விருது பெற்றவர். எஸ்.கே.பொற்றேகாட் எழுதிய நாவலை "விஷக்கன்னி" என்ற பெயரில் மொழியாக்கம் செய்து சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ளார்.

"திசை எட்டும்" காலாண்டு மொழியாக்க இதழை இருபதாண்டிற்கும் மேலாக நடத்திப் பிறமொழி இலக்கியங்கள் தமிழில் பரவிடப் பாடுபட்டுவருபவர். மொழிபெயர்ப்பாளர்கள் படைப்பாளர்களுக்கு இணையாகப் போற்றப்பட வேண்டுமென நல்லி திசை எட்டும் மொழிபெயர்ப்பு விருதினை உருவாக்கி இருநூற்றிற்கும் மேலான படைப்பாளிகள் பரிசு பெற்று உயர்ந்து வாழ உறுதுணையாக இருந்துவருகிறார்.

கடலூர் மாவட்டத்தில் எழுத்தாளர்கள் இருக்கிறார்களா? என்ற கேள்வியால் புறக்கணிக்கப்பட்டவர். பல பதிப்பகங்களும், பரிசுபெறும் படைப்பாளர்களும் மாவட்டத்தில் உருவாக உறுதுணையாக இருந்துவருகிறார்.

தமிழக அரசின் பல்வேறு மொழியாக்க முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருந்து வருகிறார். சக படைப்பாளிகளை அரவணைத்து ஊக்கப்படுத்தும் ஆற்றல் கொண்டவர். “தீபம்” இலக்கியக் குடும்பத்தில் ஒருவர். நா.பா அவர்களின் அன்பினைப் பெற்றவர். கடலூர் மாவட்டத்தில் நிறைய படைப்பாளிகள் உருவாகவும், தம்மை நாடி வரும் அனைவரையும் ஆதரித்து உதவும் அவரின் தொண்டுகள் தொடரவும் வேண்டுமென விரும்புகிறோம்.

எனது “தமிழ்ப் பல்லவி” இதழின் ஆரம்பகாலம் (1985) முதல் இன்றைய நிலை வரை நிறைய ஆலோசனைகள் வழங்கி உற்சாகப்படுத்தி வருகிறார். இலக்கிய உலகம் செழிக்க அவர் நீண்ட ஆயுளோடும், நிறைய படைப்புகளோடும், புதிய விருதுகளோடும் வாழவேண்டுமென விரும்புகிறோம்.

●

## நெய்வேலி மு. சுப்ரமணி

மொழிபெயர்ப்பாளர்

பெருமதிப்பிற்குரிய அய்யா குறிஞ்சிவேலன் அவர்களின் மொழியாக்கப் பணி ஈடிணையற்றது. மலையாளத்து எழுத்துலக வேந்தர்கள் தகழி, பொற்றேக்காட், மலையாற்றூர் ராமகிருஷ்ணன் முதல், நவீன மலையாள மொழி ஆளுமைகளின் படைப்புகள் என முப்பது நூல்களுக்கும் மேலாகத் தமிழுக்குக் கொண்டு வந்து அணிசேர்ப்பவர். சாகித்திய அகாதமி விருதினைத் தேடித் தந்த எஸ்.கே.பொற்றேக்காடின் ‘விஷக்கன்னி’, மொழிபெயர்ப்புச் சவால்கள் நிறைந்த சேதுவின் ‘பாண்டவபுரம்’, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் பரிசினைப் பெற்ற ட்டி.டி.ராமகிருஷ்ணனின் ‘ஃப்ரான்ஸிஸ் இட்டிக்கோரா’, எம்.டி.வாசுதேவ நாயரின் ‘இரண்டாம் இடம்’ மிகவும் குறிப்பிடத்தக்கவை. அனைத்திற்கும் மேலாக விலாஸினியின் நான்காயிரம் பக்கங்களுக்கும் மேலான அவகாசிகள் (தமிழில் ‘வாரிசுகள்’) அய்யா அவர்களின் எழுத்துலகச் சாதனைக்குச் சான்றாக விளங்கும் .

‘திசை எட்டும்’ மொழியாக்கக் காலாண்டிதழ்வழி புதிய படைப்பாளர்களை உருவாக்குவதில் நிகரற்ற குறிஞ்சிவேலன் அவர்கள், பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி அவர்களின் பேராதரவுடன் நூற்றைம்பதுக்கும் மேற்பட்டோருக்கு ‘நல்லி திசைஎட்டும் விருதுகள்’வழங்கிவருபவர்.

அத்தகைய எங்கள் ஆசான் அவர்களைப் போற்றிப் புகழ்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

●

## பாரதி வசந்தன்

எழுத்தாளர்

**அவர் ஓர் இலக்கிய சகாப்தம்.**

‘திசை எட்டும்’ ஆசிரியர் குறிஞ்சிவேலன் அவர்கள் இலக்கியத்தின் பல்துறை வித்தகர். பன்மொழி எழுத்தாளர். தமிழின் ஆகச்சிறந்த படைப்பாளிகளுள் மிக முக்கியமானவர், மொழிபெயர்ப்பில் அவர் பெயரை விட்டுவிட்டு யாரும் அவ்வளவு சுலபமாகக் கடந்து போய்விட முடியாது.

அந்தச் சாதனைக்கு இன்றளவும் உறுதுணையாக இருப்பது அவர் நடத்தும் ‘திசை எட்டும்’ மொழியாக்கக் காலாண்டிதழ்.

தமிழ்கூறும் நல் உலகம் முழுமைக்கும் அந்த மாமனிதரின் பெயர் தெரிந்திருக்கிறது. கற்றறிந்தவர் மத்தியில் அவருக்கு இப்படி என்றும் நிலைத்திருக்கும் புகழ் கிடைத்திருப்பதற்குக் காரணம் இடையறாத உழைப்பு. மொழி மீது கொண்ட முழு

அக்கறை. அனைவரையும் நேசிக்கும் அன்பு. எந்த ஒன்றையும் எவர் மனமும் புண்படாமல் செய்யும் அர்ப்பணிப்பு. இப்படி குறிஞ்சிவேலன் அவர்களைப் பற்றி நிறைய சொல்லிக்கொண்டு போகலாம்.

அவர் ஓர் இலக்கிய சகாப்தம். நம் காலத்தில் வாழும் நற்றமிழ்ப் புலமை. பிற மொழிகளின் பேராற்றல்.

எனக்கு அவர் 'தீபம்' இலக்கிய இதழின் காலத்திலிருந்தே நன்கு அறிமுகம். எழுபதுகளில் நான் எழுதத் தொடங்கியபோதே அவர் எழுத்துகளைப் படித்து மகிழ்ந்திருக்கிறேன். பிற்பாடு என்னுடைய மொழிபெயர்ப்புப் படைப்புகளை 'திசை எட்டும்' இதழில் தொடர்ந்து வெளியிட்டுப் புதிய இலக்கிய வெளிச்சம் கிடைக்கும்படிச் செய்த அந்த அருமையானவரை நான் ஒருபோதும் மறப்பதில்லை. என் எழுதுகோல் அசைகிறபோதெல்லாம் அவருடைய இனிய பெயர் என் நெஞ்சின் அடி ஆழத்தில் என்றும் நிறைந்திருக்கும்.

●

## மு.முருகேஷ்

எழுத்தாளர்

**மொழிபெயர்ப்புத்துறையின் விடிவெள்ளி குறிஞ்சிவேலன்.**

தமுஎசவில் நான் முழுமூச்சாகக் களமாடிக்கொண்டிருந்த 2002இல், குறிஞ்சிப்பாடியில் நடைபெற்ற கலை இரவில் பங்கேற்கச் சென்றிருந்தேன். அன்றைய நாளின் பகலில் அங்கே மொழிபெயர்ப்பாளர் குறிஞ்சிவேலனின் வைரவிழாவும் நடைபெற்றது. முதன்முதலாக குறிஞ்சிவேலன் அவர்களை நான் அப்போதுதான் சந்தித்தேன்.

குறிஞ்சிவேலனைச் சந்திப்பதற்கு முன்பாகவே, மலையாளத்திலிருந்து தமிழில் அவர் மொழிபெயர்த்திருந்த ஓரிரு நூல்களை வாசித்திருந்தேன். 1994இல் எஸ்.கே. பொற்றேக்காட் எழுதிய 'விஷக்கன்னி' நாவலை மொழிபெயர்த்தமைக்காக மத்திய அரசு சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றிருந்தார். ஆனாலும் அந்தப் புகழ் மகுடத்தைச் சுமக்காத மனிதராக என் மனதில் உயர்ந்து நின்றார்.

மீனாட்சிப்பேட்டையிலுள்ள நூலகத்தில் 1964இல் உறுப்பினரான குறிஞ்சிவேலனைப் புத்தக வாசிப்பு எனும் பேய் பிடித்துக்கொண்டது. 'பொன்னியின் செல்வன்' தொடங்கி 300க்கும் மேற்பட்ட நாவல்களைத் தொடர்ந்து வாசித்தார்.

நேர்மை மிக்க கால்நடை ஆய்வாளராகப் பணியாற்றி வந்த குறிஞ்சிவேலனின் வாழ்வில் வீசிய புயலொன்று அவரைக் கேரளத்தின் வண்டிப்பெரியாருக்குச் செல்லும் காட்டுப்பாதையிலுள்ள செக்போஸ்ட்டில் கொண்டுபோய்ப் போட்டது. தனக்குத் தண்டனையாக வழங்கப்பட்ட பணியை, மலையாள மொழியைக் கற்பதற்கான பெரும் வாய்ப்பாக்கிக்கொண்டார் குறிஞ்சிவேலன். கேரள மாநிலப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளிடமிருந்து பாட நூல்களை வாங்கிப்படித்து மலையாளம் கற்றறிந்தார்.

1966இல் மலையாற்றூர் ராமகிருஷ்ணன் எழுதிய 'சல்லி வேர்கள்' எனும் நாவலை 'தீபம்' இதழில் மொழிபெயர்த்தார். பின்னர் சேது, தகழி சிவசங்கர பிள்ளை, வைக்கம் முகமது பஷீர், கேசவதேவ், இ.வாசு, டி.பத்மநாபன், எம்.டி.வாசுதேவன் நாயர், மலையாற்றூர் ராமகிருஷ்ணன், ஓ.வி.விஜயன், காக்கநாடன், எம்.முகுந்தன், சக்கரியா, சேது, பி.வத்ஸலா, என்.எஸ்.மாதவன், சி.வி.பாலகிருஷ்ணன், என்.பிரபாகரன், ட்டி.டி.ராமகிருஷ்ணன் ஆகியோரின் படைப்புகளைத் தொடர்ந்து மொழிபெயர்த்தார். இன்றுவரை 45க்கும் மேற்பட்ட மலையாள இலக்கியத்தின்



சிறந்த படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

மொழிபெயர்ப்பதோடு நில்லாமல் கடலூர் மாவட்டத்திலுள்ள பலரையும் மொழிபெயர்ப்பாளராக மாற்றிய பெருமை குறிஞ்சிவேலனுக்குண்டு. ப.ஜீவகாருண்யன், எஸ்ஸார்சி, பால்கி, பல்லவிகுமார், நெய்வேலி பாரதிக்குமார், மு.சுப்பிரமணி, உதயசங்கர் எனப் பெரிய பட்டியலே நீளும்.

அத்தோடு நில்லாமல் 2003 ஜூனில் ‘திசை எட்டும்’ எனும் மொழியாக்கக் காலாண்டிதழினைத் தொடங்கினார் குறிஞ்சிவேலன். ஒரு சிறிய ஊரில் இருந்துகொண்டு, மொழிபெயர்ப்புக்கான இந்திய அளவிலான இதழினை நடத்துவது ஒன்றும் சாதாரணச் செயலல்ல. கடந்த 21 ஆண்டுகளாகத் தொய்வில்லாமல் ‘திசை எட்டும்’ இதழினை வெளிக்கொண்டு வருகிற சாதனைக்காகவே ஒருமுறை அவரைப் பாராட்டலாம். நோபல் இலக்கியச் சிறப்பிதழ், புக்கர் இலக்கியச் சிறப்பிதழ், சர்வதேச இலக்கியச் சிறப்பிதழ், ஜப்பானிய இலக்கியச் சிறப்பிதழ், உலகச் சுற்றுச்சூழல் இலக்கியச் சிறப்பிதழ் எனப் பல சிறப்பிதழ்களையும், இந்திய மொழிகளான மைதிலி, தெலுங்கு, கன்னடம், கொங்கணி, குஜராத்தி, பஞ்சாபி மொழி இலக்கியச் சிறப்பிதழ்களையும் வெளிக்கொண்டு வந்தார்.

புகழ்பெற்ற மலையாள எழுத்தாளர் விலாசினி எழுதிய ‘அவகாசிகள்’ எனும் 4300 பக்கங்களையுடைய நாவலைச் சமீபத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக மொழியாக்கப் பணிகளைத் தொய்வின்றிச் செய்துவரும் குறிஞ்சிவேலன், 2022இல் தனது 80ஆவது வயதில் புதுச்சேரியில் முத்து விழாவினைக் கொண்டாடினார். கடந்த ஜூன் 30 அன்று தனது 83ஆவது அகவையில் அடியெடுத்து வைத்திருக்கும் குறிஞ்சிவேலன், மொழிபெயர்ப்புத்துறையில் நூற்றாண்டுகள் காண வேண்டிய விடிவெள்ளியானவர் என்பதில் துளியும் ஐயமில்லை.

# படைப்புக் குழுமத்தின் பெருமைமிகு விருதுகள் – 2024






## படைப்புக் குழுமத்தின் இலக்கியச் சுடர் விருது பெறும் எழுத்தாளர் ஷைலஜா ரவீந்திரன் குறித்த பகிர்வுகள்

**டாக்டர் ஜெ. பிரியதர்ஷினி**

எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்

ஷைலஜா அவர்களை முதன்முறையாகச் சந்தித்தபோது, எனக்குப் பத்து பதினொரு வயது இருக்கும். தாத்தா பொன்னீலன் அவர்களின் கரிசல் நாவலை அவர் மலையாளத்தில் மொழிபெயர்த்திருந்தார். அதன் வெளியீட்டு விழாவில் அவரது இயல்பான, தெளிவான பேச்சு என் சிறு மனதில் பதிந்துபோனது. அன்றைய நாள் என் வாழ்வின் மிக முக்கியமான நாட்களில் ஒன்று. மொழிபெயர்ப்பு பற்றியும் கரிசல் பற்றியும் கிடைத்த அந்த அறிவுதான் பின்னாளில் கரிசல் நாவலை நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வித்திட்டது.

அதன்பின் அவர் உலகப் பொதுமறையான திருக்குறளை மலையாளத்திற்கு மொழிபெயர்த்ததை ஒட்டித் திருவள்ளுவர் சிலையடியில் ஒரு நிகழ்வில் மறுபடி அவரைச் சந்தித்தேன். அதே இயல்பான, சிநேகமான பேச்சு. பின் பல ஆண்டுகளுக்குப் பின் கரிசல் நாவலை நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அது அச்சானதும் அவர் எண்ணைத் தாத்தாவிடம் வாங்கித் தொடர்பு கொண்டேன்.

எழுத்திலும், கரிசலின் மீதும் தீராக் காதல் கொண்டிருந்த அவருக்கு அதில்

எல்லையில்லா மகிழ்ச்சி. திருவனந்தபுரத்தில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவின் அத்தனைப் பணிகளையும் தன் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டார். எனக்கு ஷைலஜா அம்மா இன்னொரு தாய். படைப்புக் குழுமம் வழங்கும் விருதுக்கு மிகவும் பொருத்தமான தேர்வு. அவருக்கு இந்த விருது கிடைப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. வாழ்த்துகள்.

## குறிஞ்சிவேலன்

மொழிபெயர்ப்பாளர்



**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்."**

**"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்."**

இந்த இரு குறள்களுக்கும் பொருள் கொடுப்பவர்கள்தான் திருமிகு கே.ஜி.சந்திரசேகரன் நாயரும், திருமதி ஷைலஜாவும். இவர்கள் இருவரும் தந்தை மகளாவர்.

திருமிகு சந்திரசேகரன் நாயர் அவர்கள் தமிழ்நாட்டில் 36 ஆண்டுகளுக்கும் மேல் தமிழ்நாடு கூட்டுறவுத்துறையில் பல இடங்களில் பணியாற்றித் தமிழை நன்றாகக் கற்றுக்கொண்டு தன்னை வாழ வைத்த தமிழுக்குத் தொண்டாற்ற நினைத்து, திருக்குறள், திருவாசகம், திருமந்திரம், பதினெண்கீழ்க்கணக்கு எனப் பல தொன்மை இலக்கியங்களை மலையாள மொழிக்குக் கொண்டு சென்றவர்.

அவருக்கு மகளாகப் பிறந்த திருமதி ஷைலஜாவும் தன் தந்தையின் வழிகாட்டுதலில் தமிழின் சமகாலப் படைப்புகள் பலவற்றையும் மலையாள மொழியில் மொழிபெயர்ப்பு செய்துவருகிறார். எஸ்.ராமகிருஷ்ணன், பெருமாள் முருகன், தமிழ்மகன் போன்ற ஆளுமைகளின் படைப்புகளுடன் பல இளம் எழுத்தாளர்களின் படைப்புகளையும் மலையாள மொழிக்குக் கொண்டு சென்றவர்.

கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்திலும் கேரளாவின் திருவனந்தபுரத்திலும் மாறி மாறி வசித்துவருபவர். இவர் மலையாள மொழியில் மூன்று நூல்களையும், 15 தமிழ் நூல்களை மலையாள மொழியில் மொழிபெயர்ப்பும் செய்திருக்கிறார். திருக்குறளை மலையாள மொழியில் கொண்டு சென்ற முதல் பெண் மொழிபெயர்ப்பாளர் என்ற தனிப்பெரும் பெருமையும் இவருக்கு உண்டு. நல்லி திசை எட்டும் மொழியாக்க விருதுடன் பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவருக்குப் படைப்புக் குழுமத்தின் விருது கிடைப்பதில் பெரும் மகிழ்ச்சி.

# படைப்புக் குழுமத்தின் பெருமைமிகு விருதுகள் – 2024





## படைப்புக் குழுமத்தின் இலக்கியச் சுடர் விருது பெறும் எழுத்தாளர் முகில் குறித்த பகிர்வுகள்

**ஆர். முத்துக்குமார்**

எழுத்தாளர் – ஊடகவியலாளர்

சிவசுப்ரமணியன் என்ற நீளமான பெயருடன் எனக்கு அறிமுகமானவர் முகில். எப்போதும் பரபரப்பின் உச்சத்தில் இருக்கும் எழும்பூரில்தான் முகில் என்ற துறுதுறு சுறுசுறு இளைஞனாக முகிலைச் சந்தித்தேன். இயல்பாகத்தான் பேசத் தொடங்கினோம். விகடன் மாணவர் நிருபர் என்று சொன்னார். பெரிதாக ஆச்சர்யம் வரவில்லை. இதழியலில் பட்டம் பெற்றிருக்கிறார் என்று தெரிந்ததும் சற்றே புருவம் உயர்த்தினேன். இதழியல் ஆர்வம் குறித்தும் கவிதை எழுதுதல் குறித்தும் இருவரும் பேசினோம்.

‘ஆ’ என்ற பெயரில் ஒரு கவிதைத் தொகுப்பையும் ‘ம்’ என்ற பெயரில் ஒரு கவிதைத் தொகுப்பையும் கொண்டுவந்திருப்பதாகச் சொல்லி வியப்பைக் கூட்டினார். அந்தச் சந்திப்புக்குப் பிறகு நீண்ட இடைவெளி வந்துவிட்டது. பிறகு முகிலைச் சந்தித்தது கல்கி பத்திரிகை அலுவலகத்தில்தான். கல்கி இதழில் சென்னைக்கான இணைப்பிதழ் வெளியிடும் குழுவில் முகில், மருதன், கண்ணன், நான் ஆகிய நால்வரும் இணைந்து செயல்படத் தொடங்கினோம். அங்கிருந்துதான் நாங்கள் நால்வரும் கிழக்கு பதிப்பகத்துக்கு நகர்ந்தோம்.

முகிலின் சிறப்பு என்பது அவரது நகைச்சுவை இழையோடும் எழுத்து. எல்லோருக்கும் எளிதில் வசப்படாத அந்த மொழி முகிலுக்கு இயல்பாகவே இருந்தது. அது அவரது எழுத்தை மேன்மேலும் மெருகேற்றிய அம்சம். கிழக்கு பதிப்பகத்தில் இருந்தபோது திரைக்கலைஞர் ஜே.பி.சந்திரபாபுவின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார் முகில். நகைச்சுவையாக எழுதக்கூடியவர் முகில் என்பதால் சந்திரபாபுவின் வாழ்க்கைப் புத்தகம் கலகலப்புக்குப் பஞ்சமில்லாமல் இருக்குமென்றுதான் ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால் அந்தப் புத்தகத்தைப் படித்துப்பார்த்தபோது கண்ணீர் வழிந்தோடியது. அதற்குக் காரணம் அந்த வாழ்க்கையை வாழ்ந்த சந்திரபாபுவா அல்லது சந்திரபாபுவின் வாழ்க்கையை எழுத்தில் செதுக்கிய முகிலா என்பதில் எனக்கு இப்போதுவரை தெளிவில்லை. முகிலுக்குள் இருந்த நகைச்சுவையைக் கடந்த உருக்கமான எழுத்து ஆச்சரியப்படுத்தியது.

வெற்றிகரமான சந்திரபாபு புத்தகத்தைத் தொடர்ந்து எம்.ஆர்.ராதாவின் வாழ்க்கை உள்ளிட்ட வெவ்வேறு புத்தகங்களை எழுதிய முகில், ஒருகட்டத்தில் தனக்கான பாதை சரித்திரம் என்று தீர்மானித்தார். அது அகம் புறம் அந்தப்புரமாக இருக்கலாம், முகலாயர்களாக இருக்கலாம், யூதர்களாக இருக்கலாம், செங்கிஸ்கானாக இருக்கலாம், கிளியோபாட்ராவாக இருக்கலாம், ஹிட்லராக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அந்தப் புத்தகத்தில் முகிலின் ஸ்பரிசம் (Mugil's Touch) தனியாகத் தெரியும். சந்திரபாபுவாக இருந்தாலும் சரி, செங்கிஸ்கானாக இருந்தாலும் சரி, அந்தப் புத்தகத்தை உருவாக்க முகில் செலுத்தும் கவனம் கலையாத கடும் உழைப்பும் ஆய்வுக்காக அவர் செலுத்தும் மெனக்கெடலும் ஆச்சரியத்தைத் தரக்கூடியது.

ஆய்வுக்குப் பிறகு நேரடியாக புத்தகங்கள் எழுதுவது ஒரு வகை. ஆய்வைத் தொடர்ந்தபடியே வாரமிருமுறை இதழ்களில் தொடராக எழுதுவது மற்றொரு வகை. இரண்டுமே சவாலானவை. ஆனால் அந்த இரண்டு பாதையிலும் வெற்றிகரமான பயணத்தை மேற்கொண்டுவருபவர் முகில். சரித்திரம் என்பதை சமஸ்தான சரித்திரத்தோடு முகில் நிறுத்திக்கொள்ளவில்லை. உணவுக்கான வரலாற்றை உணவு சரித்திரமாகவும், உலகம் கண்டுபிடிக்கப்பட்ட கதைகளைப் பயண சரித்திரமாகவும் பதிவுசெய்திருக்கிறார். அமானுஷ்யங்களைப் பற்றியும் ஆய்வு செய்து புத்தகமாகப் பதிவுசெய்திருக்கிறார் முகில்.

முகிலின் ஆர்வமும் ஆய்வும் எழுத்துகளாகப் புத்தகங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள அதேவேளையில், அவரது எழுத்து திரைவடிவத்துக்கும் நகர்ந்திருக்கிறது. அதே கண்கள், கலியுகம் உள்ளிட்ட திரைப்படங்களின் உருவாக்கத்தில் முகிலின் எழுத்துக்கு முக்கியப் பங்குண்டு.

எழுத்தை முழுநேரத் தொழிலாக வரித்துக்கொண்டு வாழ்க்கையை நகர்த்துவது ஆகப்பெரிய சவால். அதுவொரு துணிகர முயற்சி. அந்த முயற்சியை எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமைதியாகச் செய்துகொண்டிருக்கும் முகில் அவரது புனைப்பெயருக்கேற்றாற்போல் தமிழ்ப் படைப்புலகின் உச்சத்தில் இருக்கிறார். இன்னும் உயரத்துக்குச் செல்வார்.

●

## கார்த்திக் குமார்

வாசகர், ஆசிரியர், பாவூர்சத்திரம்

புதிய தலைமுறை எழுத்தாளர்களில் வறண்ட தலைப்புகளையும் வளமானதாக மாற்றி எழுதிவரும் எழுத்தாளர் முகில் கவனிக்கத்தக்கவர். அவரது புத்தகத் தலைப்புகளே வாசிப்பைத் தூண்டுவதாக இருக்கின்றன. பயணச் சரித்திரம், கிறுக்கு ராஜாக்களின் கதை, அகம் புறம் அந்தப்புரம், உணவு சரித்திரம், நீ இன்றி அமையாது உலகு, சந்திரபாபு : கண்ணீரும் புன்னகையும் - இப்படி வாசிக்கத் தொடங்கினால் புத்தகத்தைக் கீழே வைக்கத் தோன்றாத அளவு நம்மை வசீகரிக்கத் தொடங்கும்.

நான் முதலில் வாசித்த முகிலின் புத்தகம் செங்கிஸ்கான். ஒரு பேருந்துப் பயணத்தில் 5 மணி நேரமும் எந்தெந்த ஊர்களைக் கடந்தோம் என்பதை ஒரு கணம்கூட கவனிக்காமல், செங்கிஸ்கானின் குதிரையானது மங்கோலியப் புல்வெளியில் காற்றைக் கிழித்துக்கொண்டு பயணம் செய்ததுபோல, அந்தப் புத்தக வாசிப்பு மனதுக்குள் தடதடத்தது.

2018ஆம் ஆண்டில் முதன்முதலில் முகநூல் மெஸெஞ்சரில் 'எங்கே டக்கர் சிலுவை?' என்ற கட்டுரை குறித்த கருத்தை முகிலிடம் பகிர்ந்தேன். அது முதல் நிறையவே உரையாடியிருக்கிறோம். பெரும்பாலும் எங்களது புத்தகம் குறித்த உரையாடல்கள் இரவு 10 மணிக்குத் தொடங்கி நள்ளிரவு 12 மணிக்கு மேலும் நீளும். நம்பர் 1 சாதனையாளர்களின் சரித்திரம் நூலைப் படித்தபின் எனது மகளும் முகிலின் வாசகர் ஆகிவிட்டார்.

2021, கொரோனா இரண்டாம் அலை பரவியபோது குடும்பத்தோடு தொற்றுக்கு ஆளாகி தனிமைப்படுத்துதலில் இருந்தோம். அப்போது மனத்தில் நேர்மறை எண்ணங்களை வளர்த்திட ஏற்கெனவே வாசித்தது என்றாலும் முகிலின் நூல்களான 'நீ இன்றி அமையாது உலகு' பாகம் 1 மற்றும் 2, 'நம்பர் 1' நூல்களை மீண்டும் மீண்டும் வாசித்தேன். குற்றாலம் எக்கோ பார்க்கில் ஒருமுறை கிராம்பு, ஜாதிக்காய் மரங்களைப் பார்த்தேன். உணவு சரித்திரம் பாகம் 3இல் முகில் எழுதிய கிராம்பு, ஜாதிக்காய் குறித்த வரலாற்றைப் படித்து முடித்த பிறகு, மீண்டும் அந்த மரங்களைத் தேடிச்சென்று பார்த்தேன். அதன் காய்களை ஏந்தியபோது, சரித்திரத்தில் இதற்காக மக்கள் சிந்திய ரத்தம் என் கைகளில் வழிவதை உணர முடிந்தது.

ஆசிரியராகப் பணிபுரியும் எனக்கு மாண்புமிகு ஆசிரியர்கள் என்ற தலைப்பினாலான புத்தகம், புத்துணர்வு கொடுக்கும் கையேடு என்றே சொல்லலாம். இளைய சமுதாயம் தடையின்றிக் கல்வியறிவைப் பெற்றிட, தங்கள் வாழ்வையே அர்ப்பணித்து இயங்கிக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் குறித்த கட்டுரைகள், எனக்கான வழிகாட்டும் விளக்காக அமைந்தன.

முகிலின் எழுத்து என்பது நம் நினைவுகளைப் பின்னோக்கிச் செலுத்தி, கடந்த கால அனுபவங்களைத் தட்டி எழுப்பி, ஏதோ இனம்புரியாத மகிழ்ச்சியை நமக்குள் உண்டாக்குகிறது. வரலாறு, காதல், தன்னம்பிக்கை, பயணம், உணவு என ஒவ்வொரு தலைப்பிலும் நகைச்சுவை கலந்து, துளிகூட சோர்வு ஏற்படுத்தாத எழுத்து நடை அவருடையது. சிலருக்குப் பேச்சு வழியே சொற்கள் அருவியாகக் கொட்டும். இவருக்கு எழுத்து வழியே அருவியாகக் கொட்டுகிறது.



## என். சொக்கன்

எழுத்தாளர், மென்பொருள் நிபுணர்

இன்றைக்கு இணையத்தில் எங்கு திரும்பினாலும் மீம்கள்தான். நகைச்சுவையில் தொடங்கிப் பாடம் நடத்துவது, மன உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வது, விளம்பரங்கள் என்று அனைத்துக்கும் மக்கள் மீம்களைப் பயன்படுத்துகிறார்கள். இன்றைய ரசிகர்களைச் சென்றுசேர்வதற்கு அதுதான் சிறந்த கலை வடிவம் என்று கருதப்படுகிறது. இதனால், ‘அவர் மீம் மெட்டீரியல் ஆகிவிட்டார்’ என்பது இப்போது ஒரு மிகப் பெரிய பாராட்டாகிவிட்டது. ஏனெனில், புகழ் பெற்றவர்கள், எல்லாருக்கும் தெரிந்தவர்களைத்தான் மீம்களில் பயன்படுத்துவார்கள்.

ஆனால், இந்த மீம்களெல்லாம் பரவலாவதற்கு முன்பாகவே என்னைப்பற்றி மீம் உருவாக்கியவர் ஒருவர் இருக்கிறார். அவர், எழுத்தாளர் முகில். அன்றைக்கும் இன்றைக்கும் அவர் எழுத்தாளர்தான். அதுதான் அவருடைய முதன்மையான அடையாளம். ஆனால், அந்த அழகிய கட்டடம் நகைச்சுவை உணர்வு என்கிற அடித்தளத்தின்மீது எழுப்பப்பட்டிருக்கிறது. எதைப்பற்றி எழுதினாலும் சிரிக்கச் சிரிக்க எழுதுகிறவர் அவர். அதன் ஒரு வெளிப்பாடுதான் என்னைப்பற்றியும் எங்கள் நட்பு வட்டாரத்திலிருந்த மற்ற பல எழுத்தாளர்களைப்பற்றியும் அவர் உருவாக்கிய மீம்கள்.

முகில் இந்த மீம்களை ஏன் உருவாக்கினார் என்று ஆராய்ந்தால், அவரிடம் நான்

மிகவும் வியக்கிற இன்னோர் அம்சம் தெரியவரும். அப்போது அவர் சில வரைகலை மென்பொருட்களைக் கற்றுக்கொண்டிருந்தார். வேலைக்காக இல்லை, தனிப்பட்ட ஆர்வத்தால்தான். அந்தக் கற்றுக்கொள்ளலை விரைவாக்குவதற்காகவும் அதில் சவால்களைச் சேர்த்து ஆழமாகப் பயிற்சி எடுப்பதற்காகவும் தனக்குத் தானே அவர் கொடுத்துக்கொண்ட கூடுதல் வேலைதான், நண்பர்களைக் கிண்டலடிக்கும் படங்களை உருவாக்குவது.

ஃபேஸ்புக், ட்விட்டரெல்லாம் இல்லாத அன்றைய நாட்களில் அவை ஒரு சிறு வட்டத்துக்குள்தான் பரவின. ஆனால், யாரையும் புண்படுத்தாமல் சிரிக்கவைத்தன. முகிலும் தன்னுடைய நகைச்சுவை உணர்வு, திட்டமிடுதலின் உதவியுடன் தான் விரும்பியதை விரைவாகவும் நன்றாகவும் கற்றுக்கொண்டுவிட்டார்.

எழுத்தைக் கலையாக மட்டும் பார்ப்பது ஒரு வகை. நான் அதில் கொஞ்சம் இல்லை, நிறையவே அறிவியலும் கலந்திருக்கிறது என்று நினைக்கிற வகையைச் சேர்ந்தவன். அதனால், இந்த இரண்டின் சேர்க்கையாக எழுத்தை அணுகுகிறவர்களை எனக்கு மிகவும் பிடிக்கும். அவ்விதத்தில் முகில் எனக்கு ரொம்ப நெருக்கமாகிவிட்டார்.

குறிப்பாக, ஒவ்வொரு புத்தகக் கண்காட்சிக்கும் என்ன எழுதலாம் என்று அவர் திட்டமிடுவதை ஆண்டுதோறும் ஆவலுடன் பார்க்கிறவன் நான். ஜனவரியில் கண்காட்சி என்றால் அதற்கு எத்தனை நாள் முன்பாகப் புத்தகம் தயாராகவேண்டும், அப்படியானால் லேஅவுட் பணிகள் எப்போது தொடங்கவேண்டும், அதற்கு எடிட்டிங்கை எப்போது தொடங்கவேண்டும், அதற்கு எழுதுவதை எப்போது தொடங்கவேண்டும், அதற்குப் படிப்பதை, ஆராய்ச்சியை எப்போது தொடங்கவேண்டும் என்றெல்லாம் மிக நேர்த்தியாகக் கணக்கிட்டு வேலை செய்கிறவர் முகில். அந்த ஒழுங்கும் நேர்த்தியும் என் மதிப்புக்குரியவை.

அத்துடன், தான் எழுத விரும்பும் நூல் வகைகளிலும் நல்ல தெளிவு அவருக்கு இருக்கிறது. 'Circle of competence' என்று வாரன் பஃபெட் பங்குச் சந்தைக்குச் சொன்னதை எழுத்தில் கச்சிதமாகச் செயல்படுத்துகிறவர் அவர். தன் வல்லமை வட்டத்துக்குள் அமையும் சுவையான தலைப்புகள், ஆழமான ஆராய்ச்சி, ஆர்வமூட்டுகிற, அவ்வப்போது வாய் விட்டுச் சிரிக்கவைக்கிற கலகலப்பான எழுத்து என்று திட்டமிட்டு உழைப்பவரை வாசகர்கள் அள்ளிக்கொள்வதில் வியப்பில்லை.

முகிலுடைய புத்தகங்களின் அட்டையிலிருந்து அட்டைவரை அவருடைய கைவண்ணத்தில் (அல்லது, குறைந்தபட்சம் கண்காணிப்பில்) உருவாகிறவைதான் என்பதால், உள்ளடக்கம் மட்டுமில்லை, அது வழங்கப்படும் விதத்திலும் புதுமையை, நேர்த்தியைக் கொண்டுவந்துவிடுவார். கலைமீது மட்டுமில்லை, வாசகன்மீதும் அக்கறை உள்ள மனம்தான் அப்படிச் சிந்திக்கும், செயல்படும். ஆர்ப்பாட்டமில்லாமல் தன் வேலையை ஒழுங்காகச் செய்துகொண்டிருப்பதும் ஒரு தவம்தான். முகிலுக்கு எல்லா வரங்களும் மழைபோல் பொழிய என் வாழ்த்துகள்.



# வானவில் வண்ண மின்னல்

## குலதெய்வங்கள்

"நாட்டுப்புற மக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி இந்தப் பாடத்தை நீண்ட காலத்திற்கு முன்பே கற்றுக்கொண்டனர். அவர்கள் (...கடவுளர்கள்) மனிதர்களை ஏமாற்ற வேண்டிய அவசியம் இல்லை. மனிதர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்வார்கள்.

- ஹோலி பிளாக், தி விக்கட் கிங்

குலதெய்வங்களின் தென்னிந்திய வரலாற்றை சமூக அறிவியல் அடிப்படையில் தெரிந்துகொள்வது இளைய தலைமுறையினருக்கு அடிப்படை அவசியமானது. அதற்கு முதலில் நாம் கடவுள் என்கிற புலத்தைச் சற்று புரிந்துகொள்ள வேண்டும். வரலாற்றுக்கு முந்தைய மனிதர்களுக்குத் தெய்வங்கள் மற்றும் கடவுள்கள் மீதான மதிப்பும் மரியாதையும் உருவாகிவிட்டன. ஆரம்பகால ஹோமோ சேபியன்ஸ் தங்கள் புறச்சூழ்நிலைகளில் ஒருவிதமான அமைப்பு நிலைகளை வணங்க வேண்டும் என்று நம்பினர் என்று தெரிந்துகொள்ள முடிகிறது.

கற்காலத்தின் தொடக்கத்தில் தெய்வங்கள் மற்றும் கடவுள்களுக்கான வழிபாடுகள் மற்றும் பிரார்த்தனைகளின் தடயங்கள் நமக்குக் கிடைக்கின்றன. பாலியோலிதிக் காலம் என்று குறிக்கப்பட்ட கற்காலம் சுமார் 2.6 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முதல் கி.மு.10,000 வரை பரவியுள்ளது. இந்த சகாப்தத்தில், மனிதர்கள் முதன்மையாக வேட்டைக்காரர்களாக இருந்தனர். கல், எலும்பு மற்றும் மரத்தால் செய்யப்பட்ட கருவிகளை நம்பியிருந்தனர். எழுதப்பட்ட பதிவுகள் இல்லாததால் பழங்கற்காலத்திலிருந்து வழிபாட்டு நடைமுறைகளின் நேரடிச் சான்றுகள் குறைவாகவே இருந்தாலும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குகைக் கலைகள், இறப்புச் சடங்குகளின் நடைமுறைகள், மந்திரவாத நடைமுறைகள், பிரார்த்தனைகளில் இயற்கையான கூறுகளின் பயன்பாடு போன்ற தொல்பொருள்

கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் சாத்தியமான வழிபாட்டு முறைகளின் சில அம்சங்களை ஊகித்துள்ளனர்.

பொதுவாக, தெய்வங்கள் தெய்வீக மனிதர்கள், அவைகளின் பல்வேறு சமூகங்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள அதன் பண்பாட்டு மரபுகளுக்குள் வணங்கப்படுகின்றன. இந்த 'கடவுள்களின் நிறுவனங்கள்' சாதாரண மனிதர்களுக்கும் இயற்கைக்கும் அப்பாற்பட்ட சக்திகள், பண்புக்கூறுகள் மற்றும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது. மேலும் தெய்வங்களுக்கும் கடவுள்களுக்கும் இடையே சில தெளிவான வேறுபாடுகள் உள்ளன என்றும் பரப்பப்படுகின்றன். இருப்பினும், பொதுவாக 'கடவுள்கள்' மற்றும் 'தெய்வங்கள்' என்ற சொற்கள் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் அவற்றுக்கிடையேயான வேறுபாடு என்பது பண்பாடு மற்றும் மதச் சூழலைப் பொறுத்தது. பல சந்தர்ப்பங்களில், கடவுள் என்பது ஒரு பரந்த சொல். இது பொதுவாக தெய்வீக, இயற்கைக்கு அப்பாற்பட்ட உயிரினங்களைப் பெரும் சக்தியுடனும் அதிகாரத்துடனும் குறிக்கிறது. இது பொதுவாக ஏகத்துவ மதங்களில் ஒரு தனித்துவமான, அனைத்துச் சக்திவாய்ந்த தெய்வத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சுருக்கமாக கேம்பிரிட்ஜ் வார்த்தைகளில், கடவுள் என்பது பிரபஞ்சம் அல்லது வாழ்க்கையின் சில பகுதிகளைக் கட்டுப்படுத்துவதாக நம்பப்படும் ஒரு சக்தி அல்லது இருப்பு, அவ்வாறு அதிகாரம் செய்வதற்காக பெரும்பாலும் அவர் வணங்கப்படுகிறார், அல்லது இந்த வகை சக்தி அல்லது இருப்பைக் குறிக்கும் ஒன்று.

ஆனால் தெய்வங்கள் என்பது பரந்த அளவிலான தெய்வீக அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட இறந்த மனிதர்களை முன்னிறுத்தும் சொல். இது பெரும்பாலும் முன்னோர்கள், போர் நாயகர்கள் மற்றும் கொல்லப்பட்ட பெண்களைக் குறிக்க பொது அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது. அதனால்தான் சமூக விஞ்ஞானிகள் கடவுள்களை விட தெய்வங்கள் பெரியவர்கள் என்று நம்புகிறார்கள். உண்மையில் நாகரிகச் சமூகங்கள் உருவான பிறகுதான் கடவுள் என்ற கருத்து உருவானது. உலகம் முழுவதும் மனிதர்களுக்கிடையே கடவுள் மீதான நம்பிக்கை அமைப்புகளுக்கு அமைப்பு மாறுபட்டவை. இது மனிதர்களின் ஆன்மீகம், பண்பாடு மற்றும் வரலாற்றின் பிம்பத்தைக் காலத்தினூடாகப் பிரதிபலிக்கிறது. கடவுளைப் பற்றிய மக்களின் நம்பிக்கைகள் பெரும்பாலும் மத மரபுகள், தனிப்பட்ட அனுபவங்கள், பண்பாட்டுத் தாக்கங்கள் மற்றும் தத்துவக் கண்ணோட்டங்களால் வடிவமைக்கப படுகின்றன.

கடவுள் மீதான நம்பிக்கை முறைகள் சிக்கலானவை மற்றும் ஆழமாகத் தனிப்பட்டவையாக இருக்கலாம். ஆனால், அவை பெரும்பாலும் இருப்பு, அறநெறி மற்றும் வாழ்க்கையின் நோக்கத்தைப் புரிந்துகொள்வதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குகின்றன. தனிநபர்கள் இந்த வகைகளில் ஏதாவது ஒன்றுடன் தன்னை அடையாளம் காணலாம் அல்லது வெவ்வேறு மரபுகளின் கூறுகளை இணைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்பிக்கைகளைக் கொண்டிருக்கலாம். உண்மையில் இவ்வகையான நம்பிக்கை முறைகளின் பன்முகத்தன்மை மனிதகுலத்தின் ஆன்மீக மற்றும் மனோதத்துவப் பரிமாணங்களின் சுழற்சியைப் பிரதிபலிக்கிறது எனலாம். உண்மையில் கடவுள்கள் மற்றும் தெய்வங்களின் மீதான 'மனிதனின் மரியாதை' என்பது பொதுவாக பயம் அல்லது பிரமிப்பு அடிப்படையிலானது. குறிப்பாக, மனிதர்களின் உள்ளார்ந்த மதிப்புக்கு அதிக மரியாதை அளிப்பதைப் பிரதிபலிக்கும் அணுகுமுறைகள் மற்றும் நடத்தைகளை உள்ளடக்கியதாகும்.

எளிமையான முறையில் கூறுவதானால், 'கடவுள்' என்பது நமது பிரபஞ்சத்தை உருவாக்கி அதன் மீது கட்டுப்பாட்டைக் கொண்ட ஒரு உயிரினம். அவர் அல்லது அவள் அல்லது அது என்கிற 'கடவுள்' உயர்ந்தவர், சர்வ வல்லவர், நேரம் மற்றும்

இடத்தைத் தவிர, மனிதகுலத்திற்கான நம்பிக்கையின் முக்கிய உருவம். மாற்றாக, அமைப்புகளுக்கு அமைப்பு மற்ற கடவுளர்கள் தரம் குறைந்தவராகவே உருவகப்படுத்தப்படுகிறார்கள் என்பதை நாம் மறுத்துவிட முடியாது அல்லவா? பொதுவாக ஒரு பொருள் அல்லது செயல் தத்துவரீதியாக வரையறுக்கப்படும்போது, அவற்றின் ஆதிநிலையை ஆராய்வது மனித இயல்பு. கடவுளை வரையறுக்கவும் இந்த ஆதிநிலை ஆராய்வு பொருந்தும். "கடவுள் நம்மைப் படைத்தார் என்றால், யார் கடவுளைப் படைத்தார்", நூற்றாண்டுகளாகக் கேட்கப்பட்டு விவாதிக்கப்படும் கேள்வி இது. ஆனாலும் அறிவியல்பூர்வமாகக் கடவுள் இல்லை என்று நிரூபிக்கப்பட்ட நிலையிலும் நம்மிடையே இன்னும் முழுமையான தெளிவான புரிதல் இல்லாத நிலையில் இருக்கிறோம். எனவே, கடவுள் குறித்த இந்தக் கேள்விக்குப் பதிலை நாம் இரண்டு வழிகளில் அணுகலாம். ஒன்று அறிவியல் கோணம், மற்றொன்று உளவியல் கோணம். அறிவியல் பக்கத்தின் அடிப்படையில், 'கடவுளை யார் படைத்தார்' என்ற கேள்வி முதலில் கேட்க வேண்டிய சரியான கேள்வி அல்ல. பிரபஞ்சம் கடவுளால் உருவாக்கப்பட்டிருந்தால், அந்தக் கடவுள் இந்தப் பிரபஞ்சத்திற்குள் இருக்க முடியாது அல்லவா. பொதுவாக, கண்டுபிடிப்புகள் மற்றும் கோட்பாடுகள் அனைத்திலும் காரணம் மற்றும் விளைவுகள் என்ற கொள்கையினைப் பயன்படுத்துகிறோம். மேலும் இந்தக் காரணகாரியக் கோட்பாடுகள் பிரபஞ்சம் முழுவதும் பொருந்தும் என்பது பொதுநிலை. எனவே நமது பிரபஞ்சத்திற்குள் இல்லாத ஒரு உருவம் (கடவுள்) எங்கிருந்து இயற்கையை உருவாக்கியது. அறிவியல், இந்தக் கேள்வியை பூஜ்ஜியத்தை வகுக்கும் கணிதச் செயல்பாட்டிற்கு சமமானது அல்லது அபத்தமானது என்று புரிந்துகொள்கிறது. அதனால் இந்தக் கேள்வியை அறிவியல் கடவுள் இல்லை என்ற வரையறுப்பதுடன் நிறுத்திக்கொள்கிறது. ஆனால் இந்தப் பிரபஞ் சத்தின் புரியாத பகுதியை மதம் சார்ந்த தத்துவவாதிகள் கடவுளாகப் பார்ப்பதில்தான் சிக்கல் உருவாகிறது. நிறைய விவாதிக்கலாம்.

அடுத்ததாக, மனிதகுலம்தான் கடவுளை உருவாக்கியது என்பது உளவியல் கோணம். பிரபஞ்சத்தில் அமைந்த பூமியில் இயங்கும் மனிதகுலத்தின் ஆற்றல் ஆபத்தான அளவில் அதிகமாக இருக்கிறது. (நாம் மிக நீண்ட காலமாக இப்படி இருந்ததில்லை). படிப்படியாக மனிதர்களாகிய நாம் நம்மைச் சுற்றியுள்ள இயங்கியல் சூழலைப் புரிந்துகொள்ள முயற்சித்தபோது, பூமியில் புரிந்துகொள்ள முடியாத பலவகை அறியப்படாதவைகளைக் குறித்துப் பயந்தோம். எனவே, நாம் பூமியில் உயிர்வாழ உதவிய புறச்சூழல் விசயங்கள் மற்றும் நிகழ்வுகளைப் பாதுகாப்புத் தெய்வங்களாகவும் நம்மை அழிக்க முனைந்த இயற்கை விசயங்கள் மற்றும் நிகழ்வுகளைப் பயத்தினாலும் வணங்கத் தொடங்கினோம். அப்படித்தான் நாம் சிறிதுசிறிதாக தெய்வீக அமைப்புகளை உருவாக்கினோம். மனிதனால் உருவாக்கப்பட்ட கடவுள் மீதான நம்பிக்கைக்குப் பிறகு மதங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களின் உருவாக்கம் ஏற்பட்டது. இதனடிப்படையில், எனது சிறு புரிதலில், பூமியில் குலதெய்வங்களின் உருவாக்கம் அதிர்ச்சியூட்டும் மற்றும் வியக்க வைக்கும் பண்பாட்டு வரலாற்றைக் கொண்டுள்ளதென்று நம்புகிறேன்.

குறிப்பாக இந்தியாவில் குலதெய்வங்கள் குறித்து ஆழமும் விரிவுமான வரலாறு உலகின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத நடைமுறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள பல்வேறு பூர்வகுடி மற்றும் பழங்குடிச் சமூகங்கள் அனைத்தும் இயற்கை, மூதாதையர்கள் மற்றும் இறந்தவர்களின் ஆவிகளுடன் தொடர்புடைய சடங்குகளால் கட்டப்பட்ட குலதெய்வங்களின் வரலாற்றைக் கொண்டுள்ளன. பண்டைய இந்தியாவில் குலதெய்வங்கள் மீதான நம்பிக்கை முறைகள் பலதரப்பட்டவை மற்றும் மாறுபட்டவை. அவை மனித ஆன்மீகம், கலாச்சாரம் மற்றும் வரலாற்றின் வளமான கண்ணோட்டங்களைப் பிரதிபலிக்கின்றன.

தெய்வங்களைப் பற்றிய மக்களின் நம்பிக்கைகள் என்பது அடிப்படையில் இயற்கையின் பயம் கொள்ளவைக்கும் காரணிகள், சமுதாயத்தில் பாரம்பரிய நடைமுறைகள், தனிப்பட்ட அனுபவங்கள், பண்பாட்டுத் தாக்கங்கள் மற்றும் தத்துவக் கண்ணோட்டங்களால் உருவாகின்றன. கடவுள் மற்றும் குலதெய்வம் ஆகிய இரண்டு சொற்களும் கிட்டத்தட்ட ஒரே சொல்லர்த்தமான பொருளைக் கொண்டுள்ளன, ஆனாலும் கடவுள் என்ற சொல் பெரும்பாலும் பல நிலை அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது. படைப்பாளர், ஒரு மதத்தின் தலைவர் அல்லது இயற்கையினைக் கட்டுப்படுத்தும் தலைவர் உட்பட கருத்துருவம் பொதுவாக கடவுள் என்று அழைக்கப்படுகிறார். மாறாக, தெய்வம் என்ற சொல்லுக்கு ஒருமனதாக மக்கள் வணங்கும் உருவம் என்று பொருள். கடவுள் மனிதர்களுக்கு விசுவாசத்தின் உருவம் மற்றும் உருவாக்கப்படாத பிரபஞ்சத்தின் வரையறுக்கப்படாத படைப்பாளராவார். ஆனால் தெய்வம் என்பது எப்போதும் நம்பிக்கையின் உருவமாக இருக்கிறது.

மனிதகுலத்தின் பண்பாடுகளுடன் தீவிரமாக இணைக்கப்பட்டிருப்பது தெய்வங்கள்தான். கடவுள் என்கிற கருத்து உலகளாவியதாக இருந்தாலும் மனிதகுலத்துடன் உளவியல் அடித்தளமாக இருப்பதால் குலதெய்வம் மிகவும் பலமிக்கதாக இருக்கிறதை நாம் பார்க்கிறோம். பெரும்பாலும் கடவுளை விட குலதெய்வம் அதன் தோற்றம் மற்றும் அம்சங்கள் மனித வடிவத்துடன் மிகவும் தொடர்புடையவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். குலதெய்வங்களைச் சுற்றியுள்ள கதைகளும் கட்டுக்கதைகளும் எப்போதும் நமக்குள் தொடர்புபடுத்தக்கூடிய மனிதகுலச் சூழ்நிலைகள் மற்றும் காட்சிப்பிம்பங்களைக் கொண்டவை.

குலதெய்வங்களுக்கு இந்த வகையான கதைவகைகள் உருவாக்கப்பட்டதன் பின்னணியில் உள்ள காரணம் என்னவென்றால், வரலாற்றுரீதியில் பரம்பரைத் தத்துவத்தை நிலைநிறுத்துவதுதான் எனலாம். குறிப்பிடப்பட்டதைப்போல, ஒரு குலதெய்வத்தின் தோற்றம் மற்றும் அம்சங்கள், நம்பிக்கையின் உருவமாக வைத்திருப்பது போன்றவை மக்களுக்கு ஈர்ப்பாகவும் மனதளவில் ஒரு பாதுகாப்பு உருவாவதற்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது.

இத்தகைய குலதெய்வங்களில் பெரும் பாலானவை வாழ்க்கையின் நன்மைகளைப் படைப்பவர், சிக்கல்கள் தீர்க்கும் இரட்சகர் அல்லது தீயவைகளை அழிப்பாளர் எனக் கருதப்பட்டாலும், தெய்வங்களைக் கட்டுப்படுத்தும் பெரும் கடவுளர்கள் மதங்களின் மூலம் நிலைநிறுத்தப்படுகின்றனர். இவர்களின் மூலம் குலதெய்வங்களின் ஒவ்வொரு கதையும் பெருங்கதையாடல்கள் வழியாக மனித சிந்தனைகளைக் கட்டுப்படுத்த முடிகிறதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

வரலாற்றுக்கு முந்தைய காலகட்டங்களிலும் கூட, ஏராளமான மனிதர்களின் குழுக்கள் இருந்தன. ஒவ்வொரு குழுவும் தங்கள் சொந்தப் பாரம்பரியம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மொழி, வடிவம் மற்றும் இயற்கைக்கு உகந்த புறச்சூழல்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தன. குழுவில் பலர் ஒருவருக்கொருவர் ஒத்த பல விசயங்களைக் கொண்டிருந்தனர், ஆனால் குழுக்களுக்குள் எப்போதும் குறைந்தபட்சம் ஏதாவதொரு வித்தியாசத்தைக் கைக்கொண்டுள்ளனர், இது அவர்களைத் தனித்துவமாக்குகிறது. நமது மனிதக் குழுக்களின் குலதெய்வங்கள் குழுக் கட்டமைப்புகள் மற்றும் பண்புகளை அடிப்படையாகக் கொண்டவை. கட்டமைப்புகள் மற்றும் பண்புக்கூறுகள் எப்போதும் நம்பிக்கையின் உருவத்தைப் பூர்த்தி செய்துள்ளன. பெரும்பாலும், கட்டமைப்புகள் தெய்வங்களைச் சுற்றிக் கட்டப்படுகின்றன மற்றும் நேர்மாறாகவும் உள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட பண்புக்கூறுகள் எப்போதும் தங்கள் வாழ்விடத்துடனான சுற்றுச்சூழல் உறவுகள் உட்பட குழுக்கள் மற்றும் சமூகங்களின்


சமூக மற்றும் குடிமைக் கட்டமைப்பை நேரடியாகப் பிரதிபலிக்கின்றன.

ஒரு குழுவின் நம்பிக்கைகள் மற்றும் பண்புகளைப் படிப்பது அவர்களின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் கட்டமைப்பைப் பற்றிய சிறந்த புரிதலுக்கு வழிவகுக்கும். இதன் மூலம் பலதரப்பட்ட மனிதக்குழுக்களின் உலகளாவிய தாக்கத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். மனிதகுலத்தின் நம்பிக்கை முறைகள் அதன் தொடக்கக் கட்டத்தில் கூட பல வேறுபட்ட கட்டமைப்புகளைக் கொண்டிருந்தன. அதன் பிறகு படிப்படியாக பல்வேறு வழிகளில் பெரும்பான்மையினர் மற்றும் சிறுபான்மையினரின் நவீன மத நம்பிக்கை அமைப்புகளாக உருவெடுத்தன. நிபுணத்துவமான சமூக விஞ்ஞானிகளால் வரையறுக்கப்பட்ட தெய்வங்களின் பண்புகளை இவ்வாறாகத் தொகுக்கலாம்;

1. இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் அல்லது தெய்வங்கள் பெரும்பாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறன்களைக் கொண்டுள்ளன, அதாவது மனித உலகத்தை உருவாக்கிக் கட்டுப்படுத்துவது, மனித விவகாரங்களில் செல்வாக்கு செலுத்துவது மற்றும் மரண / இருப்பின் வரம்புகளை மீறுவது போன்றவை.
2. குறிப்பிட்ட மதம் அல்லது நம்பிக்கை முறையைப் பின்பற்றுபவர்கள் தெய்வங்களுக்கு மரியாதை மற்றும் பக்தியை வெளிப்படுத்தும் ஒரு வழியாக வழிபாடு, பிரார்த்தனை, சடங்குகள் மற்றும் பிரசாதங்களில் ஈடுபடலாம்.
3. படைப்பு மற்றும் அண்டவியல் தெய்வங்கள் பெரும்பாலும் பிரபஞ்சத்தின் உருவாக்கம் மற்றும் அதற்குள் ஒழுங்கை நிறுவுவது ஆகியவற்றுடன் தொடர்புடையவை. படைப்புக் கட்டுக்கதைகள் பெரும்பாலும் உலகின் தோற்றம் மற்றும் அதன் பல்வேறு கூறுகளை வடிவமைப்பதில் தெய்வங்களின் பங்கை விளக்குகின்றன.
4. தெய்வங்கள் சில நேரங்களில் இயற்கைச் சக்திகள், தத்துவங்கள் அல்லது மனித அனுபவத்தின் அம்சங்களின் உருவகங்களாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக, ஒரு தெய்வம் அன்பு, போர், ஞானம் அல்லது கருவுறுதலைக் குறிக்கலாம்.
5. வெவ்வேறு பண்பாடுகள் மற்றும் மத மரபுகள் சொந்தத் தெய்வங்களின் தொகுதிகளைக் கொண்டுள்ளன, ஒவ்வொன்றும் தனித்துவமான பண்புகள், பாத்திரங்கள் மற்றும் புராணங்களுடன் தொடர்புள்ளவைகளாய் இருக்கின்றன. கிரேக்கப் புராணங்களின் கடவுள்கள் மற்றும் தெய்வங்கள், இந்து பெருங்கதையாடல்கள், நோர்ஸ் புராணங்கள் மற்றும் பலவற்றின் எடுத்துக்காட்டுகள் நமக்குக் கிடைக்கின்றன.
6. தெய்வங்கள் பெரும்பாலும் தார்மீக மற்றும் நெறிமுறை வழிகாட்டுதலின் ஆதாரங்களாகச் செயல்படுகின்றன, பின்பற்றுபவர்களுக்கு நல்லொழுக்கமான மற்றும் நீதியான வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது என்பது குறித்த கட்டளைகள், கொள்கைகள் அல்லது போதனைகளை வழங்குகின்றன.
7. தெய்வங்கள் தங்கள் சார்பாக மத்தியஸ்தம் செய்யலாம், பிரார்த்தனைகளுக்குப் பதிலளிக்கலாம் அல்லது அற்புதங்களைச் செய்யலாம் என்று பின்பற்றுபவர்கள் நம்பலாம். தெய்வங்கள் இரக்கமுள்ள பாதுகாவலர்கள், வழிகாட்டிகள் அல்லது தெய்வீகத் தலையீட்டின் ஆதாரங்களாகக் கருதப்படலாம்.
8. தெய்வங்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட அர்த்தங்களைக் கொண்ட படங்கள் அல்லது சின்னங்கள் மூலமாகக் குறிப்பிடப்படுகின்றன. இந்த காட்சிப் பிரதிநிதித்துவங்கள் தெய்வீகத்தை வழிபடுவதற்கும் சிந்திப்பதற்கும் உதவுகின்றன.

குலதெய்வங்கள் குறித்த இந்தக் கட்டுரை தொடரும்.

கவிஜி




# காட்சி விரிப்பில் நகரும் காலத்தின் கைகள்

திரைப்படம்: **The Beautiful Country**

தேவை விருப்பம் ஆனது. விருப்பம் ஆசை ஆனது. ஆசை பேராசை ஆனது. பேராசை பெரிய பெரிய ஆசைகளைக் கூட்டி வந்தது.

ஒரு வீடு இருப்பவனுக்கு இரண்டு கார் மேல் ஆசை வந்தது. இரண்டு கார் வைத்திருப்பவனுக்கு மூன்று பங்களா மேல் ஆசை வந்தது. மூன்று ஐந்தாகி... ஐந்து பத்தாகி... ஒரு கூட்டம் பணத்தோடு சேர்த்துத் தாங்கள் மட்டும் வாழ அதிகாரத்தையும் சம்பாரித்துக் கொண்டது. அது பெரும்பூதத் தத்துவமாகத் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

அதற்கு எதிர் நிலையில் நியூட்டனின் மூன்றாம் விதியாக ஒரு கூட்டம் காய்ந்த வயிறோடு அலைகிறது. முகவரி அற்று அடையாளமற்று நிற்கிறது. உறவுகளற்று வெறும் உயிர்களாய் இந்தப் பூமியில் தனக்கென்று ஓர் இடம் இல்லாமல் உடலற்ற ஓர் ஆன்மாவைப் போல அலைந்து திரிகிறது.

உன் பசி என் பசி தாண்டி உலகப் பசி என்று ஒன்று உண்டு. அதன் தீவிரத்தை... அதி தீவிரமாக யோசிக்கவைத்தது இந்தப் படம்.

நான் எப்போதும் சொல்வதுதான். சினிமாக்கள் வெறும் பொழுதுபோக்கல்ல. அதை மீண்டும் மீண்டும் நான் உணர்ந்துகொண்டிருக்கும் தருணங்களை நான் ஒவ்வொரு முறையும் என்னைச் சரி செய்துகொள்ளவே பயன்படுத்திக்கொள்கிறேன். அதை உங்களோடும் பகிர்ந்துகொள்கிறேன். பகிரப் பகிரப் புரியும் நடைமுறைச் சித்தாந்தங்களில் மிக முக்கிய கதைகளைக் காட்சிகளாய்க் காண நமக்கு வாய்த்திருக்கிறது.

ஒரு படம்... கூடமாட நம் சிந்தனைக்கு வலுவூட்டும் உந்துசக்தியாக இருக்கும் பட்சத்தில் அந்தப் படத்தை நாம் அலசாமல் விட்டதில்லை. அரவணைக்காமல் கடந்ததில்லை. ஒரு படத்தின் வழியாக வாழ்வுக்குத் தேவையான கதைகள் கிடைக்குமாயின் அதைக் கொண்டாடாமல் இருந்ததில்லை.

இந்த "The Beautiful Country" அந்த வகையில் ஒரு பெருந்திறவைக் கொண்டிருக்கிறது. எந்த அடைப்பும் ஒரு திறப்புக்குத்தான் காத்திருக்கிறது. எந்தத் திறப்பும் ஓர் ஆசுவாசத்துக்குத்தான் காத்திருக்கிறது. படம் நெடுக இழையோடும் வறுமையும் பதற்றமும் ஓட்டமும் பெரும் ஓட்டமுமாக அலைக்கழிக்கப்படுகின்றன. பயணத்தின் விளிம்பு நிலை எப்போது வேண்டுமானாலும் அறுந்துவிழும் நிச்சயமற்ற தன்மையைக் கொண்டிருப்பதும் திரை தாண்டிய ஆற்றாமை.

கூனிக் குறுகி அடி மட்டத்திலேயே வாழ்ந்துவிட்ட ஒரு மனிதனின் கதை. ஒவ்வொரு மனிதனுமே ஒரு கதை. எந்தக் கதை எங்கே தொடங்குகிறது.. எந்தக் கதை எங்கே முடிகிறது... யாருக்குத் தெரியும். காணுகையில் கொண்ட காட்சி விரிப்பில் காலத்தின் கைகள் நகருவதைக் கண் சிமிட்டாமல் காண்கிறது இந்தச் சின்ன வாழ்க்கை.

நாயகன் 'பின்'... அவனைச் சுற்றி இருக்கும் முள் வேலியை அகற்றப் போராடுகிறவன். எப்போதும் இறுக்கத்தின் பிடியில் இருப்பவன். அவனது சுதந்திரத் தாகத்தின் வடுக்கள் அவன் முழுக்கக் கண் திறந்தபடியே இருக்கின்றன. புழுக்கள் நெளியும் கோபங்களின் கொப்புளங்கள் அவனைப் பிராண்டிக்கொண்டே இருக்கின்றன. வெறும் நெகிழ்வுகளாலும் உறவுகளாலும் மட்டுமே இந்த வாழ்க்கை பின்னப்படுவதில்லை. அதற்குள் எதிர்பாராத முடிச்சுகளைத் தெரிந்தும் தெரியாமலும் போட்டுக்கொண்டே இருக்கிறது காலம்.

காலத்தின் கைகள் பெரும்பாலும் துப்பாக்கி கொண்ட அதிகார வர்க்கத்திடமே இருக்கிறது. அல்லது பணத்தை மூட்டை மூட்டையாகக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் மண்ணுக்குள் புதைத்துவைக்கும் முட்டாள்களிடமே இருக்கிறது.

வீட்டு வேலை செய்யும் அம்மாவுக்கு அந்த வீட்டுப் பையனால் ஏற்படும் பாலியல் வன்முறை, அதுதொட்டு நிகழும் அசம்பாவிதங்களால் நிகழும் கொலை, அதிலிருந்து தப்பிக்க நாயகனின் ஓட்டம் என ஒரு துக்கத்தின் நீட்சி அவனை விடாமல் துரத்தும் திரைக்கதையில் நாம் உணர்வு பொங்க... உள்ளம் நடுங்கப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வியட்நாமை விட்டு வெளியேறி அமெரிக்காவில் இருக்கும் தன் தந்தையைத் தேடிச் செல்லும் மிக நுட்பமான பயணம் இந்தப் படம். ஒரு சுற்றுலாக்காரன் செய்யும் பயணத்தில் இருந்து ஓர் அகதி மனநிலையின் பயணம் வெகு தூரத்தில் வித்தியாசப்படுகிறது. அதற்கு முறிந்த சிறகுகளே துணை.

நீர்வழிப் பயணத்தில் அமெரிக்கா போகும் பாதை மலேசியாவுக்குச் சென்று விட... நாயகனின் நிம்மதிக்கு ஒருபோதும் பொருள் கிடைப்பதில்லை. வலியும் துயரமுமாக எங்கெல்லாம் சிக்கிக்கொள்கிறானோ அங்கெல்லாம் அவன் சுமை கூடுகிறது. அவன் இமை மூட மாறுகிறது. அந்தக் கண்களில் ஒருபோதும் ஒளி தெரிவதில்லை. மாறாக இருள் அப்பிய விடுதலைக்கு ஏங்கும் ஒரு நூறு தேடல்கள் மட்டுமே.

உலகத்தில் ஒரு வயிறும் பசியோடு இருக்கக்கூடாது. தனிமனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றானே பாரதீ. அந்தத் தீ சுழலும் தகிப்பை உணர்ந்தேன். உள்ளே நிகழும் ஒவ்வொரு வேளையும் பசி எனும் மாயத்தின் பிடியில் தானே வெளியாய் அசைந்துகொண்டிருக்கிறது. மூச்சு விடுதலின் முழு வடிவம் வயிற்றில் இருந்தே விரிகிறது.

எந்த ஓர் உயிரும் துப்பாக்கி முனையில் நிற்கக்கூடாது. ஆயுதங்கள் பசி போக்கத்தானே தவிர பசி கொண்ட வயிறுகள் படைக்க அல்ல. ஆயுதங்கள் காவலுக்குத்தானே தவிர சாவடிப்பதற்கு அல்ல.

படத்தில் ஒரு காட்சி வருகிறது.


ஒரு குழந்தை தாகம் தாங்காமல் ஒருமுறை சாகிறது. அது முன்னமே கூட்ட நெரிசலில் சிக்கி இறந்துவிடுகிறது. அதுவே... அதற்கு முன்பே தாயைப் பிரிந்த துக்கத்தில் செத்துவிடுகிறது. ஒரே சாவு மூன்று வெவ்வேறு முனையில் இருந்து நிகழ்வதைக் காண கண்களில் துணிவு வேண்டும். இப்படி

படம் நெடுக ஒரு தாங்கொணா நடுக்கம் பயணமாய் நம்மைக் குதறிக்கொண்டே இருக்கிறது.

செத்துப்போகும் அந்தக் குழந்தையின் மரணத்தைப் போல மிகப்பெரிய கேள்வி இந்த மானுடத்துக்கு வேறு ஒன்றும் இல்லை. தனி மனிதப் பேராசையின் விளைவுக்குப் பலியான.. போபாலின் மண்ணில் புதைந்து கிடக்கும் கண்ணில்லா முகம் கொண்ட குழந்தை.. பொருளாதார அதிகாரத்தின் மிருக வேட்டைக்குப் பலியான வியட்நாமில் நிர்வாணமாய் ஓடி வரும் சிறுமி.. பத்தும் செய்த பசியின் கீறலுக்குத் தாக்கு பிடிக்க முடியாமல் மரணத்திற்காகக் காத்து மயங்கிக் கிடக்கும் ஆப்பிரிக்காக் குழந்தை... உயிர் காத்துக்கொள்ள அகதியாய்ப் பயணித்த தவிப்புகளின் சாட்சியாய்க் கரை ஒதுங்கிய சிரியா குழந்தையின் மரணம்... இவை அனைத்தும் வெறும் புகைப்படங்களோ தகவல் பரிமாற்றங்களோ ஏதோ ஓர் ஊரில் நிகழ்ந்த தொடர்பற்ற கொலைகளோ அல்ல. அது மனித இனத்தின் மிகப்பெரிய துயரம். மானுட வலிமை எளியவை மீது நிகழ்த்திய துரோகம். அவைகள் மானுட அத்துமீறலின் சாட்சியங்கள். அதிகாரத் தோட்டாக்களின் வலிமை.

உறவுச் சிக்கல்களைக் கொண்ட நகருதலின் கதவுகள் அடைபட்டே கிடக்கும் உயிர்களுக்குள் பூட்டுகள் இல்லாத சாவிகளால் அலைபாய்கின்றன. மனதின் தீரா நடையில் பசியும் சேர்ந்துகொள்ளும் மாயக் கலைகளின் மௌனமாகச் சிலபோது அழுகையும் சிரிப்பும் ஒன்றுக்கொன்று முகம் திருப்பிக் கிடக்கின்றன. அவை குழந்தைகளின் மரணங்களைக் குற்ற உணர்வே இல்லாமல் வெகு இயல்பாய் நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன.

மானுடத்தின் அடிப்படை விதி அசையும்போதெல்லாம் அங்கே உடலை மூலதனமாக்கும் இயல்பு வெளிப்பட்டுவிடுகிறது. இந்தப் படத்தில் கூட விபச்சாரத்தின் ஸ்திரமே வயிறு காக்கும் வல்லமை கொண்டவையாக இருக்கிறது. ஓர் ஆதரவான நாட்டுக்காக ஓடி ஓடி ஓயும்



கால்களில் முளைத்திருப்பதெல்லாம் வாழ்ந்த நாட்டின் வறுமையின் கொப்புளங்களே. அவனோடு பயணப்படும் லிங்... அவனோடே இருந்தாலும் பணத் தேவைக்கு உடல் திறக்கும் பதுமையாக இருக்கிறாள். அவர்கள் அமெரிக்கா சென்ற பிறகும் அவன் சைனீஸ் உணவகத்தில் வேலை பார்க்க, அவள் காபரே ஆட்டக்காரியாகவும் அதே நேரம் அவளையே விற்பவளாகவும் இருப்பது, பணத்தின் மீது இந்தச் சமூகம் வலிமையாகக் கட்டமைத்திருக்கும் சிறைகளுக்குச் சாட்சிகள்.

அவரவர் சிறைகளை விலக்கிக்கொண்டு வெளியே வரவும் பிறர் கொள்ளும் பூட்டுகளை அவிழ்க்க வேண்டி இருக்கிறது.

மனித உயிர்களின் அதிகபட்ச உச்சம் வெறும் அழுகை மட்டும்தான். அதைக் கூட இறுகிக் கனத்து வெறுத்துப் போகச் செய்வதில்... இந்த வாழ்க்கையின் திசை தன்னைத் தானே அடித்துக் கொல்லப்பட்ட ஒரு சிலுவைக் கொலையாகவே நிரூபணம் ஆகிறது....!

*திரைப்படம்:* The Beautiful Country

*இயக்குநர்:* Hans Petter Moland

*ஆண்டு:* 2004

*மொழி:* Vietnamese / English

மானசீகன்

# அணங்காய் ஒலித்த அறிவின் குரல்

சங்க இலக்கியத்தில் இடம்பெறுகிற தோழி பாத்திரத்தை நினைத்து நான் அடிக்கடி ஆச்சர்யம் அடைந்திருக்கிறேன். நாவல், சிறுகதை ஆகிய படைப்புகளைப் போல் சங்க இலக்கிய மாந்தர்கள் தனித்தனியான பாத்திரங்கள் அல்ல. எல்லாத் தலைவியும் ஒரே தலைவிதான். எல்லாத் தோழியும் ஒரே தோழிதான். அவர்கள் பேசுகிற வார்த்தைகள் சூழலுக்கேற்ப வேறுபடலாம். ஆனால் அடிப்படைக் குணச்சித்திரம் ஒன்றுதான். அனைவருமே ஒற்றை மரத்தின் வெவ்வேறு விழுதுகள்.

'தோழி' குணச்சித்திரத்தின் அடிப்படைக் கூறு தர்க்கரீதியான சமயோசிதப் புத்தி. உணர்வுகளை அறிவின் தராசில் நிறுத்திப் பார்க்கிற துல்லியமான பார்வை. தோழியின் நோக்கம் ஒன்றுதான். ஊருக்குத் தெரியாமல் நிகழும் 'களவு' சான்றோர்கள் ஒத்துக்கொள்கிற 'கற்பாகப்' பரிணமிக்க வேண்டும். அந்த மாற்றம் எவருக்கும் மனக்காயங்களின்றி, எவ்விதச் சேதாரமும் இன்றி இயல்பாக நிகழ வேண்டும்.

ஆழமாக யோசித்தால் 'தோழி' என்கிற கதாபாத்திரம் செவ்வியல் சமூகம் கண்டடைந்த கூட்டு ஞானம்.

கட்டற்ற காமம்
அலைபாயும் மனம்
குடியின் கௌரவம்
வம்பு பேசும் ஊர்

ஆகிய நான்கு அலைகளுக்கு மத்தியில் தோழிதான் சுக்கானைப் பிடித்தபடி படகைச் செலுத்துகிறாள்.

உணர்வுகளின் கொந்தளிப்பில் மோதும் நிழல்களை ஒழுங்குபடுத்தும் மையத்திரையும் அவள்தான்.

உண்மையில் 'தோழி' என்கிற பாத்திரத்தை இன்றைய பார்வையில் ஒரு பெண்ணாகக் கூட அணுகிவிட முடியாது. கிரேக்கக் கதைகளிலும், இந்தியப் புராணங்களிலும் வரும் தேவதைகள் உடல் தோற்றத்தால் குறிப்பிட்ட பாலினத்தவராக இருந்தாலும் அவர்கள் பாலினம் கடந்தவர்கள். 'சங்கப் பாடல்களின் தோழியும்' அப்படித்தான் என்று நான் கருதுகிறேன்.

இதற்கு உதாரணமாக பல தர்க்கங்களைச் சொல்ல முடியும்.

1. தோழிக்கும் தலைவியின் வயதுதான். ஆனால் அவளுக்குக் காதல் வருவதில்லை.
2. எந்தச் சூழலிலும் அவள் கலங்குவதேயில்லை. தெளிவோடு பேசுகிறாள்.
3. அவளுடைய கவலை என்பது அவள் கவலை இல்லை. அவளுடைய கண்ணீர்

அவள் கண்ணீர் இல்லை. அவள் மகிழ்ச்சி அவளுடைய மகிழ்ச்சி இல்லை. அனைத்துமே தலைவியின் உணர்வுகள். அவள் தலைவியின் உணர்வுகளுக்குக் 'கடிவாளம் பூட்டிய வாயாக' இருக்கிறாள். பல பாடல்களில் 'எங்கள் காதல்' 'எங்கள் கண்ணீர்' என்றே சொல்கிறாள் (சிறுவயதில் சங்கப் பாடல்களைப் படிக்கிறபோது நான் தலைவனைத் தவறுதலாகச் சந்தேகப்பட்டிருக்கிறேன்).

4. எல்லாப் பாடல்களிலும் மற்ற கதாபாத்திரங்கள் அவரவர் தரப்பில் நின்று பேச இவளுக்கென்று ஒற்றைத் தரப்பு இருப்பதேயில்லை. தலைவன் தலைவியைக் கூடலுக்கு அழைத்தால் 'போகாதே' என்கிறாள். பிறகு அவளே ஓடி வந்து இடம் சுட்டுகிறாள். முதலில் 'அவன் செத்துவிடுவான்' என்று தலைவியின் காதலைத் தூண்டிவிடுகிறாள். பின்னர் 'இவள் செத்துவிடுவாள்' என்று அவனை எச்சரிக்கிறாள். 'அம்மாவுக்குத் தெரிந்தால் தவறாகிப்போகும்' என்று பயப்படுகிறவள்தான் ஒருநாள் தலைவி பார்க்கும்போதே தைரியமாகக் காதலைச் சொல்லி 'அறத்தொடு நிற்கிறாள்'. அந்த வீட்டின், குடியின் மரபைப் பற்றி அவ்வளவு கவலைப்படுகிறவள் ஒருநாள் இருவரும் ஓடிப்போவதற்கும் ஏற்பாடு செய்கிறாள். கற்பு வாழ்விலும் பரத்தை வீட்டுக்குச் சென்ற தலைவனுக்கு வக்கீலாக இருந்து வாதாடுகிறாள். சில நேரங்களில் அவளே தலைவியோடு சேர்ந்து நின்று வாசலை அடைத்துவிட்டு அவனை ஏசுகிறாள்.

5. மற்ற கதாபாத்திரங்களின் அறிவு அவரவர் வயது சார்ந்து வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தோழிக்கு எல்லையே இல்லை. அவள் என்ன வேண்டுமானாலும் பேசலாம்.

இவற்றையெல்லாம் 'அவள் தலைவியின் மீது கொண்ட பேரன்பால் செய்கிறாள்' என்று கூறி ஒதுக்கிவிட முடியாது. அவளுடைய முழு கவனமும் அவர்களின் உறவு 'களவு' வாழ்க்கையில் இருந்து 'கற்பு' வாழ்க்கையை நோக்கி நகர வேண்டும் என்பதிலும், அந்தக் கற்பு உறுதியாக நிலைபெற வேண்டும் என்பதிலும்தான் மையம் கொண்டிருக்கிறது. சங்க காலத்தில் 'கற்பு' என்கிற சொல்லுக்கு ஒழுக்கம் என்றோ, பிறன்மனை தவறாமை என்றோ பொருள் இருக்கவில்லை. நூலோர் கற்பித்த வெளிப்படையான, ஆண் பெண் உறவே அப்போது 'கற்பு' என்றழைக்கப்பட்டது.

நாவல்களில் ஆசிரியர் குரல் நுட்பமாக வெளிப்படுவதைப் போல ஒட்டுமொத்தத் தொகை நூல்களிலும் வெளிப்பட்ட சங்ககால அறிவுச் சமூகத்தின் குரல்தான் 'தோழி'. அவள் இரத்தமும், சதையும் கொண்ட சாதாரணப் பெண் இல்லை. 'சூது கவ்வும்' படத்தில் விஜய் சேதுபதியின் கண்களுக்கு மட்டுமே தெரிந்து அவனை எச்சரிக்கும் 'ஷாலு' மாதிரி தலைவியின் 'கற்பு'க்காக அந்த அறிவுச்சமூகம் உருவாக்கிக்கொண்ட விசித்திரமான கதாபாத்திரம்தான் தோழி. காதலுக்குக் காரணம் பாலது ஆணை (விதி) என்று நம்பிய சமூகத்தில் அதற்கு மாற்றாக அறிவின் தரப்பாக இலக்கியத்தில் படைக்கப்பட்டவள்.

நுட்பமாக யோசித்துப் பார்த்தால் அதிகமான பெண்கள் தம் காதலைப் பகிர்ந்துகொள்ள மாட்டார்கள். ஆண்தான் அதைச் செய்வான். காரணம் காதல் என்பது பெண்ணுக்குத் தேடல். ஆணுக்குப் பதக்கம். எல்லாக் காலங்களிலும் ஓடிப்போகிற காதலர்களுக்கு நண்பன்தான் எல்லாமுமாக இருப்பான். சில நேரங்களில் 'நாடோடிகள்' படத்தைப் போல் சில நண்பர்களும் கூட இருக்கலாம். ஆனால் 'தோழி' ஓடிவந்து இவ்வளவு விசயங்களைச் செய்வதற்குச் சாத்தியமே இல்லை. சங்ககாலச் சமூகத்தில் பெண்ணுக்கு அப்படிப்பட்ட இடமும் இல்லை. தம் பெண்ணின் காதலை அறிந்தவுடன் அன்னையும், தந்தையும் பேசுகிற பேச்சை ஆழமாகக் கவனித்தாலே இதனை உணர முடியும்.

நற்றிணையில் 'அண்ணாந்தேந்திய வனமுலை தளரினும்' என்று ஒரு பாடல் உண்டு. அவர்கள் ஊரை விட்டுக் கிளம்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத் தலைவியைத் தலைவனிடம் ஒப்படைக்கிறபோது தோழி

சொல்கிறாள்.

“இனிய கள்ளையும் அணிமணிகள் பூண்ட பெரிய தேர்களையும் உடைய சோழ மன்னர்கள் கொங்கரை வென்று அடக்குவதற்காக ஒரு மாவீரனைப் பணியமர்த்தினர். அவன் யானைகள் நிறைந்த பேளர் எனும் ஊரின் தலைவனான ‘பழையன்’ ஆவான். குறி தப்பாத வேற்படையே அவனது தனிச்சிறப்பு ஆகும். அந்த வேல்போல என்றும் தவறாதது உன் வாக்குறுதி என்று நம்பித்தான் இவள் தைரியமாக இங்கே வந்திருக்கிறாள் .

நிமிர்ந்து நிற்கும் இவள் கொங்கைகள் ஒருநாள் தளர்ந்து தொங்கிப்போகும். பொன் போன்ற மேனியில் மணி போலப் புரளும் கறுத்த கூந்தல் பின்னொரு நாளில் நரைத்துப் போகும். அப்போதும் நீ இதே காதலோடு இவளைவிட்டு நீங்காமலிரு!”

காதலைப் பொறுத்தவரை கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலன்களில் முதலில் சலிப்படைவது பார்வையின் ருசிதான். அவ்வளவு உடல் உறுப்புகள் இருக்கும்போது அவள் மார்பையும், கூந்தலையும் மட்டுமே குறிப்பிட்டுச் சொல்வதற்கு நுட்பமான காரணம் உண்டு. உடல் மாற்றம் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பிப்பது இந்த இரண்டிலும்தான்.

“கச்சிருக்கும் போது கரும்பானேன்
பிள்ளை வச்சிருக்கும் போது வேம்பானேன்”

என்று பாடுகிறார் சுப்ரதீபக்கவிராயர்.

ஆணின் சொற்கள்தான் காதலின் ஆதி விதை. எல்லாப் பெண்களும் தம் மொத்த வாழ்வையும் பணயம் வைப்பது அந்தச் சொற்களை நம்பித்தான். அதனால்தான் அவன் சொற்களை ஒரு மாவீரனின் குறி தப்பாத வேலோடு ஒப்பிடுகிறாள். இது ஒரு வகையான செக்மேட். வீரயுகச் சமூகத்தில் ஓர் ஆணின் மனதில் போர்க்கருவிகளுக்கு இருக்கிற இடம் அவ்வளவு உயர்வானது. மிகச் சரியாக அந்த இடத்தைத் தொட்டுக் கடந்த காலத்தில் உணர்ந்தோ, உணராமலோ அவன் பேசிய காதல் உளறல்களுக்கு நிஜமான அர்த்தத்தை உருவாக்க விழைகிறாள்.

பாரதிதாசன் முதியோர் காதல் குறித்துப் பாடுகிறபோது,

“புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவள் உடம்பு!
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும் மூதாட்டி!
மதியல்ல முகம் அவட்கு
வறள்நிலம்! குழிகள் கண்கள்!
எது எனக் கின்பம் நல்கும்?
“இருக்கின்றாள்” என்ப தொன்றே!”

என்று உடலின் இளமை தாண்டிய உயிரின் இருப்பையே ‘காதல்’ என்று முன்மொழிகிறார். உடலின் அழகால், வார்த்தைகள் உருவாக்கும் பரவசத்தால், மெய்த் தீண்டலின் மோகத்தால், பழக்கத்தால் நீடித்த மனதின் ப்ரியத்தால் உருவாகிவிட்ட உறவுக்கு அவள் கால எல்லைகளைத் தாண்டிய அமரத்துவத்தைக் கோருகிறாள். அதுதான் ‘கற்பு’ என்று புரியவைக்கிறாள். இந்தப் பாடல் ஒரு பதின்பருவப் பெண்ணின் குரல் அன்று. சமூகக் கூட்டு நனவிலி மனமாகிவிட்ட ஓர் அறிவுஜீவியின் குரல் அல்லவா?

நவீன உலகில் சாதிப் பெருமிதத்தாலோ, மதவெறியாலோ, வர்க்கங்களின் இடைவெளியாலோ காதலர்கள் வெட்டிச் சாய்க்கப்படுகிறார்கள். சங்ககால வாழ்விலும் கூட அவை நிகழ்ந்திருக்கலாம். ஆனால் சங்கப் பாடல்களில் அந்த அவலத்தை ஒரு புலவர்கூட பதிவு செய்யவில்லை. கொல்லக்கூட வேண்டாம். உடன்போக்கில் போனவளைத் தனியாகத் திருப்பி அழைத்து வந்த மாதிரிகூட ஒரு பாடலும் இல்லை. காரணம் அங்கே ‘தோழியின் குரல்’ இருக்கிறது. அந்தக் குரலுக்குள் நுண் உணர்வும், சமூக அக்கறையும் கொண்ட ஒரு சமூகத்தின் அறிவுத் திரட்சி நிறைந்திருக்கிறது. சமகாலத்தில் எல்லாத் திசைகளிலும் நீளும் அரிவாளின் உறைந்த இரத்தத்தை உற்றுப் பாருங்கள். அதற்குள் ஒளிந்திருக்கிறது அறிவின் குரலாய் வெளிப்பட்ட ‘தோழிக்கான ஏக்கம்.’

மு.முருகேஷ்




# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1990களில் தமிழகத்தின் பல ஊர்களில் கவிதைப் பயிற்சி முகாமை நடத்தியது. புதுக்கோட்டை, ஓசூர், கோவை எனச் சில மாவட்டக் குழுக்கள் நடத்திய கவிதைப் பயிற்சி முகாம்களில் நானும் பங்கேற்றேன்.

மதுரையில் தமுஎச, திருப்பரங்குன்றம் திருமங்கலம் இரு கிளைகளும் இணைந்து 1995 நவம்பரில் மூன்று நாள் கவிதைப் பயிலரங்கத்தை நடத்தின. ஏராளமான இளைய கவிஞர்கள் பங்கேற்ற இந்தப் பயிலரங்கத்தில்தான் ஹைக்கூ கவிதைகள் பற்றிய உரை தமுஎச நிகழ்வொன்றில் முதன்முதலாக இடம்பெற்றது. ஹைக்கூ பற்றி உரையாற்ற நான் பணிக்கப்பட்டேன். என்னை அன்று உரையாற்றிட ஊக்குவித்தவர் கவிஞர் கந்தர்வன்.

அடுத்ததாக, திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு கவிதை முகாம் நடைபெற்றது. கவிஞர் கந்தர்வனையும் என்னையும் அழைத்தனர். என்னால் ஏனோ அந்த முகாமிற்கு அப்போது செல்ல முடியாத சூழல். முகாமிற்குச் சென்றுவந்த பிறகு, ஒருநாள் கந்தர்வனைச் சந்தித்தேன்.

"கவிதை முகாம் ரொம்ப நல்லா இருந்துச்சு முமு. புதுசா வர்றவங்க நல்லாவே எழுதுறாங்க. அதிலும் ஒரு பொண்ணு நல்லா எழுதுறாங்க..." என்று மகிழ்ந்த கவிஞர் கந்தர்வன், அந்தப் பெண் கவிஞர் எழுதிய கவிதையை என்னிடம் ரசித்துச் சொன்னார். அந்தக் கவிதை;

'தாமரை என்றான்
தலை குனிந்து நின்றேன்
மல்லிகை என்றான்
மயங்கி நின்றேன்
ரோஜா என்றான்
சிவந்து நின்றேன்
வார்த்தைக்கு வார்த்தை
வர்ணித்த பின்
வரதட்சணை என்றான்.
நான்
வாடி நின்றேன்.'

கவிதையை எழுதிய கவிஞரின் பெயரைக்கூட அன்று நான் கேட்கவில்லை. ஆனாலும் அந்தக் கவிதை என் மனசிற்குள் தங்கிவிட்டது. பிறகு, 'செம்மலர்' மாத இதழில் அந்தக் கவிதை வெளியானபோதுதான், அதை எழுதியவர் பெயர் 'க.பாலபாரதி' என்று தெரிந்துகொண்டேன். அப்போதிருந்தே தமிழ்க்கவிதைக்கு நம்பிக்கையளிக்கும் புதுவரவானார் கவிஞர் க.பாலபாரதி.

கதிரணம்பட்டு எனும் கிராமம் திண்டுக்கல் வட்டத்தில் உள்ளது. அந்தக் கிராமத்திலுள்ள ஒரு விவசாயக் குடும்பத்தில் 1962ஆம் ஆண்டில் பிறந்த நாகலெட்சுமிதான் பின்னாளில் பாலபாரதி ஆனார். தந்தையார் கதிரியப்பன்; தாயார் மதவானை. கதிரியப்பன் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். இரண்டு முறை பஞ்சாயத்துத் தலைவராக இருந்த அவர், அரசியலில் ஏற்பட்ட விரோதம் காரணமாகப் படுகொலை செய்யப்பட்டார். தந்தையின் மறைவுக்குப் பிறகு அம்மாவும் இறந்துபோகவே, அன்பின் ஏக்கத்தோடு வளர்ந்தார் பாலபாரதி.

பள்ளியில் படிக்கிற நாட்களிலேயே துடிப்பாகச் செயல்பட்டவர் பாலபாரதி. தினமும் வீட்டுக்கு வரும் செய்தித்தாளைப் படித்து, குறிப்புகளை எடுத்துக்கொண்டு, பள்ளியில் நடைபெறும் பிரேயரில் செய்திகளைச் சொன்னார். இதனால் நாட்டுநடப்புகளைத் தினமும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு இயல்பாக வாய்த்தது.

ஆரம்பப் பள்ளியில் படிக்கும்போது பழனிசாமி எனும் ஆசிரியரும், உயர்நிலைப் பள்ளியில் படிக்கையில் எட்டாம் வகுப்பு ஆசிரியராக வந்த அ.சிவசுப்பிரமணியனும் முற்போக்குச் சிந்தனைகளுடன் வகுப்பில் பாடம் நடத்தியதோடு, புத்தகங்களையும் கொடுத்து வாசிக்கத் தூண்டினார். வாசிப்பின் தாக்கம் பாலபாரதிக்கு புதிய உலகத்தைக் காட்டியது. மாணவர்கள் கதை, கவிதை எழுதுவதையும் ஆசிரியர் ஊக்கப்படுத்தவே பாலபாரதிக்கும் எழுதுவதிலும் ஆர்வம் உண்டானது.

'செந்தளிர்' எனும் கையெழுத்துப் பத்திரிகை பள்ளியின் சார்பில் நடத்தப்பட்டது. அதில்தான் பாலபாரதியின் முதல் படைப்பான 'எச்சரிக்கை நோட்டீஸ்' எனும் சிறுகதை வெளியானது.

பள்ளிப் படிப்பினைத் தொடர்ந்து, பி.எஸ்.சி., பட்டப் படிப்பையும் முடித்த பாலபாரதி, சத்துணவு ஊழியராகப் பணியில் சேர்ந்தார். அப்போது 'தீ' எனும் பெயரில் ஒரு கையெழுத்துப் பத்திரிகையையும் நடத்திவந்தார். திண்டுக்கல் மாவட்ட நூலகத்தில் வைக்கப்பட்ட அந்த 'தீ' பலரிடத்தும் பற்றியது. அந்த இதழினைப் பார்த்த தமுஎச தோழர்கள் பாலபாரதியைத் தொடர்புகொண்டனர். பின்னர் தமுஎச கூட்டங்களுக்குச் செல்வதும், கவிதைகளை வாசிப்பதுமாக இருந்தார்.

'அம்மாவின் மடி சுகமானதுதான்!
அம்மா
இருப்பவர்களுக்கு...'

என்று தாயின் அன்பிற்கான ஏக்கத்தை எழுதியதோடு நில்லாமல், பெண் உரிமைக்கான களத்தில் நின்று, ஆதரவு குரல் கொடுக்கும் கவிதைகளையும் எழுதினார் பாலபாரதி.

'அச்சம்
மடம்
நாணம்
பயிர்ப்பு...
போர்க்களத்தில் நிற்கும்
எனக்கு எதற்கு..?'

சத்துணவு ஊழியர் சங்கப் போராட்டங்களில் நின்று முழங்கிய பாலபாரதி, இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தில் முன்னணி ஊழியராகவும் செயல்பட்டார். பின்னர், சத்துணவு ஊழியர் பணியை ராஜினாமா செய்துவிட்டு, 1991இல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியரானார்.

பெண்ணுரிமைக்காகவும், சமத்துவமான சமுதாயம் உருவாக வேண்டுமென்கிற பேராவலிலும் போராட்டங்களுக்குத் தலைமையேற்ற கவிஞர் பாலபாரதி, சமூக எதார்த்தத்தை உள்வாங்கிக்கொண்டு, அதிலிருந்தே தன் கவிதைகளை எழுதிவந்தார்.



'வேலு நாச்சியாராய்
குதிரை மீது ஏறி வந்தேன்!
இராணி மங்கம்மாளாய்
வீரவாள் சுழற்றினேன்!
ஜான்சிராணியாய்
எதிரிகளைப் பந்தாடினேன்...
குக்கர் சத்தம் கேட்டது
சமையலறைக்குள்
ஓடினேன்!'

இதுவே கவிஞர் பாலபாரதியின் எதார்த்தக் கவிதைகளுக்கான சான்று.

எல்லோருக்குள்ளும் கனவுகள் இருந்தாலும், அந்தரத்திலேயே பறப்பது எதார்த்தமானதல்லவே. சமூக நடப்புகளை அறிந்து, தெளிந்து, அதிலிருந்து வேர்விடும் கவிதைகளே, போராட்டங்களுக்கான ஆயுதமாகவும் பயன்படும். அப்படியான கவிதைகளை எழுதுவதில் வல்லவராக வலம்வந்தார் பாலபாரதி.

'ஆயுதம்' என்றொரு கவிதை.

'எல்லாவித ஆயுதங்களோடும்
பதுங்கி இருக்கிறீர்கள்!
எதிர்கொள்வதற்கு
என்னிடத்தில் எந்த
ஆயுதம் இருந்துவிடப்
போகிறது?
நியாயம் என்ற
பேராயுதம் தவிர!'

சத்தியத்தைச் சுமந்துநிற்கும் நியாயத்தை விட வேறென்ன பெரிய ஆயுதம் வேண்டும்..? கவிஞரின் கையிலிருந்த நியாயமே அவருக்கான கவிதாயுதமானது. பல களங்களில் நின்று போராடி வெற்றியை ஈட்டித் தந்தது அந்த நியாயமே.

'கிராமத்து
வீடுகளில் கூட
ஹார்லிக்ஸ்
காம்ப்ளான்
பாட்டில்கள்...
ஒன்றில் உப்பும்
இன்னொன்றில்
ஊறுகாயுமாக!'

நம் மனதைச் சுடும் சமூக உண்மையிது! ஏழைகளின் வீடுகளுக்குப் பழங்கள் தேடிவருவது கூட அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும்போதுதானே..!

பேருந்துப் பயணங்களில் நாம் எல்லோரும் சந்திக்கும் ஓர் அனுபவத்தை, மிக நேர்த்தியாகக் கவிதையாக்கியுள்ளார் பாலபாரதி. அப்படியாக, கவிஞர் பாலபாரதி எழுதி, எனக்கு மிகவும் பிடித்த பல கவிதைகளுள் இதுவுமொன்று.

'மாற்றம்' என்பது அதன் தலைப்பு.

'ஊருக்குள் சென்ற
ஒற்றையடிப்பாதை
தார்ச்சாலையாக
மாறி இருந்தது!
சுரைக்கொடி படர்ந்த
கூரை வீடுகள்
ஆண்டனாக்களை
சுமந்து நின்றன!
கிளித்தட்டு விளையாடிய
பிள்ளைகள்
கிரிக்கெட் மட்டையோடு
திரிந்தார்கள்!
பகலிலே நைட்டியணிந்து
தண்ணீர் பிடிக்கச் சென்றார்கள்
இளம் பெண்கள்!
இன்சாட் 2இ பற்றியும்
இண்டர்நெட்டில் ரிசல்ட் வந்தது
பற்றியும் பேசி மகிழ்ந்தார்கள்
டீக்கடைகளில்.
தாழ்ந்த சாதி பிணத்தை
எங்கள் சாதியோடு
புதைப்பதா என்ற
சண்டை மட்டும்
நடந்து கொண்டேயிருந்தது
எங்கள் ஊர் சுடுகாட்டில்.'

வாசித்த கணத்தில் என்னை ரொம்பவும் பாதித்தது இக்கவிதை. கவிஞரை நேரில் சந்தித்து, எனது பாராட்டைச் சொல்ல வேண்டுமென்கிற ஆசை வந்தது. செல்பேசி வசதியில்லாத அக்கால நிலையில், திண்டுக்கல் போகும்போதெல்லாம் சிபிஎம் அலுவலகத்திற்கும் சென்று விசாரிப்பேன்.

"இப்பத்தான் ஆர்ப்பாட்டத்துக்காகத் தோழர் கிளம்பிப் போனாங்க..!"

"கட்சி செயற்குழு கூட்டத்திலே இருக்காங்க..!"

இப்படியாகவே பதில்கள் வரும். கவிஞரைச் சந்திக்கும் வாய்ப்பு பல்லாண்டுகளுக்குப் பிறகு எனக்கு வாய்த்தது. அதுவும் ஊட்டியில்.

1998 ஏப்ரலில் எனக்கும் வெண்ணிலாவுக்கும் திருமணம் நடைபெற்றது. மே மாதத்தில் ஒருநாள் தோழர் பத்ரி என்னை அழைத்தார்.

"தோழர், இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனியில் ஒரு விழா. நீங்களும் வெண்ணிலாவும் அவசியம் வரணும்" என்றார். இருவரும் சென்றோம். அந்த விழாவுக்குத் தோழர் பாலபாரதியும் வந்திருந்தார்.

முதல் சந்திப்பல்லவா... தோழரோடு அவரது கவிதைகள் குறித்துப் பேசினேன். மேலும், அவரது கவிதைகள் நூலாக வெளிவர வேண்டுமென்கிற என் விருப்பத்தையும் பகிர்ந்தேன். "அவசியம் கொண்டு வர்றேன்... தோழர்" என்றார் பாலபாரதி. "அரசியல் செயல்பாடுகளோடு, கவிதைகளையும் எழுதுங்க... தோழர்" என்றேன். சிரித்தபடியே 'சரி' என்றார். நான் சொன்னதற்காக அல்ல... அவருக்குள்ளிருந்த கவிதை மனம், பாலபாரதியைத் தொடர்ந்து எழுதவும் வைத்தது. செம்மலர், மகளிர் சிந்தனை இதழ்களில் கவிஞரது கவிதைகளைப் படித்து வந்தேன்.

தலைப்பு: 'நன்றி'

'பேருந்து நெரிசலில்
சிக்கித் தவித்த அந்தத்
தாயிடமிருந்து
குழந்தையை வாங்கினேன்.
இறங்கிச் செல்கையில்
நன்றியோடு பார்த்தாள்...
கைப்பிள்ளையின்
கால் கொலுசைத்
தடவியபடி!'

பாவம்... மனித மனம் என்ன செய்யும்..? ஒரு பக்கம் நன்றியுணர்வு மேலிட்டாலும் இன்னொரு பக்கம் அச்சமும் கலந்துதானே மனிதர்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

'ஒவ்வொரு பூவும்
கவிதையாய்
தெரிகிறது!

ஒவ்வொரு கவிதையும்
எனக்குள்
பூவாய் மலர்கிறது!'

பாலபாரதி எழுதிய கவிதைகள் வம்சி வெளியீடாக ஆகஸ்ட் 2005இல் 'சில பொய்களும் சில உண்மைகளும்' எனும் நூலாக வெளியானது.

2001ஆம் ஆண்டில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் திண்டுக்கல் தொகுதியில் சிபிஎம் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார் பாலபாரதி. தொடர்ச்சியான மக்கள் பணிகளில் ஈடுபட்ட போதிலும், அவ்வப்போது கவிதைகளையும் எழுதினார்.

2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு, வெற்றி பெற்றார். மூன்றாவது முறையாகவும் போட்டியிட்டு, 2016 வரை சட்டமன்ற உறுப்பினராக இருந்த பாலபாரதி, கட்சியின் சட்டமன்றக்குழுத் தலைவரானார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினராகவும், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநிலச் செயலாளராகவும், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் மாநிலத் துணைச் செயலாளராகவும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக்குழு உறுப்பினராகவும் இன்றளவும் தொடர்ச்சியாகப் பணியாற்றிவருகிற பாலபாரதி, பொதுவாழ்க்கையில் ஈடுபடும் ஒருவர் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிவரும் மகத்தான அரசியல் ஆளுமை என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

'இந்து தமிழ் திசை' நாளிதழில் நான் பணியில் சேர்ந்த பிறகு, 'நான் என்ன வாசித்தேன்..?' எனும் தலைப்பில் 2016 ஜனவரியில் கவிஞர் பாலபாரதியிடம் ஒரு செல்பேசி வழி உரையாடலை நிகழ்த்தினேன். அந்த உரையாடலில் கவிஞர் சொன்னதை அப்படியே இங்கே பந்தி வைக்கின்றேன்.

"எங்கள் ஊரிலுள்ள பஞ்சாயத்து அலுவலகத்துக்கு வரும் தமிழக அரசின் 'சீரணி' செய்தி இதழையும், செய்தித்தாள்களையும் தொடர்ந்து படிப்பேன். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எழுதிய 'மலரும் மாலையும்' பாடல் புத்தகம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

பிறகு, கவிஞர் தணிகைச்செல்வன் எழுதிய 'சமூக சேவகி சேரிக்கு வந்தாள்' கவிதைத் தொகுப்பும், பி.ஆர்.ராமேஸ்வரன் மலையாளத்தில் எழுதி, தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 'பிணந்தின்னிகள்' நாவலும் என்னை ஈர்த்த புத்தகங்கள். 'இவர்தான் லெனின்' எனும் லெனின் வாழ்க்கை குறித்த புத்தகமொன்று இன்னமும் என் நினைவில் இருக்கிறது. லெனினின் குழந்தைப் பருவம் தொடங்கி, அவரது படங்களும், அதனருகில் லெனின் பற்றிய இரு வரிச் செய்திகளுடன் இருந்த அந்தப் புத்தகம் என் மனதில் ஆழமாகப் பதிந்துபோனது.

நிரஞ்சனா எழுதிய 'நினைவுகள் அழிவதில்லை' என்னை வெகுவாய்க் கவர்ந்த புத்தகம். இதுவரை மூன்றுமுறைக்கு மேல் படித்திருக்கின்றேன். ஒவ்வொரு வாசிப்பிலும் எனக்கு இந்தப் புத்தகம் புதிய உத்வேகத்தைத் தருகிறது. இயக்கம் கட்டுவது பற்றியும், கொள்கை வழி உறுதியாய் நிற்பவர்களைத் தூக்கில் போடுவதைப் பற்றியும் படிக்கும்போதும் என் மனம் கனத்துப் போகும். இடதுசாரி இயக்கத்தோடு என்னை இணைத்துக்கொள்ளத் தூண்டுதலாக இருந்ததும் இந்தப் புத்தகம்தான்.

பிறகு, மக்சிம் கார்க்கியின் 'தாய்', எங்கெல்ஸின் 'குடும்பம் அரசு தனிச்சொத்து', ராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய 'வால்கா முதல் கங்கை வரை', இ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு எழுதிய 'ஒரு கம்யூனிஸ்ட்டின் நினைவலைகள்' போன்ற நூல்கள் நான் விரும்பிப் படித்தவை. கொள்கை சார்ந்த நூல்களைப் படிப்பதோடு, இலக்கிய நூல்களையும் படிப்பது பிடிக்கும்.

புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, கி.ராஜநாராயணன், கு.சின்னப்ப பாரதி ஆகியோரின் சிறுகதைத் தொகுப்புகளைப் படித்திருக்கிறேன். பெண்ணியம் சார்ந்த நூல்களையும், பெண் கவிஞர்கள் எழுதிய நூல்களையும் தொடர்ந்து வாசித்து வருகிறேன்.

புத்தகம் படிப்பதென்பது எனக்குப் பிடித்தமான ஒன்று. நேரம் கிடைக்கும்

போதெல்லாம் படிக்கத் தொடங்கிவிடுவேன். பயணப் பொழுதுகளிலும் புத்தகம் படிப்பேன். எங்காவது பேசச் சென்றால், அதற்கான தரவுகளைத் தேடிப் புத்தகங்கள் படிப்பேன். நாம் இதுவரை பார்த்தறியா உலகின் புதிய சாளரங்களாக இருந்து நமக்குப் பலவற்றையும் அறியத் தருபவை புத்தகங்களே.”

*19.01.2016* தேதியிட்ட நாளிதழில் வெளியான பாலபாரதியின் இந்தப் பகிர்வுக்கு வாசகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது.

படிமங்கள், குறியீடுகள் ஏதுமின்றி, இஸங்களின் வழிநின்று இருண்மைக்குள் புதையாமல் எளிய மொழியில் வாழ்வியல் உண்மைகளைக் கவிதைகளாக்கும் கவிஞர் பாலபாரதியின் கவிதைகள் மக்களுக்கானவை. கவிஞரைப் போலவே எளிமையும் உண்மையும் பொதிந்தவை அவரது கவிதைகள் என்பேன்.

முதல் கவிதை நூல் வெளியான ஏழாண்டுகளுக்குப் பிறகு, கவிஞரது இர்ணடாவது கவிதை நூலாக ‘அவர்களும் அவர்களும்’ *2012* நவம்பரில் உயிர் எழுத்து வெளியீடாக வந்தது.

அந்த நூலிலுள்ள ‘அவரும் இவரும்’ எனும் கவிதை.

‘அரசு வேலை கிடைக்க
ஆண்டவனிடம்
வேண்டினான் பக்தன்.
அகவிலைப்படி உயர்வு
கேட்டு அரசிடம்
வேண்டினார்
அர்ச்சகர்!’

கவிதை நூல்களோடு தோழர்கள் பாப்பா உமாநாத், என்.வரதராஜன் பற்றிய நூல்களையும், ‘எரிக்கும் பூ’ (குமுதம் சிநேகிதி வெளியீடு), ‘பெண்’ (இந்து தமிழ் திசை வெளியீடு) எனும் இரு கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார்.

இயல்பிலேயே போராட்டக் குணம் கொண்ட கவிஞர் பாலபாரதி, தன் கவிதைகளைப் போராடும் மக்களின் பக்கமாக நின்று, அவர்களுக்கான மொழியிலேயே படைத்தார்.

கவிஞரது தொகுப்பில் சிறியதும், பெரியதுமான பல கதைக் கவிதைகள் இருந்தாலும் எனக்கு மிகவும் பிடித்த ஒரு க(வி)தைக் கவிதை ‘அப்பாவின் தோழி.’ சிறியதென்றாலும் பல செய்திகள் இதில் உட்பொதிந்துள்ளன.

‘சனிக்கிழமை
எண்ணெய்க் குளியலுக்குப்
பிறகு அப்பா
காணாமல் போவார்!
கோம்பைச் சந்தையில்
அப்பாவோடு அவரது
தோழியையும் பார்த்ததாகச்
சந்தைக்குப் போய் வந்தவர்கள்
சொல்லிக்கொண்டார்கள்!
பிறகொரு நாளில்
பள்ளிக்குச் செல்கையில்
வளையலும், செருப்பும்
வாங்கிக் கொடுத்த
பெண்தான் அப்பாவின்
தோழி என
அறிந்து கொண்டேன்!
எப்போதாவது
எங்காவது
இப்போதும் கூடும்
வாரச் சந்தைகளைப்
பார்க்கும்போதெல்லாம்
நினைவுக்கு வந்து
தொலைக்கிறது
அப்பாவின் தோழியும்
அம்மாவின்
இயலாமையும்!’

‘வாழ்க்கை என்பது ஒரு நாடக மேடை; அதில் நாமெல்லாம் நடிகர்கள்’ என்றார் சாக்ரடீஸ். ‘இந்த வாழ்க்கை ஒரு போராட்டக் களம். நாமெல்லாம் அதில் போராளிகள்’ என்பதைத் தனது கவிதைகளினூடாகவும் அரசியல் செயல்பாடுகளாலும் சொல்லிவரும் கவிஞர் பாலபாரதியின் பணிகள், மக்களுடன் களத்தில் கைகோத்து சேர்ந்து நின்றபடி என்றும் தொடரும்.

`- இன்னும் வரும்

# வேல்கண்ணன்



இ.
பந்தி அமர அனுமதி மறுக்கப்பட்டு
மிச்சத்தில் வயிறு நனைத்தவருக்கு
கேட்கப்பட்ட கேள்வி
“அறுசுவையில் எது சிறந்தது?”

ஆ.
கர்ப்பக்கிரகத்து
எண்ணெய்ப் பிசுக்கின் வாசனை குறித்த
உங்களின் கவிதைக்கு விருது வாங்கி இருக்கிறீர்கள்
கும்மிருட்டு குறித்த
என் கவிதையை இருளுக்குள் வீசி எறிகிறேன்


அ.
கடந்து செல்லும் ஒவ்வொரு முறையும்
வலுக்கட்டாயமாக என் முகம் பார்க்க மறுத்தீர்கள்
உங்கள் கனவில் என் நினைவுச்சின்னம்
தலைகீழாய்த் தொங்குகிறது



அமிர்தம் சூர்யா

இஸங்கள் பற்றிய ஒரு அறிமுகத் தொடர்

# சிலப்பதிகாரத்தில் வரும் பேய், பூதங்களும், "கோத்தா டேய், லவ்டேகா பால்" என்று கோபத்தில் சொன்ன கணினியும்





மாய யதார்த்தம், ஜால யதார்த்தம், மாந்திரீக யதார்த்தம், அற்புத யதார்த்தம், மிகு புனைவு என்றெல்லாம் பெயர் சூட்டிக்கொண்ட மேஜிக்கல் ரியலிசம் பற்றி இந்த மாதம் தொடரில் எழுதப்போறேன் ஜி என்று காரைக்காலில் பத்மஜா நாராயணன் நூல் வெளியீட்டுக்குப் போய், பத்ரகாளி அம்மனைத் தரிசித்துவிட்டுக் காரில் நானும் திருப்பூர் கிருஷ்ணனும் திரும்பிக்கொண்டிருந்தபோது சொன்னேன்.

திருப்பூர் கிருஷ்ணன் எழுத்தாளர் மட்டுமல்ல, மூத்த பத்திரிகையாளரும் கூட. அதை விட முக்கியம் அவருடன் பயணம் மேற்கொண்டால் அவர் சந்தித்த இலக்கியவாதிகள் மற்றும் இலக்கியக் கதைகள் பற்றிய அனுபவங்களை எல்லாம் சொல்லிக்கொண்டே இருப்பார். எதை நினைவுக் கிடங்கில் வைப்பது எதை விடுவது என்று தெரியாது. இதனால் நான் என்ன செய்வேன்னா அவர் சொன்ன சில விஷயங்களைக் காரை விட்டு இறங்கியதும் போனில் ரெக்கார்டிங் போட்டு அவர் சொன்னதை என் நினைவிலிருந்து அப்படியே நான் பேசிப் பதிவு செய்துகொள்வேன். ஏம்பா அதுக்குக் காரிலேயே ரெக்கார்டிங் ஆன் செய்து அவர் குரலில் அதைப் பதிவு செய்யலாமுன்னு சொன்னீர்கள் என்றால் அது அறமில்லை. அப்படி பதிவு செய்வதாகத் தெரிந்தால் அந்தக் குரலின் ஜீவிதம் குலைந்துவிடும்.. கான்சியஸ்னஸ் ஆகிடும்.

சரி விஷயத்துக்கு வரேன். மேஜிக்கல் ரியலிசம் பற்றி எழுதப்போறதா சொன்னதும் சரி உனக்குத் தெரிந்த மேஜிக்கலைச் சொல்லு சூர்யா என்றார்.

நான் சொல்ல ஆரம்பித்தேன்..

சுஜாதாவின் ஒரு சிறுகதையில்.. இளமையாவதற்கு அதாவது முதுமையிலிருந்து



பழையபடி இளமைக்கு மாறுவதற்குப் பல வருடங்கள் போராடி ஒருத்தன் ஒரு மருந்து கண்டுபிடிப்பான். ஆனால் பரிசோதித்துப் பார்க்க யாரும் முன்வராதபோது கட்டிலில் உட்கார்ந்தபடி யோசிப்பான். மனைவி கடைக்குப் போயிட்டு வந்துடுறேன்னு வெளியே போனதும், அந்த மருந்தை அவனே சாப்பிட்டுப் பரிசோதிக்க முடிவெடுப்பான். முதலில் ஒரு டோஸ் சாப்பிடுவான். நரைச்ச முடி போய்த் தோல் சுருக்கம் போய் ஒரு பத்து வருடம் குறைஞ்சா மாதிரி உடம்பு மாறிடும். அவனுக்கு சந்தோஷம் தாங்க முடியாது, இருக்காதா பின்னே, ஒரு மகா அரிய கண்டுபிடிப்பாச்சே. இனி உலகமே அவன் பின்னால். இனி அடுத்த டோஸ் சாப்பிட்டா தமது உடல் கல்லூரிக் கால உடம்பைப் பெறமுடியும். ஆசையில் இன்னொரு டோஸ் சாப்பிட அது வெற்றிகரமான கல்லூரிக் கால உடம்பைத் தந்துடும். ஆர்வக் கோளாறில் இன்னொரு டோஸும் சாப்பிடுவான். அதற்குள் மனைவி வந்துடுவா.. என்ன இது குழந்தை அழுவுற சத்தம் கேட்குதேன்னு ஓடிப் பார்த்தால் கட்டிலில் ஒரு குழந்தை அழுதுகொண்டிருக்கும்.. இந்தக் கதை வரும் கால விஞ்ஞானத்தைப் பறைசாட்டும் கதையாக இருந்தாலும் வளர்ந்த மனிதன் குழந்தையாக மாறும் மேஜிக் இதில் உண்டு. ஆனால் இந்த மேஜிக்கை அவர் யதார்த்தத்தில் கட்டமைத்திருப்பார். இதை நான் சொல்லி முடித்ததும் திருப்பூர் கிருஷ்ணன் நான் ஒரு கதையைச் சொல்றேன்னு சொன்னார். அது குறித்து உரையாடல் தொடர்ந்தது. அது என்ன என்று பின்னர் பார்ப்போம்.

அதற்கு முன் இந்த மேஜிக்கல் ரியலிசம் பற்றிக் கொஞ்சம் அசை போடலாம். இந்த யுக்தி நமக்குப் புதியது அல்ல. நம் வாழ்வோடு ஆதியிலிருந்து இணைந்தே இருந்தது. நமது புராண இதிகாசங்களில், நடக்க சாத்தியமற்ற யோசிக்கவே முடியாத அபரிதமான மாய ஜாலக் கதைகள் உண்டு. அதில் நாம் பார்க்காத மேஜிக்கா? அக்கதைகளின் புனைவுகள் அனைத்தும் மேஜிக்கல் ரியலிசம்தானே. ஆனால் அது நம்பிக்கை, கலாச்சாரம், பண்பாடு சார்ந்து இணைந்துவிட்டால் அதை மேஜிக் ரியலிசக் கூறுகளாக நாம் பார்க்கக்கூட முடியாது. ஒரு எழுத்துக் கலைஞன் படைப்புகளாக நம்மால் வாதிட முடியாது.

மலையை மத்தாக மாற்றி, பாம்பைக் கயிறாகக் கொண்டு கடலைக் கடையும்போது மலை உள்ளே மூழ்கிவிடாதா? அதைத் தாங்கி நிற்பதற்கு கடவுளின் ஆமை அவதாரம் என்பதும் இரு பக்கங்கள் இரு விதமான சக்தி கொண்டவர்கள் கடைகிறார்கள் என்பதும் எவ்விதப் பிரமாண்டமான மேஜிக்கல் ரியலிசம்.

ஒரு மரத்தின் கீழ் நின்று நீ எதைக் கேட்டாலும் கேட்டதை எல்லாம் தரும் வல்லமை கொண்ட கற்பக விருட்சம், வானத்துச் சூரியனுக்கும் பூமிப் பெண்ணுக்கும் பிறந்த கர்ணன், சொன்னபடி கேட்கும் மூதாதையரின் எலும்பில் செய்த சகுனியின் தாயத்துக் கட்டை, நாம் வழிபடும் காளிக்கு 16 கரங்கள், சபையில் உருவ உருவ வந்துகொண்டிருக்கும் பாஞ்சாலி புடவை.. இப்படி நீண்டுகொண்டே போகும் நமது

இதிகாச புராண காப்பிய மேஜிக்கல் ரியலிசம் நமது வாழ்வில் ஒன்று கலந்து காலங்காலமாய் இங்கு அந்தப் பெயரில் இல்லாமல் வாழ்வின் இயக்கமாக இருக்கிறது. கேட்டா 16ஆம் நூற்றாண்டில் இந்த மேஜிக்கல் ரியலிசம் தோன்றியதாம். நமது ஆதி கால வேப்பிலைக்கு அயல்நாட்டுக்காரன் உரிமை வாங்கி வச்சிக்கிட்டு இருப்பது போலத்தான் இதுவும் என்று உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் இப்போதைக்கு அது குறித்துப் பேச நேரமில்லை.

ஏம்பா சூர்யா, இப்படி இந்துத்துவா ரேஞ் சிலதான் பேசுவியா. மூடநம்பிக்கையதான் மேற்கோள் சொல்லுவியா, நல்ல தமிழ் இலக்கியப் பிரதியில் மேற்கோள் இல்லையா எனச் சிலர் சொல்லக்கூடும். அவர்களுக்காக... சிலப்பதிகாரம் தமிழின் முக்கிய இலக்கியப் பிரதிதானே. இசை, கலைகள் குறித்தெல்லாம் அதில் நமக்கான ஆவணம் உண்டல்லவா. அதில் மேஜிக்கல் ரியலிசக் கூறுகள் சில...

கனாத்திறம் உரைத்த காதையில் படுபிணம் தா என்று பறித்து இடு பிணம் தின்னும் இடாகினி பேய் செய்தவம் இல்லோர்க்கு எந்த தேவரும் வரம் கொடார் என்று கூறி மாலதியின் குழந்தையைப் பறித்து வாயில் போட்டு விழுங்கும் காட்சி உண்டு.

நாடுகாண் காதையில் கவுந்தியடிகள் நரிகளாகப் போகுமாறு சபிக்க அவர்கள் நரிகளாக மாறுகிறார்கள்.

இந்திர விழவூரெடுத்த காதையில் சதுக்கப் பூதம் வருகிறது. அது அறத்துக்கு எதிரானவர்களைப் பிடித்துத் தரையில் அடித்துக் கொன்று உண்கிறது.

இப்படியாக சட்டம் ஒழுங்கை மன்னனும் காவலர்களும் செய்யல.. பேய் பூதங்கள்தான் செய்கின்றன. இதெல்லாம் மேஜிக்கல் ரியலிசக் கூறுகளே.. ஆக சிலப்பதிக்காரம் அதிகாரத்துக்கு எதிரான பிரதியே.

மீண்டும் விஷயத்துக்கு வருவோம்..


இந்த மேஜிக்கல் ரியலிசம் 1920வது ஆண்டு வாக்கில் ஜெர்மனியில் கருத்துருவாகத் தோன்றி, பின்னர் 1940களில் மத்திய அமெரிக்காவில் அதாவது லத்தீன் அமெரிக்க நாடுகளில் பரவியது. பின்னர் இது அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்குத் தொற்றிக்கொண்டது. பின்னர், இங்கிலாந்து, ஐரோப்பா என்று இன்னும் வியாபித்துக் கிழக்கு நாடுகளிலும் இந்த மேஜிக்கல் ரியலிசம் ஆட்சி செய்தது என்று சொன்னாலும் இதற்கு லத்தீன் அமெரிக்க நாட்டுப்புறக் கதைக்களன்தான் அடிப்படை என்று சொல்வர்.

திட்டவட்டமாக 1925ஆம் ஆண்டு ஜெர்மன் வரலாற்றாய்வாளர், கலைவிமர்சகர் ஃபிரான்ஸ் ரோ (Franz Roh) என்பவர்தான் ‘மாய யதார்த்தம்’ என்ற பதத்தை உருவாக்கினார் என்று பதிவாகியுள்ளது.

மேஜிக்கல் ரியலிசத்தின் அடிப்படை என்பது யதார்த்தத்தை நிராகரிப்பதுதான். எனவே இதை மாற்று யதார்த்தம் என்றும் அழைக்கலாம்.

சரி எதுக்கு? எந்தத் தேவைக்காக இந்த மேஜிக்கல் ரியலிசம் அக்காலத்தில் உருவானது தெரியுமா? ஆதிக்கத்துக்கு எதிராகத்தான்.. ஜெர்மன், இத்தாலி, தென் அமெரிக்கா இங்கெல்லாம் சர்வாதிகார ஆட்சி கோலோச்சியது. ராணுவத்தின் உதவியுடன் அரசியல் எதிரிகள் கொல்லப்பட்டனர். எதிர்த்து நின்று ஜனநாயகத்துக்குக் குரல் கொடுத்த மக்கள் கொத்துக்கொத்தாகச் சாகடிக்கப்பட்டனர். அதிகார ஆதிக்கத்துக்கு எதிராக நின்ற கலைஞர்களுக்கு மரணம்தான் பரிசு. தமது கருத்தை எழுதாமல் சொல்லாமல் ஒரு எழுத்தாளனாய் எப்படி இருக்க முடியும்? சொல்லணும் தொடர்ந்து மக்களிடம் சொல்லணும், அதே நேரம் சாகக்கூடாது. எனவே மறைமுகமாக, பூடகமாக, மாயத்தோற்றத்தை மாந்திரீகப் பாவனையில் நாட்டுச் சூழலை சமூக நிலைமையைச் சொல்ல பதிவு செய்ய இந்த முறையைக் கண்டடைந்தனர். இது பழைய அவர்களின் நாட்டார் வழக்கில் இருந்தாலும் இதை ஒரு இஸமாக முன்னெடுத்தனர். இது யதார்த்த எழுத்தாக இருக்காது. ஆனால் யதார்த்தத்தைச் சொல்ல முயலும் வேறு ரூபத்தில் வேறு மொழிதலில்.

இந்த மேஜிக்கல் ரியலிஸம் எனக்கு எப்போது வந்தடைந்தது தெரியுமா? 1995இல் நவீன எழுத்தாளர் கோணங்கி தயாரித்த கல்குதிரை கொண்டு வந்த காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ் சிறப்பிதழ் மூலம்தான். 338 பக்கங்கள் 100 ரூபாய். இன்றும் கோணங்கி நவீன இலக்கியத்துக்குச் செய்த இம்மாதிரியான பங்களிப்பு மறுதலிக்க முடியாத இலக்கியப் பணி எனலாம். அந்த இதழில் மார்க்வெஸ் ஒரு மேஜிக்கல் ரியலிசம் கதை எழுதியிருப்பார். அது மாதிரி ஒரு புனைவைப் படிக்கவே இல்லை. அதில் அவர் பேட்டியும் உண்டு. அந்தக் கதையின் பெயர் வெளிச்சமும் தண்ணீர் மாதிரிதான். கிறிஸ்மஸ்க்கு ஸ்கூல் பாடத்தில் பாஸ் ஆகிட்டா படகு வேணும்னு கேட்பார்கள் அப்பாவிடம் பிள்ளைகள். அப்பாவும் சரி என்பார். அவர்கள் இருப்பது ஐந்தாவது மாடியில். லிப்ட் மூலம் எப்படியோ வீட்டு அறைக்குப் படகைக் கொண்டு வந்துட்டாங்க. கட்டிலின் கீழ் அந்தப் படகு இருக்கும். பின் இன்னும் சில பரீட்சையில் ஜெயிச்சுவிட துடுப்பு, முகமூடி, திசைமானி எல்லாம் வாங்கித் தருவார் அப்பா. ஒருநாள் பிள்ளைகள் வீட்டுக் கதவை மூடி.. எல்லாக் குண்டு பல்பையும் உடைப்பார்கள். அதிலிருந்து வெளிச்சம் கொப்பளித்து வீடு முழுக்க நிரம்பும். அப்பா சொல்வார், வெளிச்சமும் தண்ணீர் போலத்தான். இது ஒளிநீர் என்று. கட்டிலின் கீழ் உள்ள படகு மிதக்கும். வீட்டில் உள்ள பிரஷ் ஆணுறை எல்லாம் மிதக்கும் அந்த ஒளி நீரில். பிள்ளைகள் அதில் படகு ஓட்டுவார்கள். அதோடு விட்டா பரவாயில்லை. கதவுகள் வழியாக வெளிச்சம் கசிந்து ஐந்தாவது மாடியில் இருந்து தரைக்கு வழிந்து ஓடும். போலீஸ் ஓடி வந்து கதவை உடைத்தால் கொப்பளித்துப் பாயும் வெளிச்ச நீர்.. சமுத்திரமும் ஆறும் அற்ற மாடியில் வெளிச்சத்தைத் தண்ணீராக மாற்றிக் கப்பல் விடும் கலையை அறிந்தது இப்படித்தான் என்று முடியும். நாலு பக்கக் கதையைச் சுருக்கிச் சொல்லிட்டேன். இந்தக் கதையில் சில வரிகள் வரும். வேண்டியதைச் செய்யாமல் விரும்பியதைச் செய்வார்கள் பிள்ளைகள் என்றும் அவர்கள் வளர்ந்து வருவதற்கான நிரூபணம் இது என்றும் கூறுவார் அப்பா. வெளிச்சமும் தண்ணீர் மாதிரிதான் என்பது அந்த ரட்சகர் காதில் விழட்டும் என்பார் அம்மா.



மார்க்வெஸ், அவர் நாவலில் ரெமிடியோஸ் அழகி மோட்சத்துக்குப் பறந்து போனதாக எழுதியிருப்பார். ஒரு பேட்டியில் பத்திரிகையாளர் கேட்பார், இந்த எண்ணம் எப்படி வந்தது? காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ் சொல்வார், அவள் வீட்டை விட்டு ஓடிப்போய்விடுவாள். இது அவளின் பாட்டிக்குத் தெரியும், அதை எப்படி மறைப்பது என்று யோசிக்கும்போது பாட்டிதான் அவள் மோட்சத்துக்குப் பறந்துபோனதாகச் சொல்வாள். இதை எப்படி எழுதுவது என்று யோசிக்கும்போது... தோட்டத்துக்குப் போனேன். காற்று பலமாக அடித்துக்கொண்டிருந்தது. ஒரு நீக்ரோ பெண் துவைத்த துணியை உலர்த்திக்கொண்டிருந்தாள். ஆனால் அவளால் முடியவில்லை. காற்று துணியில் படபடவென அடித்துக்கொண்டிருந்தது. அப்போதுதான் ரெமிடியோஸ் காற்றில் பறக்க கம்பளம் வேண்டும், அது காற்றில் பறந்து செல்ல வேண்டும், அது அவளைத் தூக்கிச் செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தேன் என்கிறார். உங்கள் எழுத்தைப் பற்றி விளக்க ஒரு வரி சொல்லுங்களேன் என்றவுடன்

ஆதிக்கத் தனிமை வாசத்தின் கவிதை என்பார் காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ்.

அடுத்து நம்மூருக்கு வருவோம்.. எஸ்ராவின் தாவரங்களின் உரையாடல், ஜெயமோகனின் விஷ்ணுபுரம் மற்றும் நாகம் இந்த வகைப்பாட்டில் வரும். நான் எழுதிய தாமரைக்காடு என்ற சிறுகதையும் மேஜிக்கல் ரியலிசம் பாணியிலானதுதான். நம்ம சீனியர் பிரமிள் எழுத்தில் கூட மேஜிக்கல் ரியலிசம் இடம்பெற்றுள்ளது.

அ.மார்க்ஸ் ஒரு கட்டுரையில் பிரமிள் எழுதிய அசரீரி என்ற கதையை விவரித்து அதில் எப்படி மேஜிக்கல் ரியலிசத்தைப் பிரமிள் கையாண்டார் எனச் சொல்லியிருப்பார். அந்த வரிகள் நாம் இந்த இஸத்தைப் படைப்பின் வழியாகப் புரிந்துகொள்ள உதவும். அக்கட்டுரையில் அ.மார்க்ஸ் எழுதுவார்..

'அசரீரி' கதையில் ஒரு பார்ப்பனப் பெண் ஒரு தலித் இளைஞனைக் காதலிக்கிறாள். பார்ப்பனத் தந்தை அதற்கு எதிர்ப்பு. "அவன் ஒரு நல்ல டாக்டர், சிறந்த சர்ஜன், 'பெர்ஃபார்மன்ஸ்' பத்தாதா?" என்கிறாள் மகள். "பெர்ஃபார்மன்ஸ் முக்கியமல்ல, Birth தான் (பிறப்பு) முக்கியம்" என்று சொல்லும் தந்தை, "நேக்கு இதெல்லாம் புதுசில்லே, 'ட்ரடீஷன்' இல்லாம 'பெர்பார்மன்ஸ்' மட்டும் வச்சுண்டு என்ன பண்ணுவே?" என்று கோபப்படுகிறார். "'சர்ஜரி'யில் அவன் டாப் என்றால் அதற்குக் காரணம் அப்பன் பன்னியை அறுத்த 'ட்ரடீஷன்'" என்று சொல்லவும் அவர் தயங்கவில்லை.

கதை இதே திசையில் செல்லவில்லை, வேறொரு தளத்துக்கு 'எஸ்கேப்' ஆகிறது. அதி நவீனமான கணினி ஒன்றின் மூலம் திருமணத் தகவல் ஆலோசனை மையம் ஒன்று செயல்படுகிறது. வந்திருந்த விண்ணப்பங்களின் தகவல்கள் கணினியில் பதிவு செய்யப்படுகின்றன. "அய்யர், கவரநாயுடு, சைவ வேளாளர், சௌராஷ்டிரா.." என வரிசையான சாதி விவரங்களை ஓரிடத்தில் பொறுக்க இயலாத கணினி கோபமாய், "கோத்தா டேய், லவ்டேகா பால்" என்கிறது.



இன்னொரு சந்தர்ப்பத்தில் அதே கணினி தலித்திற்குப் பெண் கொடுக்க மறுக்கும் பார்ப்பனத் தந்தையின் மூளையில் ஒரு சைகிக் சர்ஜரி செய்கிறது. பிரமிள் எழுதுகிறார், "சுவர்கள் சுருங்கி, அருவருப்பான காலகாலங்களின் சீழ்த்திரளைக் கட்டி நாறிக்கொண்டிருந்தது வேணுகோபாலின் ஹ்ருதயக் குகை, 'சீ' என்றபடி அதன் புலத்தை விட்டுப் பின்வாங்கி வெளியேறுவதற்காகத் தலை நிமிர முயன்றார். 'நான் பிராமணன், இது என் ஹ்ருதயமல்ல, இது நரகம்.'"

இப்படிப் போகிறது கதை.

ஸயன்ஸ்ஃபிக்ஷன், மாஜிக்கல் ரியலிஸ உத்திகளையெல்லாம் பயன்படுத்தி எழுதிவருகிற நமது நவீன எழுத்தாளர்கள் யாருக்கேனும் இப்படி வரலாற்றுச் சுவடு பதிந்து எழுதும் எண்ணம் தோன்றியதா? வரலாறு சுமத்திய மனிதத் துயரங்கள் இவர்களின் கண்களில் ஏன் விழவில்லை? வரலாற்றிலிருந்து விலகி நிற்பதன் மூலம் இவர்கள் யாருக்குச் சேவை செய்கின்றனர்?

என்று அவருக்கே உரிய கேள்வியோடு அ.மார்க்ஸ் முடிக்கிறார்.

மேஜிக்கல் ரியலிசக் கூறு கொண்ட கவிதை ஒன்றை இங்கு எடுத்துக்காட்டாய்ச் சொல்லலாம். சட்டென இப்போது நினைவுக்கு வருவது... தென்பாண்டியன் என்ற கவிஞர் எழுதிய எளிய கவிதையொன்று.

பறவை ஒன்றை வரையத் துவங்கினேன்
வரைந்து முடிந்ததும்
அது பறந்துவிட்டது
மீண்டும் ஒரு பறவையை
வரைந்தேன்

அதுவும் பறந்துவிட்டது
நான் வரைந்துகொண்டே இருந்தேன்
அவைகள் பறந்துகொண்டே இருந்தன
இறுதியாக மரம் ஒன்றை
வரைந்து முடித்தேன்
பறந்துபோன அத்தனை
பறவைகளும் வந்து
அமர்ந்துகொண்டன.

இப்போது மேஜிக்கல் ரியலிசத்தின் நிலவரம் என்ன?

கருத்துச் சுதந்திரமும் எல்லாப் போராட்ட வழிமுறைகளும் ஜனநாயகப் போக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியும் நிலவும் இக்காலத்தில் கருத்தைச் சொல்ல ஆதிக்கத்துக்கு எதிராக எழுத மேஜிக்கல் ரியலிசத்தின் தேவை இல்லை என்பது ஒரு வாதம்.

மேஜிக்கல் ரியலிசப் படைப்புகள் யாராவது வலிய எழுதினால் அது நமது வாழ்க்கையோடு ஒட்டியதாக இல்லை, அது திணிப்பாகவே இருக்கும் என்று அசோகமித்திரன் 96 பேட்டியின்போது சொல்லியிருந்தார்.

இப்போது தொடங்கிய இடத்துக்கு வருகிறேன்... நான் சுஜாதா கதையைச் சொல்லி முடித்ததும், திருப்பூர் கிருஷ்ணன் சொன்னார் சூர்யா, கணையாழியில் ஒரு தெலுங்கு மொழிபெயர்ப்புச் சிறுகதையைப் பத்து வருடத்துக்கு முன் படித்தேன். எழுதியவர் பெயர் நினைவில் இல்லை. கதை இதுதான்.

ஒரு அதிகாரி பணி ஓய்வு பெறுவார். அந்த விழாவுக்கு மனைவியை அழைத்துச் செல்வார். விழா முடிந்து வெளியேறும்போது அந்த அதிகாரம், செருக்கு, பெருமிதம் போய் அவர் தமது உயரத்தில் கொஞ்சம் குள்ளமாகி இருப்பார். இப்போது பியூன் தெனாவாட்டா பார்ப்பான். இன்னும் கொஞ்சம் குள்ளமாவார். கடைசியா கார் ஓட்டுபவனின் நக்கல் பார்வையால் இன்னும் குள்ளமாகி ஒரு குள்ளனைப் போல் தாவிக் குதித்துக் காரில் ஏறுவார். வீட்டுக்கு வந்ததும் சேரில் இருக்கும் அந்தக் குள்ளனை அதாவது கணவனைக் கேவலமா பார்ப்பாள் மனைவி. டைனிங் டேபிளில் இருக்கும் சாப்பாட்டைச் சாப்பிட முடியாமல் சேர் மேல் ஏறி டேபிளுக்குக் குதிப்பார். இப்போது அவர் பொம்மை போல ஆகியிருப்பார். மனைவியிடம் கையெடுத்துக் கெஞ்சுவார்.. ஆயினும் அவள் அந்தப் பொம்மையை எடுத்து ஷோகேஸில் வைத்துப் பூட்டிவிட்டு அந்தக் கண்ணாடியில் தமது நெற்றிக் குங்குமத்தைச் சரி செய்தபடி சிரிப்பாள்... என்று முடித்தார்.

ஒரு ஆணின் அதிகாரம் அத்துமீறல் போன்றவற்றின் எல்லை பற்றியும் அதிகாரம் பறிக்கப்படும்போது மனித இருப்பு பற்றியும் மீண்டும் அதிகார சுழற்சி மனைவியிடமிருந்து எப்படி தொடங்குகிறது என்பதைப் பற்றியும் அதனூடே எதைப் பற்றியும் கவலைப்படாமல் குங்குமத்தைச் சரி செய்யும் கலாச்சார விழுமியங்கள் குறித்தும் சொல்ல ஒரு கணவன் பொம்மையாக மாறுவது பற்றிய மேஜிக்கல் ரியலிசக் கதையாகவே தோன்றியது. இது வலிய எழுதப்பட்டது இல்லை. ஆனால் அதிகாரத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் வலியும் அதன் எதிர்வினையும் இதில் பதிவாக அவர் குள்ளமாகிப் பொம்மையாவது அவசியம் என்றே தோன்றியது.

இக்கட்டுரைகளை வாசித்த நீங்கள் இப்போது சட்டைகளையெல்லாம் உரித்துவிட்டுப் புரிதலில் வளர்ச்சி அடைந்த முழுமையான பாம்பாக இலக்கியத்தில் சீற்றத்தோடு இருப்பீர்கள், எந்தத் தவளை விமர்சனக் கத்தலும் உங்கள் முன் நிற்காது. வாழ்த்துக்கள். தொடர் முடிந்தது.

நண்பர்களே.. எளிய முறையில் இலகுவான மொழியில் இஸங்களைப்பற்றிய இந்த அறிமுகத் தொடர் இத்துடன் இங்கு நிறைவடைகிறது. இன்னும் மினிமலிஸம், ஸ்ட்ரக்சுரலிசம், எக்ஸ்பிரஷனிஸம் என்ற மூன்று இஸங்கள் குறித்தான விடுபட்ட கட்டுரைகளுடன் இந்தத் தொடரை நூலாக வரும் செப்டம்பர் 28ஆம் தேதி படைப்பு குழுமம் வெளியிடுகிறது. அதில் படித்துக்கொள்ளலாம். மேலும் எழுத வருபவர்களுக்கான ஒரு அறிமுக நூலாக இது இருக்கும் என நம்புகிறேன்.

ஆண்டன் பெனி



# தாயக்கட்டையும் வில்லுப்பாட்டும்

“மனைவியின் பேச்சுக்கெல்லாம் ‘ஆமாம்’ சொல்லிப் பழகிய யாரோதான் வில்லுப்பாட்டை உருவாக்கியிருக்க வேண்டும்” என்றேன் அவளிடம்.

கச்சேரியில் எசப்பாட்டாக ‘ஆமாம்’ சொல்கிறவள். இவளே நிர்வாகியும்கூட. இவள் மீது எனக்கு ஒரு ஆர்வம் அல்லது ஈர்ப்பு வந்திருக்கிறது. சத்தியமாக இது காதல் இல்லை என்பதை, அது ஏற்பட்டபோதே என் வலது கையால் என் இடது கையில் சத்தியம் செய்திருந்தேன். ஆகவே இந்த உரையாடல் இவளுக்காகவே என்னால் எழுதப்படுகிறது.

நான் இப்படிச் சொன்னதும் அவளுக்குக் கோபம் வந்துவிட்டது “இல்லை. வேட்டைக்குச் சென்ற பாண்டிய மன்னன் அலுப்பு தெரியாமல் இருக்க, தன் வில்லை மல்லாக்கக் கிடத்தி அம்புகளால் இசைத்த வடிவமே எங்களோட வில்லிசை” என்றாள்.

“ஒருவேளை பாண்டிய மன்னன் மனைவிக்குப் பயந்து...” என்னதான் அவளை வெறுப்பேத்த, அதன் மூலம் அவளது கவனத்தை ஈர்க்க அப்படிச் சொன்னாலும், மதுரையிலிருந்து நாஞ்சில்நாடு வரைக்கும் பாவைக்கூத்துக்கு அடுத்தபடியாக வில்லுக் கச்சேரிதான் பிரதானம்.

சுந்தரம் ஊர் நாட்டாமையாக இருந்தாலும், ராசாத்தி மதினி அடித்த அடி கொஞ்சம் பலமாக ஆனதால் அவனால் இன்று வரமுடியவில்லை. அவன் இடத்தில் இப்போது இவளிடம் இருந்து கொண்டிருக்கிறேன். அவன் வரமுடியாமல் போனதுக்கும் நானே காரணம். அதைப் பிறகு சொல்கிறேன். கச்சேரிக்கு வர்ற பெண்களிடம் நாட்டாமை இல்லாத ஒருவன் இப்படிச் சகசமாகப் பேசுவது வரலாற்றில் இல்லாத ஒன்று. என் சூழ்ச்சியால் அதைச் சாதித்திருப்பது எனக்குப் பெருமையும்கூட.

ஓவியங்கள்: அழ.ரஜினிகாந்தன்

இதையெல்லாம் விட, என் சிறுவயதை இசையால் நிரப்பிய உன்னதக் கலை. அம்மன் கோவில் திடல்ல... ‘தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட ஆமாம் வில்லினில் பாட வந்தருள்வாய் கலைமகளே..’ பாடும்போதே கேக்குறவங்க தலையும் ஆட ஆரம்பிக்கும். செண்பகவல்லியம்மனே வெளியில வந்து கொஞ்ச நேரம் கச்சேரி கேட்டுட்டுப் போகும்னு தவசித் தாத்தா சொல்லுவாரு. அதிலிருந்து ஒரு பக்தி கலந்த பயம் எனக்கு உண்டு.

எங்க ஊர்த் திருவிழாவுக்கு, அதுவும் பட்டப்பகல்ல, சுந்தரம் வில்லுக் கச்சேரி ஏற்பாடு செய்ய... என் அய்யன் அவனிடம்... “இதையே கொஞ்சம் தள்ளி வயக்காட்டுல தட்டுனா காக்கா குருவி ஓட்டலாம் போலயே... ஒரு நாளுக்கு எம்புட்டுச் செலவாகுமாம்?”னு அவன்கிட்டயே கேட்டுட்டாரு.

“இந்தக் குசும்புக்கு உம்ம காதுல உக்காந்துதான் வில்லத் தட்டணும்... பெரிய்யா” கடுப்புல சொன்னான்.

இருந்தாலும், உடுக்கை, தாளம், குடம், கட்டைனு வரிசையா அடிச்ச அடியில, அதுவும் அந்தச் சலங்கைச் சத்தத்துல மந்தைப் பிஞ்சை கம்மங் கருது மேல நின்ன குருவியெல்லாம் ஓடிருச்சி.

ராசாத்தி மதினி கொலுசு போட்டு நடக்கும்போதெல்லாம் எனக்கு வில்லுக் கச்சேரி நெனப்பு வந்துரும். சுந்தரத்துக்கு வில்லுக் கச்சேரி மேல பிடிப்பு வந்ததுக்கு அதுவும் கூட காரணமா இருக்கலாம். அவன் ஒரு வருசம் முன்ன பொறந்ததுனால அண்ணனாகிட்டான். ஆனாலும் ஒருநாளும் அண்ணன்னு கூப்பிட்டதில்லை. அவனைக் கட்டிக்கிட்டதால இவளை மதினின்னு கூப்பிட வேண்டியதாகிடுச்சி, மத்தப்படி அவ என்னையவிட வயசுல சின்னவ.

கிராமத்து ஆம்பளைங்களுக்கு சினிமாவுல வர்ற சாவித்திரி சரோஜாதேவிகளைக் கண்ணால பார்க்க ஏலாது. அதனாலயே பாவக்கூத்துக்கு வர்ற பொம்பளை சாவித்திரியாவும் வில்லுப்பாட்டுக்கு வர்ற பொம்பளை சரோஜாதேவியாவும் தெரிஞ்சது.

“நாட்டாமையா பொறுப்பேத்தா நாலு நல்ல விசயங்களை கண்ணுல பார்க்கிறதுக்குத்தானப்பா” முன்னாள் நாட்டாமை லட்சுமணன் மாமா ஒரு பஞ்சாயத்தப்போ சொன்னதும் இவனுக்குச் சாதகமா போயிருச்சி. இப்படியான கச்சேரிக்காகவே திருவிழா நடத்தினான்.

கடந்த மூணு வருசமா இவன்தான் நாட்டாமை. அந்தச் சனங்க வந்துட்டுப் போற வரைக்கும் கூடவே இருப்பான். ராசாத்தி மதினி பத்தவச்ச அடுப்பை அணையாமப் பார்த்துக்கணும். அவங்களுக்கு சாப்பாடுல இருந்து, டீ தண்ணி வரைக்கும் இவன் வீட்டுல இருந்துதான் போகும். அதுலயும் கச்சேரி பொம்பளைங்கள்ல இவனுக்குப் பிடிச்சவங்களுக்கு ரெண்டு கரண்டி நெய் ஊத்தி, கறியை அள்ளி வைப்பான்.

இதையெல்லாம் பார்த்த சேகர் பய “அடுத்த நாட்டாமை நான்தாம்ல. இல்லனா இந்தக் கட்டை வேகாது” என்றான் ஒருமுறை என்னிடம்.

“அவன் பொண்டாட்டிக்கு விசயம் தெரிஞ்சா அடியோட போயிரும். உம் பொண்டாட்டி சங்கை அறுத்துருவாளேடா?” என்றேன். நான் சொன்னதும் அவன் பயந்தது நெசம்தான். ஆனாலும் உள்ளுக்குள் ஆசையை விடாம வச்சிருந்தான்.

ஆனால் சுந்தரம் எதுக்கும் தயாராக இருந்தான். வீட்டுக்கும் கச்சேரிக்காரவுக தங்கியிருக்கும் கோயில் மண்டபத்துக்கும் ஆலாய்ப் பறந்துகொண்டிருந்தான். எனக்கும் நாட்டாமை ஆகணும்னு ஆசையிருந்தாலும், இருப்பு வேலைக்காகக் கேரளா போன எடத்துல, வெள்ளைத் தோலுக்கு மயங்கி அங்கனயே கட்டிக்கிட்டதால, காடு ஆறு மாசம் வீடு ஆறு மாசம்னு கேரளாவுக்கும் இங்கைக்குமா வாழ வேண்டியதா போச்சி.

இவனுங்களோட நாட்டாமைத் தகுதிப்பட்டியல்ல நான் இல்லவே இல்ல. ஆனாலும் இந்தப் பதவி பேர்ல இவனுங்க ஆடுற ஆட்டம் தாளமுடியாமலும், பதவியில இல்லாமலும் சாதிக்க முடியும்கிற வைராக்கியம் எனக்குள் இருந்தது.

அதன்படி... சுந்தரம் வீட்டுக்குப் போனேன்.

“ஏம்ப்பா... போனவாட்டி, வில்லுக் கச்சேரிக்காரவுங்க சலங்கையைத் தொலைச்சிட்டுப் போயிட்டாங்களோ?” கச்சேரிக்காரிக்குக் கோழி வெட்டிக்கிட்டு இருந்தவன் ஓங்குன அருவாளோட என்

பக்கம் திரும்பி, "ஏன் கேக்குற?" என்றான்.

"உம் பொண்டாட்டி அதக் கால்ல மாட்டிக்கிட்டுத் தெக்கையும் வடக்கையும் வில்லுக்கச்சேரி பண்றா போலிருக்கு?"

"அத அவகிட்ட கேளு... அதுக்குப் பெறகும் நீ உசுரோட இருந்தா, சொல்றேன்."

அவனுக்கு எதவச்சி கேலி பேசினாலும் பொறுத்துக்குவான். இன்னைக்கு வில்லுக் கச்சேரி பத்திப் பேசினா பொறுக்க முடியாது.

இவளுக்காகவே, டவுன்ல கச்சேரி பார்த்துட்டு அங்கேயே அட்வான்ஸ் கொடுத்திருக்கிறான்... இது யாருக்கும் தெரியாது. போனமுறை திருவிழா கச்சேரிக்கு வந்தப்போ, இவளுக்கு மட்டும் ஜிஞ்சர் சோடா வாங்கித் தந்தப்பதான் பயபுள்ள என்கிட்ட மாட்டிக்கிட்டான்.

அதோட முடிச்சிருக்கணும்... இந்தத் திருவிழாவுக்கும் அட்வான்ஸ் கொடுக்க ஆரம்பிக்கும்போது... ஊரே கரகாட்டம் பக்கம் சாய, இவன் பிடிவாதமா வில்லுக் கச்சேரியில இருந்தான். இவளோட வீட்டுக்கே போயி அட்வான்ஸ் கொடுத்ததை மாத்த முடியாதுனு பிடிவாதமா இருந்தான். அப்பதான் எனக்கும் இவளோட பக்கமா கவனம் திரும்பிச்சி.

"இந்த வாட்டி திருவிழாக்கு கச்சேரி இல்லனா நான் நாட்டாமையிலேருந்து விலகிக்கிறேன்." சுந்தரம் சொன்னதும், உடனே தங்கராசு மாமா... "சரிடே நாட்டாமைக்கு வேற ஆளப் போட்டுக்கலாம்" என்றார்.

பதட்டமானான். ஆனாலும் அழுது பொறண்டு சம்மதிக்க வச்சிட்டான். இப்ப கோழிக் கொழம்பு ரெடியாகுது. மணியண்ணன் கடைக்கு வாய்மொழி உத்தரவு வேற, அவளுக்கு என்ன கேட்டாலும் தரணும்னு. பாவி மகெ சிந்தால் சோப்பே நாலு வாங்கியிருக்கா. குட்டிக்குறா பவுடர் டப்பா மூணு. இப்படி யாவாரம் களைகட்டினா மணி அண்ணன் நாடார் கடைக்குப் போட்டியா வளர்ந்துருவான் போலயேன்னு நினைச்சிக்கிட்டேன்.

எல்லாக் கலர் ரிப்பன்லேயும் ரெண்டு ரெண்டு கிழிச்சிருக்கா. போற போக்கப் பார்த்தா இவளை மடக்கிருவான் போலயேன்னு தோண, எனக்குள்ள இருந்த நாலு நம்பியார் ஆறு அசோகன் பத்து பி.எஸ் வீரப்பா வெளியில வந்தாங்க.

கோழி வெட்டுறதுல இவன் கவனமா இருக்கும்போது, மதினி காதுல நடக்குற விசயத்தைப் போட்டுவிட்டேன். அதுவும் ஆதாரத்தோட.

குழம்புக்கு மசாலா அரைச்ச கையோட,

"தானதந்தத் தோடு ஏழு

சந்தங்களும் தாளத்தோடு

தாள பம்பை உருமி தக்கை

துந்துபியோடு ஆமாம்

துந்துபியோடு அத்தனையும் மேளத்தோடு," வீட்டுல மதினி கச்சேரி நடத்த, கறிக் குழம்பு கொதிக்கவேயில்ல. அவனும் வீட்டவிட்டு இன்னும் வெளிய வரவேயில்ல.

சைக்கிளை டவுனுக்கு விரட்டினேன். பரோட்டா, சால்னா, கறித் தொக்கு பார்சல் கட்டிக்கிட்டு நான் வர்றதுக்கும்... இவ வெளியில வர்றதுக்கும் சரியா இருந்தது.

சுந்தரம் அடிபட்டு வீட்ல கிடக்கிற விசயத்தைக் கொஞ்சம் கூட்டிக் குறைச்சிச் சொல்லி வாங்கி வந்ததைக் கொடுத்தேன்.

அன்னைக்குக் கச்சேரி முழுக்க, பாட்டுக்கு நடுவால அவ என்னைப் பாத்தே 'ஆமாம்' சொல்ற மாதிரி இருந்தது.

அந்தத் தைரியத்துலதான் நான் ஆரம்பத்துல எழுதியிருக்கிறத இப்ப பேசிக்கிட்டு இருக்கேன்.

"நீங்களும் பாண்டிய மன்னரோ?" என்றாள்.

"ஆமா. ஆனா பொண்டாட்டிக்குப் பயப்பட மாட்டேன்."

"பொண்டாட்டிகிட்ட 'ஆமாம்' சொல்லாதவங்களுக்கு எங்க கச்சேரி பிடிக்காது போலயே?" என்னை மடக்கினாள்.

பேச்சு சூடு பிடிக்கிறப்போ, என்னிடம் "உம் பொஞ்சாதி உன்னைத் தேடுறா பாரு" நடுவால புகுந்து சேகர் கெடுத்தான்.

அடுத்த நாட்டாமை ஆகுறதுக்கான வெளிச்சம் அவனோட மொகத்தில் தெரிந்தது.

மனசுக்குள் தாயக்கட்டையை சேகருக்கு எதிராக இப்போதே உருட்ட ஆரம்பித்தேன்.

தி.கலையரசி



# டாக்டர் முத்துலட்சுமி அம்மையார்

இந்தியாவில் இருவகையான பெண் சமூகங்களை இன்றளவும் பார்க்க முடிகிறது. ஒருபுறம் கல்வி, பொருளாதாரம், உரிமையென அனைத்திலும் ஆண்களுக்கு நிகராகக் கோலோச்சும் பெண்களும், மறுபுறம் கல்வியறிவு மேம்படாத சமூகங்களில் கீழ்த்தரமாக ஒடுக்கப்படும் பெண்களும் வாழ்கிறார்கள். இரண்டாவது வகைக்கு மணிப்பூரில் பெண்களுக்கு நிகழ்ந்த அவலமான வன்முறைகளே துயரம் மிகுந்த சான்று. ஒவ்வொரு முன்னேற்றப் படியிலும் பெண்கள் தலைமையேற்றுப் புரட்சி செய்த வரலாற்றை இந்திய வரலாற்றின் பொன்னேட்டில் காணலாம்.

இந்தக் காலத்திலும் பெண்களுக்கெதிரான சம்பவங்கள் நடந்தேறும்போது, கல்வி படராத காலத்தில் பெண்கள் எத்தகைய சவால்களை எதிர்கொண்டிருப்பார்கள் என்று நினைத்தால் மனம் கலங்குகிறது. ஆண்களுக்கு மத்தியில் ஒரே ஒரு பெண் மட்டும் மருத்துவக் கல்லூரியில் பயின்ற நிலையில் எத்தனை சவால்கள் எழுந்திருக்கும்.. அப்படி தனி ஒரு மாணவியாக தமிழகத்தின் மருத்துவக் கல்லூரியில் அடியெடுத்து வைத்தவர்தான் முத்துலட்சுமி ரெட்டி.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திருக்கோகர்ணம் என்ற இடத்தில் 1886ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் தேதி பிறந்தார் முத்துலட்சுமி ரெட்டி. இவரது தந்தை நாராயணசாமி பிராமணர். தாய் சந்திரம்மாள் இசை வேளாளர். அந்தக் காலத்திலேயே சமூகத்தின் கடும் எதிர்ப்பைக் கடந்து கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள்.

வீட்டில் இருந்து படித்தே மெட்ரிக்குலேசன் தேர்வில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றார். பெண் என்ற ஒரே காரணத்திற்காக மன்னர் கல்லூரியில் சேர இடம் வழங்கப்படவில்லை. அவர் சேர்ந்து படிப்பதற்குப் பழமைவாதிகள் கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவித்தார்கள். அவரின் கல்வி ஆர்வத்தை அறிந்த புதுக்கோட்டை மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் ராஜா கல்வி உதவித்தொகை அளித்து உயர்கல்வி பயில இடமும் தந்து ஆதரித்தார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் அறுவை சிகிச்சைத் துறையில் படித்த முதல் மாணவியாகவும், ஒரே மாணவியாகவும் அவர் இருந்தார். அறுவை சிகிச்சைப் பிரிவில் முதலாவது மாணவியாகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப்பதக்கமும் வென்றார். அதுமட்டுமல்லாமல் பெண்களுக்கு அதிகார பலம் கிடைக்கவும் முன்னேற்றம் அடையவும் போராடினார். தன் சமூக மற்றும் மருத்துவச் சேவைக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையுடன் டாக்டர் சுந்தர ரெட்டி என்பவரை 1914ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார்.



துறைசார்ந்த பணிகளைத் தாண்டி, பெண்கள் வாழ்வுரிமைகளுக்கான இயக்கங்களில் அன்னி பெசன்ட் அம்மையாரின் வழிகாட்டுதலின்கீழ்ப் பங்கேற்றுப் போராடினார். இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் பெண் தலைவர், சென்னை மாநகராட்சியின் முதல் பெண் துணைமேயர், சென்னை மாகாண சட்டசபைக்குத் தேர்வு செய்யப்பட்ட முதல் பெண்மணி எனப் பல்வேறு பதவிகளில் இருந்து உழைத்தார்.1925ஆம் ஆண்டு சட்டசபை துணைத்தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குழந்தைகள் திருமணத் தடுப்புச் சட்டம், கோவில்களில் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், பாலியல் தொழில் தடுப்புச் சட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுக்கும் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம் போன்றவற்றை உருவாக்குவதில் பெரும் பங்கினை வகித்தவர் டாக்டர் அவர்கள்.

பெண்களின் திருமண வயதை 14ஆக உயர்த்தக் கோரும் மசோதா குறித்துச் சட்டமன்றக் கவுன்சிலில் விவாதம் நடந்தபோது, குழந்தை திருமணத்தால், குழந்தைப் பருவ மனைவி, குழந்தைப் பருவத் தாய், குழந்தைப் பருவக் கைம்பெண் எனத் துயரங்கள் பெண்கள் வாழ்வில் தொடர்கதையாக உள்ளது என்று பேசினார்.

சிறுமிகள் மற்றும் இளம்பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கக் கூடிய தேவதாசி நடைமுறையை ஒழிக்கும் சட்டத்தை நிறைவேற்றுவதில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி முன்னோடியாகத் திகழ்ந்தார். பின்னர் 1947இல்தான் கடும் எதிர்ப்பு மற்றும் போராட்டத்திற்குப் பின் அது சட்டமாக்கப்பட்டது. “தேவதாசி நடைமுறையானது உடன்கட்டை ஏறுதலைவிட மிக மோசமானது” என்றும் “மதத்தின் பெயரால் நடைபெறும் குற்றச் செயல்” என்றும் எதிர்க்குரல் கொடுத்தார். தேவதாசிகளைப் பாதுகாப்பதற்காக அடையாறில் தனது இல்லத்தில் 1931இல் அவ்வை இல்லத்தைத் தொடங்கி அவர்களைப் பாதுகாத்தார்.

தங்கை புற்றுநோயால் மரணம் அடைந்ததை அடுத்து, 1954இல் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையைத் துவங்கினார்.

1956இல் அவருக்குப் பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது. 1947ஆம் ஆண்டு செங்கோட்டையில் முதலாவது சுதந்திரக் கொடியேற்றம் நடைபெற்றபோது அதில் சேர்ப்பதற்காக இவரது பெயரும் தேர்வு செய்யப்பட்டது. அவரின் பிறந்தநாள் நூற்றாண்டில் தமிழக அரசு தபால் தலையை வெளியிட்டது. தனது 81வது வயதில் 1968ஆம் ஆண்டு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மறைந்தார்.

அன்னிபெசன்ட் அம்மையார் மற்றும் மகாத்மா காந்தியின் சித்தாந்தங்களால் தீவிரமாக ஈர்க்கப்பட்டிருந்தார். “முத்துலட்சுமி ரெட்டி ஒரு சமூகப் புரட்சியாளர்” என்ற தலைப்பில் திருச்சியைச் சேர்ந்த வரலாற்றுத்துறை ஆய்வாளர் எம்.எஸ்.ஸ்னேகலதா எழுதிய புத்தகத்தில், “உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டபோது, சென்னை சட்டமன்றக் கவுன்சில் உறுப்பினர் பதவியில் இருந்து முத்துலட்சுமி ரெட்டி விலகினார்” என்று பதிவு செய்துள்ளார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் பிறந்தநாளில் அவருக்காக doodle ஒன்றைக் கூகுள் உருவாக்கியது குறிபிடத்தக்கது. அவரின் உழைப்பும் சமூகப் பொறுப்பும் இந்திய வரலாற்றுத் தூண்களில் பலமான ஒன்றாக என்றும் கருதப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# படைப்பு நூல் நிலையம்




## கிடைக்கும் நூல்கள்

- படைப்பு பதிப்பக நூல்கள்
- வம்சி பதிப்பக நூல்கள்
- அகநி பதிப்பக நூல்கள்
- சுவடு பதிப்பக நூல்கள்
- யாளி பதிப்பக நூல்கள்
- வாசகசாலை பதிப்பக நூல்கள்
- பொள்ளாச்சி இலக்கிய வட்ட நூல்கள்
- வேரல் பதிப்பக நூல்கள்

**நூல்கள் பெற: 73388 97788 / 73388 47788**